# பயிற்சித் தமிழ்
## (PRACTICAL TAMIL)

முதலாம் பாகம்

OFFICE OF THE REGISTRAR ...
16 JUL 1955
MADRAS

ஆசிரியர் :

தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை

1955

வெளியீட்டுரிமை: மு. திருநாவுக்கரசு
செவ்வேளகம்,
தென்புலோலியூர்,
பருத்தித்துறை, இலங்கை

முதற் பதிப்பு: ஏப்பிரல், 1955

P31,J
N55·1

விலை ரூபா மூன்று

68376

அச்சிட்டோர்:
சாந்தி பிரஸ், 135, பவளக்காரத் தெரு, சென்னை - 1

# முகவுரை

தமிழ் மொழியைப் பயில்பவர்களுக்கென—ஆங்கில இலக்கணிகள் அமைப்பைத் தழுவி—புதியதொரு முறையிலே ஆக்கப்பட்டுள்ளது இந்நூல். ஆங்கிலத்தில் மாத்திரம் பயிற்சியுடையோரும் தமிழ் மொழியின் மரபினை இலகுவாக உணர்ந்து கொள்ளத் தக்கவகையில் ஆங்கில விளக்கக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

இக்காலத்துத் தேர்வுகளுக்கு ஆயத்தஞ் செய்வோருக்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது எமது நம்பிக்கை. இந்நூலின்கண் செய்யப்படக்கூடிய திருத்தங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

வெளியீட்டாளர்.

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| **I.** | **எழுத்து.** | | **பக்கம்** |
| i. | தமிழ்மொழி எழுத்துக்கள் | ... | 1 |
| ii. | வடமொழி எழுத்துக்கள் | ... | 2 |
| iii. | மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் | ... | 2 |
| iv. | மொழிக்கு இடையில் வரும் எழுத்துக்கள் | ... | 4 |
| v. | இனவெழுத்துக்கள் | ... | 4 |
| vi. | மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்கள் | ... | 5 |
| vii. | மொழிக்கு முதலிலும் இடையிலும் ஈற்றிலும் வரும் வடமொழி எழுத்துக்கள் | ... | 5 |
| viii. | ரகர லகர வடமொழிச் சொற்களின் தமிழாக்கம் | | 7 |
| ix. | ணகர னகர வேறுபாடுகள் | ... | 10 |
| x. | ரகர றகர வேறுபாடுகள் | ... | 14 |
| xi. | லகர, ழகர, ளகர,வேறுபாடுகள் | ... | 23 |
| xii. | பொருட்பேதமின்றி வழங்கும் ழகர ளகரங்கள் | | 35 |
| xiii. | பயிற்சி | ... | 35 |
| **II.** | **சொல்.** | | |
| i. | எதிர்ப்பாற் சொற்கள் | ... | 39 |
| ii. | எதிர்ப்பொருட் சொற்கள் | ... | 41 |
| iii. | ஒருபொருட் பன்மொழி | ... | 44 |
| iv. | பலபொருள் ஒருமொழி | ... | 50 |
| v. | வழூஉச் சொற்கள் | ... | 64 |
| vi. | மயக்கம் விளைக்கும் சொற்கள் | ... | 71 |
| vii. | இந்துஸ்தானிச் சொற்கள் | ... | 76 |
| viii. | போர்த்துக்கேயச் சொற்கள் | ... | 81 |
| ix. | மரபுச் சொற்கள் | ... | 81 |
| x. | பயிற்சி | ... | 92 |
| **III.** | **சொற்றொடர்** | | |
| i. | மரபுச் சொற்றொடர் | ... | 95 |
| ii. | உவமைச் சொற்றொடர் | ... | 121 |
| iii. | பயிற்சி | ... | 140 |

# பயிற்சித் தமிழ்

## 1. எழுத்து

### (அ) தமிழ் மொழி எழுத்துக்கள்

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ | த் |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ | ப் |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ | ன் |

## (ஆ) வடமொழி எழுத்துக்கள்

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ | ஜெ | ஜே | ஜை | ஜொ | ஜோ | ஜௌ | ஜ் |
| ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ | ஸெ | ஸே | ஸை | ஸொ | ஸோ | ஸௌ | ஸ் |
| ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ | ஷெ | ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷௌ | ஷ் |
| க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ | க்ஷெ | க்ஷே | க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ | க்ஷ் |
| ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ | ஹெ | ஹே | ஹை | ஹொ | ஹோ | ஹௌ | ஹ் |

மேலே, "அ"விற் காட்டப்பட்டிருக்கும் எழுத்துக்களே தமிழ் மொழிக்குரிய—தமிழ் நெடுங் கணக்கு—எழுத்துக்களாம். "ஆ"விற் காட்டப்பட்டிருக்கும் எழுத்துக்கள் தமிழ்மொழிக்குரிய எழுத்துக்களல்ல. ஆயினும், இன்றைய உலக வழக்கில் வழங்கிவருதலால்—வடமொழிக் கலப்பாற் புகுந்த—அவ்வெழுத்துக்களும் ஈண்டுக் காட்டப்பட்டன. தமிழிலே,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

என்ற தொல்காப்பிய விதியே கற்றோரால் இலக்கிய நடையிற் போற்றப்பட்டுவருகின்றது.

## i. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | — | — | — | — | ஞெ | — | — | ஞொ | — | — |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | — | — | யு | யூ | — | — | — | — | யோ | யௌ |
| வ | வா | வி | வீ | — | — | வெ | வே | வை | வொ | வோ | வௌ |

மேலே, "i"—இற் காட்டப்பட்டிருக்கும் எழுத்துக்களே தமிழில் மொழிக்கு முதலில் வருவனவாகும். மொழிக்கு முதலிலே வராவெனக் காட்டப் பட்ட எழுத்துக்களை முதலிற் பெற்று வரும் சொற்கள் தமிழ்ச் சொற்களல்ல என்பதை யாம் கண்டறிந்து கொள்ளலாம். பிறமொழிச் சொற்களைத் தமிழிலே எழுதும்போது தமிழின் ஒலிமுறைக் கேற்பத் திரித்து அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

உதாரணம்: (மொழிக்கு முதலில் வருவன.)

**அறம்**, ஆறு, இனிமை, ஈடு, உப்பு, ஊர், எருது, ஏர், ஐயம், ஒன்று, ஓந்தி, ஔவை.

**கனி**, காய், கிளி, கீரை, குடம், கூடு, கெண்டை, கேள், கைதை, கொடை, கோடு, கௌவை.

**ஙனம்.**

**சமர்**, சாந்து. சிறுமை, சீர், சுரை, சூது, செக்கு, சேவல், சையம், சொல், சோறு, சௌரியம்.

**ஞமலி**, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்.

**தந்தை**, தாய், தினை, தீமை, துணி, தூது, தெற்கு, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை.

**நன்மை**, நாடு, நிலம், நீர், நுனி, நூல், நெஞ்சு, நேர், நைதல், நொச்சி, நோக்கம், நௌவி.

**படை**, பால், பிடி, பீடு, புகழ், பூண்டு, பெடை, பேடு, பைதல், பொன், போர், பௌவம்.

**மனை**, மாலை, மின்னல், மீன், முளை, மூப்பு, மெலிவு, மேனி, மையல், மொழி, மோடு, மௌவல்.

**யவனர்**, யானை, யுகம், யூதம், யோகம், யௌவனம்.

**வண்டு**, வாழை, வினை, வீடு, வெளி, வேழம், வையம், வௌவால்.

[டப்பி, ரவை, லட்டு ஆதியன பிறமொழிகளிலிருந்து வந்த சொற்களாகும். றகரம் தமிழ் மொழிக்கே சிறப்பாகவுரிய எழுத்தாதலின் பிறமொழிச் சொற் களிலே வருபவை "ர"கரமே எனக் கொள்ளுதல் வேண்டும் என்பர்.

| | | | |
|---|---|---|---|
| **உ-ம்:** | டமருகம் | — | தமருகம் |
| | டம்பம் | — | தம்பம், இடம்பம் |
| | ரத்னம் | — | அரதனம், இரத்தினம் |
| | ரங்கம் | — | அரங்கம் |
| | லாபம் | — | இலாபம் |
| | லிபி | — | இலிபி |
| | லோகம் | — | உலோகம் |

பிறமொழிச் சொற்கள் "ட"கரத்தை முதலிலேயுடையனவாயிருந்தால் அச்சொற்களைத் "த"கரம் முதலாகவோ "இ"கரம் முன்னதாக இட்டோ எழுதுவதுண்டு. "ர" "ல" ஆகியவற்றை முதலிலே கொண்ட பிறமொழிச் சொற்களுக்கு "அ, இ, உ" ஆகிய உயிர்களில் ஒன்றினை முன்னதாக இட்டு எழுதுவதுண்டு.

## ii. மொழிக்கு இடையில் வரும் எழுத்துக்கள்

தமிழிலே மொழிக்கு இடையில் ர், ழ் ஆகிய மெய்கள் தத்தம் எழுத்தோடு சேர்ந்து வரமாட்டா. அவை தவிர்ந்த பதினாறு மெய்களும் தத்தம் எழுத்தோடு சேர்ந்து வருவதுண்டு.

உ - ம் : பக்கம், அங்ஙனம், அச்சம், மஞ்ஞை, பட்டம், கண்ணன், பத்து, அந்நியர், அப்பம், அம்மி, மெய்யன், பல்லி, கொவ்வை, பள்ளம், குற்றம், அன்னம்.

ர், ழ் ஆகிய இரண்டும் பிற மெய்களோடு சேர்ந்து வருவதுண்டு.

உ - ம் : சேர்தல், வாழ்தல்.

ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன் ஆகிய இப் பன்னிரண்டு மெய்களும் தம் மெய்யோடும் சேர்ந்து வருவதுண்டு.

உ - ம் :

| | | |
|---|---|---|
| இங்ஙனம் | — | சங்கம் |
| மஞ்ஞை | — | பஞ்சு |
| மட்டம் | — | வெட்கம் |
| வெந்நீர் | — | கந்தருவம் |
| அம்மை | — | கம்பன் |
| வெய்யர் | — | கொய்சகம் |
| முல்லை | — | செல்வம் |
| தெவ்வர் | — | தெவ்யாது |
| புள்ளி | — | கேள்வி |
| சுற்றம் | — | கற்பு |
| அன்னம் | — | அன்பு |

## iii. இனவெழுத்துக்கள்

மெய்யெழுத்துக்கள் பதினெட்டில் வல்லின எழுத்துக்கள் ஆறினுக்கும் மெல்லின எழுத்துக்கள் ஆறும் இனமானவை. இடையின எழுத்துக்களான ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறினுக்கும் வேறு இனம் இல்லை.

க் - ங்; ச் - ஞ்; ட் - ண்; த் - ந்; ப் - ம்; ற் - ன்- மொழியிடைப் பயின்று வரும்போது ''ங'' கரம் ''க'' கர மெய்க்கு முன்னும், ''ண'' கரம் ''ட'' கர மெய்க்கு முன்னும், ''ந'' கரம் ''த'' கர மெய்க்கு முன்னும், ''ம'' கரம் ''ப'' கரம் மெய்க்கு முன்னும், ''ன'' கரம் ''ற'' கர மெய்க்கு முன்னும் பயின்று வரும்.

| | | | |
|---|---|---|---|
| உ - ம்: | தங்கை | — | சங்கு |
| | குஞ்சு | — | பிஞ்சு |
| | வண்டு | — | பண்டம் |
| | பந்து | — | தந்தம் |
| | கம்பு | — | செம்பு |
| | கன்று | — | மன்றம் |

[ங், ஞ், ண், ந், ம், ன் முதலியனவற்றினை உபயோகிப்பதில் வருகின்ற தவறுகளை - அவற்றை அடுத்துவரும் வல்லின எழுத்துக்களைக் கவனித்து, அவற்றுக்கு இயையும்படி - இலகுவாகத் திருத்திக் கொள்ளலாம்.]

## iv. மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்கள்

உயிரெழுத்துப் பன்னிரண்டும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்ற மெய்யெழுத்துப் பதினொன்றும், குற்றியலுகரமும் மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்களாம்.

உ - ம்: விள, பலா, கிளி, தீ, நடு, பூ, சேள, மனை, நொ, போ, வெள. - இங்கே உயிர்கள் பன்னிரண்டும் ஈறுயின.

உரிஞ், எண், பொருந், அறம், மன், தாய், வேர், மால், தெவ், புகழ், முள் - இங்கே மெய்கள் பதினொன்றும் ஈறுயின.

ஆகு, அஃது, அரசு, பட்டு, அன்று, மார்பு - இங்கே குற்றியலுகரங்கள் ஈறுயின.

## v. மொழிக்கு முதலிலும் இடையிலும் ஈற்றிலும் வரும் வடமொழி எழுத்துக்கள்

| வடமொழி உருவம் | தமிழ் மொழி உருவம் | வடமொழி உருவம் | தமிழ் மொழி உருவம் |
|---|---|---|---|
| ஜ | ச, ய | ஜ | ச, ய |
| ஜ்யோதி | சோதி | சமாஜம் | சமாசம் |
| ஜ்ஞானம் | ஞானம் | விஜயன் | விசயன் |
| ஜகம் | சகம் | துவஜம் | துவசம் |
| ஜங்கமம் | சங்கமம் | ஜாக்கிரதை | சாக்கிரதை |
| ஜடம் | சடம் | ஜாதகம் | சாதகம் |

| வடமொழி உருவம் | தமிழ் மொழி உருவம் | வடமொழி உருவம் | தமிழ் மொழி உருவம் |
|---|---|---|---|
| ஜ | ச, ய | ஜ | ச, ய |
| ஜயம் | சயம் | ஜாதி | சாதி |
| ஜலம் | சலம் | ஜாலம் | சாலம் |
| ஜனகன் | சனகன் | ஜீவன் | சீவன் |
| ஜனம் | சனம் | ஜீவியம் | சீவியம் |
| ஜனனம் | சனனம் | ஜீரணம் | சீரணம் |
| ஜன்னி | சன்னி | ஜுவாலை | சுவாலை |
| அம்புஜம் | அம்புசம், அம்புயம் | ஜெந்து | செந்து |
| அஜம் | அசம் | ஜெபம் | செபம் |
| இராஜன் | இராசன் | ஜெயம் | செயம் |
| பங்கஜம் | பங்கயம் | ஜென்மம் | சென்மம் |
| பீஜம் | பீசம் | பிரஜை | பிரசை |
| புஜம் | புசம், புயம் | பூஜை | பூசை |
| புஜங்கம் | புசங்கம், புயங்கம் | ஜோதி | சோதி |
| போஜனம் | போசனம் | ஜோடி | சோடி |

| | | | |
|---|---|---|---|
| ஷ | ட | ஷ | ட |
| அஷ்டம் | அட்டம் | அபிஷேகம் | அபிடேகம் |
| அதிஷ்டம் | அதிட்டம் | ஆதிசேஷன் | ஆதிசேடன் |
| அனுஷ்டானம் | அனுட்டானம் | ஔஷதம் | ஔடதம் |
| இஷ்டம் | இட்டம் | சீஷன் | சீடன் |
| கஷ்டம் | கட்டம் | சேஷம் | சேடம் |
| குஷ்டம் | குட்டம் | தூஷணம் | தூடணம் |
| சிருஷ்டி | சிருட்டி | நிமிஷம் | நிமிடம் |
| சிரேஷ்டம் | சிரேட்டம் | பாஷை | பாடை, பாழை |
| சேஷ்டை | சேட்டை | புருஷன் | புருடன் |
| திஷ்டி | திட்டி | பொக்கிஷம் | பொக்கசம், பொக்கிசம் |
| திருஷ்டாந்தம் | திருட்டாந்தம் | | |
| திருஷ்டி | திருட்டி | மகிஷி | மகிசி |
| துஷ்டன் | துட்டன் | ரிஷி | இருடி |
| நஷ்டம் | நட்டம் | வருஷம் | வருடம் |
| நிஷ்டூரம் | நிட்டூரம் | விஷம் | விடம் |
| புஷ்பம் | புட்பம் | வேஷம் | வேடம் |
| ஷண்முகம் | சண்முகம் | | |

| ஸ | ச, த, ற | ஸ | ச, த, ற |
|---|---|---|---|
| ஸ்தானம் | தானம் | பாஸ்கரன் | பாற்கரன் |
| ஸ்நேகம் | சினேகம் | புஸ்தகம் | புத்தகம் |
| ஸ்வதேசி | சுதேசி | மஸ்தகம் | மத்தகம் |
| ஸ்வர்க்கம் | சுவர்க்கம் | மத்தியஸ்தம் | மத்தியத்தம் |
| அஸ்தமனம் | அத்தமனம் | வஸ்து | வத்து |
| அஸ்திரம் | அத்திரம் | விஸ்தாரம் | வித்தாரம் |
| அஸ்திவாரம் | அத்திவாரம் | ஸக்தி | சத்தி |
| அவஸ்தை | அவத்தை | ஸப்தம் | சத்தம் |
| ஈஸ்வரம் | ஈச்சுரம், ஈசுவரம் | ஸபா | சபை |
| கஸ்தூரி | கத்தூரி | உத்ஸவம் | உற்சவம் |
| சரஸ்வதி | சரசுவதி | வாஸம் | வாசம் |
| சாஸ்திரம் | சாத்திரம் | வாஸனை | வாசனை |
| பஸ்மம் | பற்மம் | | |

| ஹ | அ, க | ஹ | அ, க |
|---|---|---|---|
| ஹநுமான் | அனுமான் | ஹிருதயம் | இருதயம் |
| ஹரி | அரி | மஹிமை | மகிமை |
| ஹரிசனம் | அரிசனம் | ரோஹிணி | உரோகிணி |
| ஹாரம் | ஆரம் | ஹீனம் | ஈனம் |
| ஹிதம் | இதம் | மஹீ | மகி |
| ஹிமம் | இமம் | ஹேது | ஏது |
| ஹிமாலயம் | இமாலயம் | ஹோமம் | ஓமம் |

| க்ஷ | க்க, க, ச, ட்ச | க்ஷ | க்க, க, ச, ட்ச |
|---|---|---|---|
| லக்ஷ்மி | இலக்குமி | தீக்ஷா | தீக்கை |
| க்ஷணம் | கணம் | பிக்ஷா | பிச்சை |
| அக்ஷரம் | அக்கரம், அச்சரம் | பக்ஷி | பட்சி |
| பக்ஷணம் | பட்சணம் | க்ஷேமம் | சேமம் |

## vi. "ர"கர, "ல"கர வடமொழிச் சொற்களின் தமிழாக்கம்

| | | | |
|---|---|---|---|
| ரகசியம் | இரகசியம் | ரஞ்சிதம் | இரஞ்சிதம் |
| ரங்கம் | அரங்கம் | ரட்சகர் | இரட்சகர் |
| ரங்கன் | அரங்கன்<br>இரங்கன் | ரட்சை | இரட்சை |
| | | ரணம் | இரணம் |
| ரசம் | இரசம் | ரத்தம் | இரத்தம் |
| ரசனை | இரசனை | ரத்தினம் | இரத்தினம் |
| ரசாயனம் | இரசாயனம் | ரதம் | இரதம் |

| | | | |
|---|---|---|---|
| ரதி | இரதி | ரேகை | இரேகை |
| ரம்பை | அரம்பை | ரேவதி | இரேவதி |
| ரம்மியம் | இரம்மியம் | ரொட்டி | உரொட்டி |
| ரவி | இரவி | ரோகம் | உரோகம் |
| ராகம் | இராகம் | ரோகிணி | உரோகிணி |
| ராகவன் | இராகவன் | ரோசம் | உரோசம் |
| ராகு | இராகு | ரோமம் | உரோமம் |
| ராச்சியம் | இராச்சியம் | லக்கினம் | இலக்கினம் |
| ராசன் | இராசன் | லக்குமி | இலக்குமி |
| ராசி | இராசி | லகு | இலகு |
| ராட்சதன் | இராட்சதன் | லட்சணம் | இலட்சணம் |
| ராட்டினம் | இராட்டினம் | லயம் | இலயம் |
| ராணி | இராணி | லவங்கம் | இலவங்கம் |
| ராத்திரி | இராத்திரி | லாபம் | இலாபம் |
| ராமாயணம் | இராமாயணம் | லிகிதம் | இலிகிதம் |
| ராவணன் | இராவணன் | லிங்கம் | இலிங்கம் |
| ரிஷி | இருவி (இருடி) | லிபி | இலிபி |
| ருக்குமணி | உருக்குமணி | லேகியம் | இலேகியம் |
| ருசி | உருசி | லோகம் | உலோகம் |
| ருத்திரன் | உருத்திரன் | லோபம் | உலோபம் |
| ருது | இருது | லோபி | உலோபி |
| ரூபம் | உரூபம் | லௌகிகம் | இலௌகிகம் |

## vii. தமிழாக்கத்தில் மாற்றமடையும் வடமொழிச் சொற்களுட் சில

| | | | |
|---|---|---|---|
| அர்த்தம் | அருத்தம் | சூர்ணம் | சூரணம் |
| அல்பம் | அற்பம் | த்ராவகம் | திராவகம் |
| உத்பலம் | உற்பலம் | தர்மம் | தருமம் |
| கர்த்தா | கருத்தா | துர்நிமித்தம் | துன்னிமித்தம் |
| கர்ணன் | கருணன், கன்னன் | நதீ | நதி |
| கல்பகம் | கற்பகம் | நிர்ணயம் | நிருணயம் |
| கல்பம் | கற்பம் | பக்வம் | பக்குவம் |
| காவ்யம் | காவியம் | பத்மம் | பதுமம் |
| சக்தி | சத்தி | பாபம் | பாவம் |
| சக்ரம் | சக்கரம் | புண்யம் | புண்ணியம் |
| சத் | சத்து | வக்ரம் | வக்கிரம் |
| சப்தம் | சத்தம் | வம்சம் | வமிசம் |
| சம்பகம் | சண்பகம் | வாக் | வாக்கு |
| சுக்லம் | சுக்கிலம் | விராட் | விராட்டு |

## viii. தமிழாக்கத்தில் மாற்றமடையும் வடமொழி "ந"கர வெழுத்து

### A

| | | | |
|---|---|---|---|
| அந்நம் | அன்னம் | புவநம் | புவனம் |
| அநிலம் | அனிலம் | மநு | மனு |
| கவநம் | கவனம் | ஸந்தாநம் | சந்தானம் |
| தநு | தனு | ஸந்நிதி | சன்னிதி |
| திநம் | தினம் | ஜநநம் | சனனம் |
| நியமநம் | நியமனம் | ஜநம் | சனம் |
| பவநம் | பவனம் | ஜாநகி | சானகி |
| புநிதம் | புனிதம் | ஜீவநம் | சீவனம் |

### B (அ)

| | | | |
|---|---|---|---|
| அநகன் | அனகன் | அநாவசியம் | அனுவசியம் |
| அநங்கன் | அனங்கன் | அநேகம் | அனேகம் |
| அநபாயன் | அனபாயன் | அநுசிதம் | அனுசிதம் |
| அநந்தம் | அனந்தம் | அநுபமன் | அனுபமன் |
| அநாயாசம் | அனுயாசம் | | |

### (ஆ)

| | | | |
|---|---|---|---|
| அநுகூலம் | அனுகூலம் | அநுமானம் | அனுமானம் |
| அநுக்கிரகம் | அனுக்கிரகம் | அநுமேயம் | அனுமேயம் |
| அநுதாபம் | அனுதாபம் | அநுமதி | அனுமதி |
| அநுதினம் | அனுதினம் | அநுராகம் | அனுராகம் |
| அநுபந்தம் | அனுபந்தம் | அநுவாதம் | அனுவாதம் |
| அநுபல்லவி | அனுபல்லவி | அநுவதித்தல் | அனுவதித்தல் |
| அநுபானம் | அனுபானம் | | |

வட சொற்களிலே சில, "ந"கர வரிசை உயிர்மெய்யெழுத்துக்களை முதலிலே கொண்டனவாய்த் தமிழ் மொழியிலே வழங்குகின்றன- அச் சொற்கள் எதிர்மறைப் பொருள் உணர்த்தும்போது "அ"கரத்தை முதலிலே கொண்டனவாயிருக்கும். அப்படிப்பட்ட சொற்களில் "ந"கரம் "ன"கரமாக மாறுபடாது :

உ-ம் : அ + நாமதேயம் = அநாமதேயம்
அ + நித்தியம் = அநித்தியம்
அ + நியாயம் = அநியாயம்
அ + நீதி = அநீதி

## "ண"கர, "ன"கர வேறுபாடு

1. அணங்கு - பெண் ; woman
அனங்கு - மன்மதன் ; Cupid

2. அணல் - தாடி ; beard
அனல் - உஷ்ணம் ; heat

3. அணி - அலங்காரம் ; ornament
அனி - நெற்பொரி ; fried paddy

4. அணு - அணு ; an atom
அனு - தாடை ; jaw bone

5. அணுக்கம் - அண்மை ; proximity
அனுக்கம் - அச்சம் ; fear

6. அண்மை - சமீபம் ; nearness
அன்மை - தீமை ; evil

7. அண்ணம் - மேல்வாய் ; palate
அன்னம் - ஒரு பறவை ; swan

8. அரண் - கோட்டை ; fortress
அரன் - சிவன் ; Siva

9. அவண் - அங்கே ; there, that place
அவன் - அவன் ; he

10. ஆணி - ஆணி ; a nail
ஆனி - ஆனி மாதம் ; June

11. ஆணை - சத்தியம் ; oath
ஆனை - யானை ; elephant

12. ஆண் - ஆண் ; a male
ஆன் – இடபம் ; ox

13. இணைதல் - சேருதல் ; joining
இனைதல் - வருந்துதல் ; being thrown into grief

14. உண்ணல் - புசித்தல் ; eating
உன்னல் - நினைத்தல் ; thinking

15. உண்ணி - ஓர் செந்து ; tick of dogs
உன்னி - குதிரை ; horse

16. ஊண் - இரை ; food
ஊன் - தசை ; flesh

17. எண் - கணக்கு ; number
என் - என்னுடைய ; my

18. எண்பது - எண்பது ; eighty
என்பது - எனப்படுவது ; that which is said so

19. ஏணம் - மான் ; deer
ஏனம் - பன்றி ; pig

20. ஏணை - புடவைத் தொட்டில் ; children's hammock
ஏனை - மலங்குமீன் ; an eel

21. ஏண் - நிலையுடைமை ; stability
ஏன் - ஏன் ; why ?

22. கணம் - கூட்டம் ; a company or tribe
கனம் - பாரம் ; weight

23. கணி - கணிப்பிடு ; to calculate
கனி – பழம் ; fruit

24. கணை - அம்பு ; arrow
கனை - ஒலி ; sound or roar

25. கண் - கண் ; eye
கன் - கன்னார் தொழில் ; work in brass

26. கண்ணன் - திருமால் ; Vishnu
கன்னன் - ஒரு வள்ளல் ; Karna

27. கண்ணி - அரும்பு ; flower-bud
கன்னி - குமரி ; a virgin

28. கண்ணிமை - கண் இதழ் ; eye-lid
கன்னிமை - கன்னித்தன்மை ; virginity

29. காணம் - செக்கு ; an oil-press
கானம் - இசைப்பாட்டு ; song

30. காணல் - குறித்தல் ; understanding perfectly
கானல் - கடற்கரைச் சோலை ; grove on the sea-shore

31. காண் - காணு ; to see
கான் - காடு ; forest

32. குணி - ஊமை ; a dumb person
குனி - குனி ; to bend or couch

33. கோண் - வளைவு ; crookedness
கோன் - அரசன் ; a king

34. சமண் - புறச்சமயமாறினுள் ஒன்று ; Jainism
சமன் - யமன் ; Yama, the god of death

35. சுணை - சுரணை : sense of shame
சுனை - குளம் ; a hill tank
36. சுண்ணம் - கந்தப் பொடி ; eromatic powder
சுன்னம் - சுழி ; cipher
37. சோணை - சோணசைலம் ; the red mountain
சோனை - விடா மழை ; incessant rain
38. தணி - ஆறு ; to be allayed, to appease
தனி - ஒப்பில்லா ; matchless
39. தண் - குளிர்ச்சி ; coolness
தன் - தனது (oblique of தான்)
40. தண்மை - சாந்தம் ; calmness
தன்மை - குணம் ; quality
41. திணை - ஒழுக்கம் ; conduct or custom
தினை - ஓர் பயிர் ; millet
42. திண்மை - வலி ; vigour
தின்மை - சா, மரணம் ; death
43. துணி - தெளி ; to ascertain
துனி - அச்சம் ; dread or fear
44. துணை - சகாயம் ; aid
துனை - விரை ; to hasten
45. நண்பு - நட்பு ; friendship
நன்பு - நன்மை ; goodness
46. நாணம் - வெட்கம் ; shyness
நானம் - குளித்தல் ; bathing
47. நாண் - கயிறு ; string
நான் - யான் ; I
48. பணம் - திரவியம் ; money in general
பனம் - பெருமை ; largeness
49. பணி - ஏவல் ; service
பனி - பனி ; dew
50. பணை - முரசு ; war-drum
பனை - பனைமரம் ; palmyra tree
51. பண் - இசைப்பாட்டு ; musical mode
பன் - ஓர் நாணல் ; a bulrush
52 பண்ணல் - பண்ணுதல் ; effecting or making
பன்னல் - சொல்லுதல் ; speaking

53. பண்ணை - மருத நிலம் ; agricultural land
பன்னை - தறி ; hand-loom

54 பரண் - பரண் ; raised platform for watching fields
பரன் - சிவன் ; Siva

55. பாணம் - அம்பு ; arrow
பானம் - பருகுவன ; beverage

56. பாணி - இசைப் பாட்டு ; a song as sung
பானி - படை ; army or troops

57. பாண்மை - தாழ்ச்சி ; submissiveness
பான்மை - குணம் ; nature or quality

58. பிணை - கட்டு ; to tie or bandage
பினை - பிசை ; to knead or mash

59. புணை - தெப்பம் ; a float or raft
புனை - அணி ; to dress, to put on

60. பூணை - முல்லை நிலம் ; forest
பூனை - பூனை; cat

61. பேண் - காப்பு அளி ; to protect
பேன் – தலைப் பேன் ; louse

62. மணம் – கலியாணம் ; marriage
மனம் - உள்ளம்; mind

63. மணை - ஓர் ஆசனம் ; low seat or stool
மனை - வீடு; house or home

64. மண் - பூமி ; earth
மன் - அரசன் ; king

65. மண்ணன் - மந்தன் ; dullard
மன்னன் - அரசன்; king

66. மாணம் - மாட்சிமை; excellency
மானம் - அபிமானம் ; honour

67. மாணல் - நன்மை ; being good
மானல் - ஒப்பு; resemblance, equalling

68. மாணவன் - படிக்கும் சீடன் ; pupil
மானவன் - அரசன் ; king

69. மாணி - பிரமசாரி ; bachelor student
மானி - மானமுடையோன்; person of honour

70. மாண் - மாட்சிமை; splendidness
மான் - மான்; deer

71. முரண் - மாறுபாடு ; contrast, variance
முரன் - ஓர் அசுரன் ; an Asura

72. யாண் - அழகு ; beauty
யான் - நான்; I

73. வணை - வளை ; to bend
வனை - அலங்கரி ; to decorate

74. வண்ணம் - அழகு ; beauty
வன்னம் - வர்ணம்; colour

75. வண்மை - ஈகை ; liberality
வன்மை - வலி : strength

76. வாணம் - அம்பு ; arrow
வானம் - ஆகாயம்; firmament

77. வாணி – அம்பு ; arrow
வானி - கூடாரம் ; tent

78. வேண் - விருப்பம் ; desire
வேன் - மிகுதி ; abundance

## "ர"கர, "ற"கர வேறுபாடு

1. அரம் : ஓர் ஆயுதம் ; rasp, file
அறம் : தருமம் ; charity, religious duty

2. அரவு : பாம்பு ; snake
அறவு : ஒடிவு, நாசம், அறுபட்ட இடம் ; separated, broken, detached, ruin, destruction

3. அரன் : சிவன், எப்பொருட்கு மிறைவன் ; Siva, the supreme being
அறன் : அறம், தருமம் ; charity, religious duty

4. அரா : அராவென்னேவல், பாம்பு ; to file, to polish, snake
அறா : நீங்காத ; not expelled, undisplaced, not dismissed

5. அரி : ஆறு, அரித்தல், திருமால், அரிப்பிடி, அரிக்கட்டு, சிங்கம் ; to corrode, to divide, Vishnu, a reaped handful of paddy, line,
அறி : தெரி, உணர் ; to cut, to know, to understand

6. அரு : வடிவற்றது, உருவமற்றது ; that which is formless
அறு : நீங்கு, தொடர்பு நீக்கு ; to disjoin, causing to break, to separate, to cut

7. அருகு: குறைவாகு, பக்கம், ஓரம், சமீபம்; to diminish, border, edge, neighbourhood

அறுகு: ஒரு புல், யானே, ஆண்புலி; a kind of grass deemed sacred to Ganesa, elephant, male tiger

8. அருந்து; உண், அருமை; to eat, scarceness

அறுந்து: துண்டுபட்டு; having been disjoined

9. அரை; மாவாக்கு, அரையென்னேவல், இரண்டில் ஒரு பங்கு, இடை; to grind, to pulverise, half, waist.

அறை; அடி, அறையென்னேவல், இல்லத்தில் ஒரு பகுதி; to slap, to blow with hammer, room, chamber

10. அலரி; அழகு, நீராவி, ஒரு பூமரம், சூரியன்; beauty, steam, sweet scented plant oleander, sun

அலறி; அழுது, கதறி; crying out, weeping loudly

11. ஆரல்; ஒரு மீன், மதில், நெருப்பு; the lamprey fish, wall, fine

ஆறல்: ஆறுதல், சூடு தணிதல்; cooling, resting, relaxing, growing cold

12. இரத்தல்: பிச்சை எடுத்தல், பிச்சை கேட்டல்; begging for alms, begging

இறத்தல்: சாதல், செல்லுதல், dying, passing (as time)

13. இரகு; அயோத்தி மன்னன்; a King of Oudh and great grand-father of Rama

இறகு: இறகர்; feather, plumage

14. இரக்கை; பிச்சை எடுத்தல்; begging for alms

இறக்கை: சிறகு; feather, wing

15. இரக்கம்: மனவுருக்கம்; pity, sympathy

இறக்கம்: இறங்குகை, சரிவு; the act of getting down, slope

16. இரங்குதல்: இரக்கப்படுதல்; pitying, sympathising

இறங்குதல்: கீழிறங்குதல், getting down

17. இரவு: இராத்திரி, யாசிக்கை; night, begging for alms

இறவு: இருல், தேன்கூடு; shrimp, honey-comb

18. இருத்தல்: தங்குதல், உட்கார்தல்; staying, sitting down

இறுத்தல்: செலுத்துதல்; paying (as tax)

19. இருக்கு: இருக்கு வேதம் (நான்கு வேதங்களுள்ஒன்று), the Rig Veda (one of the four Vedas)

இறுக்கு: அழுந்தக் கட்டு; to tie, to tighten

20. இருப்பு: இருப்பிடம், ஆசனம்; residence, seat

இறுப்பு: கடன் செலுத்துகை; payment of debt, liquidation

21. இரும்பு : கரும்பொன்; iron (literally the block metal)
இறும்பு : குறுங்காடு, சிறுமலை; thicket, hillock.

22. இரை : உணவு ; food, prey
இறை : கடவுள், அரசன், வரி ; God, King, tribute or tax

23. இரைத்தல் : வீங்குதல் ; puffing up, swelling
இறைத்தல் : நீரிறைத்தல், செலவழித்தல் ; lifting water out of a pond or well, squandering

24. ஈரல் : ஓர் உள்ளுறுப்பு ; lungs, liver, spleen
ஈறல் : துக்கம், நெருக்கம் ; grief, closeness

25. உரத்தல் : பெலத்தல், growing strong or hard
உறத்தல் : பிதுக்குதல், செறிதல் ; squeezing, crowding

26. உரப்பு : கடினம் ; firmness, toughness
உறப்பு : செறிவு ; denseness, closeness

27. உரல் : இடிக்கும் உரல் ; mortar
உறல் : கிட்டுதல், உண்டாதல் ; joining closely, happening

28. உரவு : வலி, மிகுகை ; strength, increasing
உறவு : சம்பந்தம், நட்பு ; relationship, friendship

29. உரி : தோல், கழற்று ; skin, bark, to pull off
உறி : தூக்கு ; a hoop for hanging pots on

30. உரிஞ்சுதல் : உராய்தல், rubbing oneself, rubbing against one another (as trees)
உறிஞ்சுதல் : வாயால் உள்ளிழுத்தல் ; sipping, drawing into the mouth

31. உரு : வடிவம் ; form, shape
உறு : கிட்டு, உண்டாகு ; to join closely, to happen

32. உருக்கு : எஃகு; steel
உறுக்கு : பயமுறுத்து, to threaten

33. உருமு : இடி ; thunder
உறுமு : உறுமென்று ஒலி; to growl, to grunt

34. உரை : பேச்சு, வியாக்கியானம் ; speech, commentary.
உறை : பிரை, படைக்கூடு; reserve of curds for curdling milk, sheath

35. உரைத்தல் : சொல்லுதல், தேய்த்தல்; saying, rubbing to powder or paste
உறைத்தல் : அதட்டுகை ; சுவை உறைத்தல் ; rebuking, being pungent or biting

36. ஊரல் : கிளிஞ்சல் ; shell-fish
ஊறல் : ஊறுதல், மெலிந்த உடல் தேறுதல் ; gathering by oozing, increasing (as flesh in a person wasted by disease)

37. ஊரு : நகரு, தினவுறு; to creep, to itch
ஊறு : இடையூறு ; hindrance, obstruction

38. எரி : தீயால் வெந்து அழியச்செய் ; to burn, to scorch
எறி : வீசியெறி ; to throw, to fling

39. ஏரி : நீர் நிலை ; large tank, lake
ஏறி : உயர்ந்து ; having gone up, having ascended

40. ஒரு : ஒன்று ; one
ஒறு : தண்டி, அழி ; to punish, to destroy

41. ஒருத்தல் : ஒருசார் விலங்கின் ஆண் பெயர் ; male of certain animals
ஒறுத்தல் : தண்டித்தல், அழித்தல் ; punishing, destroying

42. கர்ப்பம் : கரு ; embryo, the young in the womb
கற்பம் ; ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்து ; medicine to promote longevity.

43. கர : மறை, கொடாதிரு ; to conceal, to withhold.
கற : பால் கற ; to milch

44. கரடு : முருடு, புற்கரடு ; roughness, turf
கறடு : குறைந்த தரத்து முத்து ; inferior pearl

45. கரப்பு : களவு, வஞ்சகம் ; theft, fraud
கறப்பு : கறக்கை ; milking

46. கரம் : கை ; hand
கறம் : கொடுமை ; harshness, severity

47. கரவு : மறைவு, வஞ்சனை ; concealment, deceit
கறவு : கப்பம் ; tribute

48. கரி : அடுப்புக் கரி ; charcoal
கறி : மரக் கறி ; vegetables (raw or boiled)

49. கருப்பு : பஞ்சம் ; famine, dearth
கறுப்பு : கருமை ; blackness

50. கரு : கருப்பம் ; embryo, the young in the womb
கறு : மன வைரம் ; vengeful enmity

51. கரை : கடற் கரை, பக்கம் ; sea-shore, side
கறை : மாசு ; rust, blemish

52. கரையான் : கடலோரத்தில் வாழும் வலைஞன் ; fisherman living near the sea-coast

கறையான் : சிதல் ; white ant

53. காரை : காறல் மீன் ; a sea-fish

காறை : ஒருவகை அணி ; necklet for women

54. கிரி : மலை ; mountain

கிறி : பொய், மாயம் ; lie, deceit or fraud

55. கீரி : நகுலம், கீரிப்பிள்ளை ; Indian mungoose

கீறி : வரி கீறி ; having drawn lines

56. குரத்தி : குரு பத்தினி ; wife of preceptor or guru

குறத்தி : குறச்சாதிப் பெண் ; woman of the kurava tribe

57. குரம் : குதிரைக் குளம்பு ; horse's hoof

குறம் : கலம்பக உறுப்பு ; a theme in kalampakam

58. குரவன் : உபாத்தியாயன் ; teacher

குறவன் ; குறிஞ்சிநில மகன் ; inhabitant of the hilly tract

59. குரவை : குரவைக் கூத்து ; a kind of dance

குறவை : வரால் மீன் ; black murrel

60. குரு : உபாத்தியாயன், ஞானசாரியன் ; teacher, spiritual preceptor

குறு : குறுகு ; to become short, to contract, shrink

61. குருகு : பறவை ; bird

குறுகு : குள்ளமாதல், அணுகுதல் ; growing short, approaching

62. குருக்கு : இளம்பனைத் தோப்பு ; plantation thick with young palmyra palms

குறுக்கு : குறுக்களவு ; diameter

63. குருமை : நிறம், பெருமை ; lustre, superiority

குறுமை : குறுகிய தன்மை ; conciseness, brevity

64. குரை : குலை ; to bark (as a dog)

குறை : குற்றம், குறைபாடு ; defect, deficiency

65. குரைத்தல் : குலைத்தல் ; barking (as a dog)

குறைத்தல் : சுருக்குதல் ; shortening, lessening

66. கூரியது : கூர்மையுள்ளது ; that which is sharp

கூறியது : கூறப்பட்டது ; that which is told

67. கூரை : இறப்பு ; sloping roof (thatched with palm leaf)

கூறை : ஆடை ; clothes, garment

68. கோரல் : கோருதல் ; requesting, soliciting
கோறல் : கொல்லுகை ; killing, slaying

69. கோரை : புல் வகை ; sedges and bulrushes
கோறை : பழுது ; blemish, defect

70. சருகு : உலர்ந்து வற்றிய இலை ; dried leaf
சறுகு : நழுவு ; to slip, to slide, to fail

71. சரை : நரை மயிர், வயோதிபம் ; grey hair, old age
சறை : தாழ்வு ; lowness, inferiority

72. சாருதல் : போயடைதல் ; reaching, approaching
சாறுதல் : நிலத்தைக் கொத்துதல் ; hoeing superficially, harrowing

73. சிரை : மயிர் கழி ; to shave
சிறை : சிறைச்சாலை ; prison, jail

74. சுரா : கள் ; toddy
சுறு : மகர மீன் ; shark

75. சுருக்கு : சுருங்குகை, ஆடை மடிப்பு ; contraction, fold
சுறுக்கு : விரைவு ; quickness, rapidity

76. சூரன் : வீரன் ; warrior, hero
சூறன் : மூஞ்சூறு ; grey musk-shrew

77. சூரை : சூரை மீன் : tunny-fish
சூறை : சுழல் காற்று ; whirlwind

78. செரி : சீரணமாகு ; to be digested
செறி : நெருக்கு ; to be dense, to be crowded

79. செரு : போர் ; fight, battle
செறு : வயல், குளம் ; field, tank

80. செருப்பு : பாதரட்சை ; leather sandals
செறுப்பு : நெருக்கம், கட்டுப்பாடு ; narrowness, restriction

81. சேரல் : சேரநாட்டரசன் ; Chera king
சேறல் : செல்லுகை ; passing, reaching

82. சேரி : ஊர் ; town, village
சேறி : சேறி மீன் ; a kind of sea-fish

83. சொரி : பொழி, தினவு ; to pour forth, itching
சொறி : தினவு, சுரசுரப்பு ; itching, roughness of surface

84. தரி : ஊன்றி நில், அணி ; to stand firm, to wear
தறி : வெட்டு, நடுதறி ; to cut down, wooden post

85. தாரு : மரம், தேவதாரு ; tree, red cedar
தாறு : வாழை முதலியவற்றின் குலை ; bunch (as of plantains, arecanuts etc.)

86. தாழ்வரை : மலையடிவாரம் ; foot of a mountain
தாழ்வறை : நிலவறை ; vault, underground cellar

87. திரம் : உறுதி ; firmness, constancy
திறம் : வகை, வலிமை ; kind or class, strength

88. திரை : அலை ; wave, billow, ripple
திறை : கப்பம் ; tribute

89. துர : ஓட்டிச் செலுத்து ; to drive, to disperse
துற : உலகப்பற்றினை விடு ; to renounce worldly pleasures

90. துரவு : மணற் கேணி ; well made by excavating sand, unwalled well
துறவு : சன்னியாசம் ; renunciation of the pleasures of life ; asceticism

91. துரை : தலைவன் ; lord, master
துறை : கடற்றுறை ; seaport, harbour

92. தூரல் : நிறைகை; துன்பம் ; filling up, affliction
தூறல் : சிறு மழை ; drizzling

93. தெரி : தெரிந்தெடு ; to select, to choose
தெறி : துளியாய்ச் சிதறு ; to be sprinkled

94. தெரிபடுதல் : தெரிந்தெடுக்கப்படுதல் ; being selected
தெறிபடுதல் : சிதறுண்ணுதல் ; being scattered (as cattle)

95. தெரிப்பு : அறிவிப்பு : informing ; communicating
தெறிப்பு : அகந்தை மேலிட்ட வொழுக்கம் ; presumptuous conduct

96. தெரு : வீதி ; street
தெறு : சுடுகை ; burning, scorching

97. தேரல் : அறிதல் ; understanding; knowing
தேறல் : தெளிதல் ; being accepted as true

98. தேரை : தவளை வகை ; Indian toad
தேறை : மீன் வகை ; a kind of fish

99. நரை ; வெளுத்த மயிர் ; grey hairs
நறை : தேன், கள் ; honey, toddy

100. நாரி : பெண் ; woman
நாறி : கற்றாழை ; aloe

101. நிருத்தம் : நடனம் ; dance
நிறுத்தம் : நிறுத்துகை ; stopping

102. நிரை : வரிசை ; row, column, series
நிறை : நிறுக்கை ; weighing

103. நெரி : நசுக்கு ; to squeeze, to crush
நெறி : வழி, சமயம் ; path, religion

104. பரத்தல் : spreading (as water, disease, light etc.)
பறத்தல் : ஆகாயத்திற் செல்லுதல் ; flying

105. பரப்பு : இட விரிவு ; area, surface, space
பறப்பு : துரிதம் ; haste, hurry

106. பரம்பு : வரப்பு ; embankment, ridge or mound, to enclose water
பறம்பு : மலை ; mountain

107. பரவை : கடல் ; sea
பறவை : புள் ; bird

108. பரி : குதிரை, சும ; horse, to carry or sustain
பறி : பிடுங்கு ; to pluck to pick off with a twist

109. பரிதல் : இரங்குதல் ; sympathising
பறிதல் : ஓடிப் போதல் ; slipping out ; running away (as a horse) ; flowing out quickly (as water)

110. பரித்தல் : சுமத்தல் ; bearing, sustaining
பறித்தல் : வலிதிற் கவர்தல் ; taking by force ; usurping ; plundering

111. பருகு : குடி ; to drink
பறுகு : குள்ளம் ; shortness ; stuntedness

112. பரை : பார்வதி ; the Goddess Parvathi
பறை : முரசு, drum

113. பாரை : கட்டப் பாரை ; crow-bar
பாறை : குன்று ; hillock

114. பிரதேசம் : இடம் ; place ; location
பிறதேசம் : அன்னிய நாடு ; foreign country

115. பிரை : உறை ; fermented substance for curdling milk
பிறை : இளஞ் சந்திரன் ; the crescent moon

116. புரம் : ஊர் ; town, village
புறம் : பக்கம் ; வெளி ; side, outside

117. பரவு : கொடை ; gift, grant, boon
புறவு : புறு ; dove, pigeon

118. பெரு : பரு ; to grow thick or stout
பெறு : பிரசவி ; to bring forth, to bear

119. பொரி : வறு ; to fry, to parch
பொறி : பறி, எழுது ; to snap, to write

120. பொரு : போர் செய் ; to fight
பொறு : சகி ; to bear, to sustain

121. பொருக்கு : செதிள் ; skin, flake
பொறுக்கு : பொறுக்கியெடு ; to pick, to pick up

122. பொருப்பு : மலை ; mountain
பொறுப்பு : தாங்குகை ; responsibility; charge

123. மரத்தல் : விறைத்தல் ; being stiffened, becoming insensible (as legs)
மறத்தல் : அயர்த்தல் ; forgetting

124. மரம் : விருட்சம் ; tree, shrub
மறம் : சினம் ; வீரம் ; anger, bravery

125. மரி : சா ; to die
மறி : தடு ; to stop

126. மருகு : மகர வாழை ; a kind of plantain
மறுகு : தெரு ; road, street

127. மருத்து : காற்று ; wind
மறுத்து : மறுபடியும் ; again

128. மருப்பு : கொம்பு ; horn of beasts
மறுப்பு : எதிர்க்கை ; objection, opposition

129. மரை : ஒரு மிருகம் ; elk
மறை : வேதம் ; the Vedas

130. மாரன் : மன்மதன் ; the God of Love
மாறன் : பாண்டியன் ; a title of Pandya kings

131. மாரி : மழை ; rain
மாறி : இரண்டகஞ் செய்வோன் ; double- dealing person

132. முரி : ஒடி ; to break off, to snap off
முறி : துண்டு, பத்திரம்; piece, written bond

133. முரிப்பு : எருத்துத் திமில் ; the hump of oxen
முறிப்பு : மாற்று மருந்து ; antidote

134. முருகு : இளமை ; tenderness, tender age
முறுகு : காந்து; to scorch in boiling or frying

135. முருக்கு : அழி ; to destroy, to crush
முறுக்கு : ஓர் பணியாரம் ; a kind of cake

136. வரம் : கடவுள் முதலியவற்றுற் பெறும்பேறு ; boon
வறம் : நீரில்லாமை ; drought

137. வருத்தல் : துன்பப்படுத்துதல் ; afflicting, vexing
வறுத்தல் : வறட்டுதல் ; frying, roasting

138. வரை : மலை ; hill, mountain
வறை : வறுத்த கறி ; fried meat etc.

139. விரகு : உபாயம் ; contrivance, strategy
விறகு : எரிக்கும் கட்டை ; fuel, firewood

140. விரல் : கை விரல் ; கால் விரல் : finger, toe
விறல் : வலி ; strength

141. விரை : வாசனை ; fragrance
விறை : மரத்துப் போ ; to become stiff with cold

142. வெரு : அச்சம் ; fear, dread
வெறு : அருவரு ; to dislike, to be disgusted with

## "ல"கர, "ழ"கர, "ள"கர வேறுபாடு

1. அகலம் : விரிவு ; width, breadth
அகளம் : தாழி ; a water-pot

2. அகழி : அகழ் ; a ditch round a fort
அகளி : தாழி ; an earthen pot

3. அகல் : நீங்கு ; to get away
அகழ் : தோண்டு ; to dig

4. அகல்தல் ; விரிதல் ; spreading
அகழ்தல் : தோண்டுதல் ; digging

5. அலகு : பறவை மூக்கு ; beak of birds
அழகு : வனப்பு ; beauty
அளகு : கூகையுங் கோழியுந் தவிர்ந்த புள்ளினப் பெண் பொது ; the female of all hinds, the owl and fowl excepted

6. அலகை : பிசாசு ; devil
அளகை : குபேரன் நகர் ; the city of Kubera

7. அலம் : சஞ்சலம் ; perturbation
அளம் : உப்பளம் ; saltern

8. அலறு : உரக்கக் கூப்பிடு ; to vociferate
அழறு : சேறு ; mud
அளறு : சிதறு ; to shatter

9. அலி : பேடி ; hermaphrodite
அழி : கெடு ; to damage
அளி : அருள் ; favour

10. அழிதல் : கெடுதல் ; perishing
அளிதல் : அறக் கனிதல் ; mellowing

11. அழித்தல் : கெடுத்தல் ; destroying
அளித்தல் : ஈதல் ; giving

12. அலை : நீர்த் திரை ; wave, billow
அழை : வரவேண்டு ; to invite
அளை : குழை ; to mix up or mingle

13. அலைதல் : வருந்துதல் ; being vexed
அளைதல் : கலத்தல் ; mixing up

14. அலைத்தல் : வருத்துதல் ; vexing
அழைத்தல் : வாவெனல் ; calling

15. அல்லல் : துன்பம் ; distress
அள்ளல் : அள்ளுதல் ; taking up a handful

16. அவல் : குளம் ; a tank
அவள் : அப் பெண் ; she

17. ஆலம் : பாம்பின் நஞ்சு ; poison of serpents
ஆழம் : தாழ்வு ; depth

18. ஆலி : அமுதம் ; nectar
ஆழி : கடல் ; the sea
ஆளி : சிங்கம் ; the lion

19. ஆல் : ஆல மரம் ; the banian tree
ஆழ் : தாழு ; to be immersed
ஆள் : ஆளுதல் செய் ; to rule

20. ஆழ்தல் : தாழுதல் ; sinking
ஆள்தல் : ஆளுதல் ; governing

21. ஆழ்வார் : விஷ்ணுவடியார் ; devotees of Vishnu
ஆள்வார் : ஆளுவோர் ; those who govern

22. இகல் : பகை ; enmity
இகழ் : நிந்தி ; condemn

23. இதல் : கவுதாரி ; a partridge
இதழ் : பூவிதழ் ; petal of flowers
இதள் : இரசம் ; quick-silver

24. இலவு : ஓர் மரம் : the silk cotton tree
இழவு : இழத்தல் ; loss

25. இலி : இல்லாதவன் ; a person possessed of nothing
இழி ; இறங்கு ; to descend
இளி : சிரிப்பு ; laughter

26. இழித்தல் : இறக்குதல் ; lowering
இளித்தல் : பரிகாசஞ் செய்தல் ; ridiculing

27. இலை : தழை ; vegetable leaf
இழை : ஆபரணம் ; ornament
இளை : இளைப்படை ; to grow weary

28. இலைத்தல் : பச்சை நிறமாதல் ; growing green
இழைத்தல் : மணி பதித்தல் ; enchasing
இளைத்தல் : மெலிதல் ; growing emaciated

29. உலகு : உலகம் ; the world
உளகு : யாழிநரம்பு ; shaft of a lute

30. உலத்தல் : கெடல் ; being ruined
உழத்தல் : பழகல் ; practising

31. உலப்பு : கேடு ; ruin, waste
உழப்பு : ஊக்கம் ; energy
உளப்பு : நடுக்கம் ; trembling

32. உலவு : உலாவு ; to walk or ride
உழவு : பயிர்த்தொழில் ; agriculture
உளவு : வேவு ; spying

33. உலருதல் : காய்தல் ; drying
உழறுதல் : கலங்குதல் ; being disturbed
உளறுதல் : பிதற்றுதல் ; talking blatantly

34. உழி : பக்கம் ; side
உளி : தச்சர் உளி ; a chisel

35. உலு : தினை முதலியவற்றின் பதர் ; chaff of inferior grains
உழு : உழு ; to plough
உளு : அரிக்கும் புழு ; wood-worm

36. உலை : வருந்து ; to be vexed
உழை : துன்புறு ; to endure hardship
உளை : அழை ; to call or invite

37. உலைதல் : அலைதல் ; wandering about
உளைதல் : மனம் வருந்துதல் ; suffering in mind

38. உலைத்தல் : அலைத்தல் ; harassing
உழைத்தல் : துன்புறுதல் ; enduring hardships
உளைத்தல் : வருந்தல் ; suffering

39. உலைப்பு : வருத்தம் ; vexation
உழைப்பு : முயற்சி ; effort or endeavour
உளைப்பு : வருத்துதல் ; making sorrowful

40. உலைவு : உலைதல் ; trouble
உழைவு : யாழின் உள்ளோசை ; secondary sound of a string of yal
உளைவு : குடைச்சல் நோ ; intense pain in the limbs

41. ஊழி : யுக முடிவு ; the end of the world
ஊளி : பசி ; hunger

42. ஊழை : பித்தம் ; bile
ஊளை : நாய் நரி இடும் சத்தம் ; howl of a dog or jackal

43. எலு : கரடி ; a bear
எழு : எழு ; to rise or get up

44. எல் : ஒளி ; light
எள் : எள் ; sesamum

45. ஒலி : ஓசை ; noise or sound
ஒழி : கொல் ; to kill or destroy
ஒளி : வெளிச்சம் ; light

46. ஒலித்தல் : ஓசையிடுதல் ; sounding
ஒழித்தல் : கொல்லல் ; killing or destroying
ஒளித்தல் : பதுங்கல் ; absconding or hiding

47. கலகம் : போர்; war
கழகம் : கல்லூரி; academy or college
களகம் : பெருச்சாளி ; mountain rat

48. கழங்கம் : சூதாடு கருவி; conical pieces in dice
களங்கம் : மாசு; blemish, tarnish

49. கலங்கு : அழு ; to weep
கழங்கு : ஓராடல் ; a play among females
களங்கு : களங்கம் ; blemish

50. கலப்பு : கலத்தல் ; mixing
கழப்பு : சோம்பல் ; laziness
களப்பு : கடலில் ஆழமற்ற பகுதி ; shallow part of the sea

51. கலம் : உண் கலம் ; eating vessel
களம் : போர்க் களம் ; battle-field

52. கலன் : ஆபரணம் ; ornament
களன் : இடம் ; place

53. கலி : கடல் ; sea
கழி : மிகுதி ; abundance
களி : களிப்பு ; joy, delight

54. கலித்தல் : ஆரவாரம் ; a clamour
கழித்தல் : நீக்குதல் ; evacuating
களித்தல் : மதர்த்தல் ; rejoicing

55. கலிப்பு : மிகுதி ; abundance
கழிப்பு : கழித்தல் ; emission
களிப்பு : இன்பம் ; joy, delight

56. கலை : கல்வி ; the arts and sciences
கழை : கரும்பு ; sugar-cane
களை : குற்றம் ; fault, defect

57. கலைதல் : குலைதல் ; dispersing as an assembly
களைதல் : அகற்றல் ; removing

58. கலைத்தல் : குலைத்தல் , dispersing
களைத்தல் : இளைப்புறல் ; being fatigued

59. கல் : கல் ; stone
கள் : மது ; toddy

60. காலம் : பொழுது ; time
காழம் : ஓர்வகை உடை ; a garment
காளம் : எட்டி மரம் ; strychnos

61. காலி : கழிவு நாள் ; the past day
காழி : சீகாழி ; a town
காளி : காளி ; the goddess Kali

62. காலை : விடியற்காலம் ; dawn, morning
காளை : இளையோன் ; a youth

63. கால் : கால் ; leg
காழ் : வயிரம் ; solidity of timber

64. கிலி : பயம் ; fear
கிழி : பணப் பொதி ; treasure tied up in a cloth
கிளி : கிளி ; parrot

65. கீல் : சந்து ; joint of the body
கீழ் : ஈனம் ; meanness
கீள் : கூறு ; part or portion

66. குழகு : இளமைச் செவ்வி ; youthfulness
குளகு : இலையுண்ணும் விலங்குணவு ; food of graminivorous animals

67. குலம் : சாதி ; tribe or family
குளம் : தடாகம் ; tank

68. குழம்பு : கஞ்சி ; thick gruel
குளம்பு : ஓர் சார் விலங்கின் பாதம் ; hoof of an animal

69. குழவி: குழந்தை ; an infant
குளவி : ஓர் வண்டு ; wasp

70. குலி : மனைவியின் மூத்த சகோதரி ; wife's elder sister
குழி : பள்ளம் ; a pit
குளி : நீராடு ; to bathe

71. குழித்தல் : குழியாக்குதல் : forming pits
குளித்தல் i நீராடல் ; bathing

72. குலை : கொத்து ; a bunch
குழை : குண்டலம் ; ear jewel

73. குலைதல் : அவிழ்தல் ; becoming loose
குழைதல் : குழைதல் ; being mashed

74. கூலம் : கடற் கரை ; sea-shore
கூழம் : எள் ; sesamum
கூளம் : வைக்கோற் றாள் ; broken pieces of straw

75. கூலி : நாட் கூலி ; daily pay
கூளி : பேய் ; devil

76. கேழ் : உவமை ; comparison
கேள் : உறவு ; relationship

77. கொலு : சேவை ; service
கொழு : காறு ; ploughshare
கொளு : பழுவெலும்பு ; rib

78. கொல்லுதல் : கொல்லல்; killing
கொள்ளுதல்: வாங்குதல்; receiving

79. கொல்லை: சோலை; grove
கொள்ளை: மிகுதி; abundance

80. கோலம்: அழகு; beauty
கோழம்: ஓர் வகைப் பாஷாணம்; a mineral poison
கோளம்: உண்டை; a globe

81. கோலி: மயிர்; hair
கோழி: கோழி; fowl
கோளி: கொள்வோன்; recipient

82. கோலே: மிளகு; pepper
கோழை: கொடுமை; cruelty
கோளை: எலி; rat

83. கோல்: செங்கோல்; sceptre
கோழ்: கொழுப்பான; fat
கோள்: குறளை; aspersion or calumny

84. சலம்: நீர்; water
சளம்: பொய்; falsehood

85. சாலல்: மிகல்; being abundant
சாழல்: ஓர் விளையாட்டு; a kind of female play of clapping hands

86. சாலே: வீதி; street
சாழை: மகளிர் ஆடல்; girls' game accompanied with clapping of hands
சாளை: ஓர் மீன்; the sardine

87. சிதல்: கறையான்; white-ant
சிதள்: புண்ணின் அசடு; scab of a sore

88. சுழிதல்: சுழிபோல் வளைதல்; becoming curved
சுளிதல்: சினத்தல்; being angry

89. சுழித்தல்: எழுச்சி; rising up in a whirl
சுளித்தல்: கோபம்; anger

90. சுல்லி: அடுப்பு; fire-place
சுள்ளி: மா மரம்; mango tree

91. சூலி: கர்ப்பிணி; pregnant woman
சூழி: உச்சி; crown of the head
சூளி: ஆண் மயிர்; men's hair

92. சூலிகை: இடி தாங்கி; lightning protector
சூழிகை: கள்; palm-wine
சூளிகை: அரமியம்; terrace

93. சூலே: ஓர் நோய்; a disease
சூளை: குயவன் சூளை; a kiln or furnace

94. சூல்: கர்ப்பம்; pregnancy
சூழ்: சுற்றிவர; to go round
சூள்: ஆணை; conditional oath

95. சூல்தல்: கருப்பங் கொள்ளல்; becoming pregnant
சூழ்தல்: சுற்றல்; encircling
சூள்தல்: ஆணையிடுதல்; taking an oath

96. சோழம் : சோழ நாடு ; the Chola country
சோளம் : ஓர் பயிர் ; a kind of gram

97. சோலி : காரியம் ; business or affair
சோழி : பலகறை ; cowry
சோளி : பை ; satchel or bag

98. தலம் : இடம் ; place
தழம் : தயிலம் ; ointment
தளம் : தள வரிசை ; floor or pavement

99. தலை : தலை ; head
தழை : இலை ; leaf or foliage
தளை : கால் விலங்கு ; fetter

100. தலைப்படுதல் : எதிர்த்தல் ; encountering
தளைப்படுதல் : சிறைப்படல் ; being imprisoned

101. தலையழித்தல் : அடியோடு கெடுத்தல் ; ruining utterly
தலையளித்தல் : காத்தல் ; protecting

102. தாலம் : பனை ; the palmyra
தாழம் : அமைதி ; calmness
தாளம் : ஓர் வாத்தியம் ; a kind of cymbal

103. தாலி : மங்கல நாண் ; the nuptial badge
தாழி : குடம் ; a large pot
தாளி : பனை மரம் ; the palmyra palm

104. தால் : பிள்ளைக்கவியி லோர் பருவம் ; cradle songs
தாழ் : தாழ்க் கோல் ; a bolt
தாள் : கால் ; leg

105. துலக்குதல் : விளக்குதல் ; polishing
துளக்குதல் : அசைத்தல் ; shaking or moving

106. துலை : வெகு தூரம் ; long distance
துழை : துடுப்பால் துழாவிச் செல் ; to propel by oars
துளை : துவாரம் ; hole

107. தெழி : ஒலி ; great noise
தெளி : தூவு ; to sprinkle or strew

108. தெழித்தல் : அதட்டல் ; vociferating
தெளித்தல் : ஒலித்தல் ; sounding

109. தொலை : தூரம் ; dong distance
தொளை : துவாரம் ; hole

110. தொலைத்தல் : கொல்லல் ; destroying
தொளைத்தல் : துளையிடுதல் ; perforating

111. தொல்லை : பழமை ; antiquity
தொள்ளை : துளை ; perforation

112. தோலன் : அற்பன் ; mean fellow
தோழன் : பாங்கன் ; companion

113. தோலி : பழத் தோல்; peel or rind
தோழி : பாங்கி ; a lady's maid
தோளி : ஒருவகைச் சிவிகை ; a litter

114. தோல் : தோல் ; skin, leather
தோள் : புயம் ; shoulder

115. நலி : மெலி ; to waste or pine away
நளி : குளிர்ச்சி ; frigidity

116. நாலி : முத்து ; pearl
நாழி : உட்டுளை ; anything tubular
நாளி : கள் ; toddy

117. நாலிகை : மூங்கில் ; bamboo
நாழிகை : நாழிகை ; an Indian hour of 24 minutes

118. நால் : நான்கு ; four (4)
நாழ் : செருக்கு ; pride
நாள் : காலம் ; time in general

119. நீலம் : நீல நிறம் ; blue colour
நீளம் : நெடுமை ; length

120. பசலை : பசப்பு ; sallowness
பசளை : உரம் ; manure

121. பலம் : வலி ; strength
பழம் : கனி ; fruit

122. பலி : பிச்சை ; alms in general
பழி : குற்றம் ; fault

123. பலு : பலகறை ; cowry
பழு : விலா ; side
பளு : கனம் ; heaviness

124. பலை : பழம் ; fruit
பழை : கள் ; toddy
பளை : விலங்கு முதலியவற்றின் வளை ; lair of a beast

125. பல்லி : கெவுளி ; wall-lizard
பள்ளி : முனிவர் வாசம் ; hermitage

126. பாலம் : ஆற்றுப் பாலம் ; a bridge
பாளம் : தகட்டு வடிவம் ; flattened shape

127. பாலி : ஓர் மொழி ; Pali language
பாழி : விலங்கின் படுக்கை ; litter of a beast
பாளி : பாசறை ; encampment

128. பாலை : ஓர் நிலம் ; desert tracts
பாளை : பாளை; flower-sheath or spatha of palmyra, coconut, areca palms

129. பால்: பால்; milk
பாழ்: சூனியம்; vacuum of the mind

130. பிலா: பலா; jack tree
பிழா: இறை கூடை; baling basket

131. பிழை: துன்பம்; affliction
பீளை: கண் மலம்; rheum

132. புகல்: தஞ்சம்; asylum
புகழ்: கீர்த்தி; praise

133. புலம்: அறிவு; knowledge
புளம்: அண்ணம்; upper palate

134. புலி: புலி; a tiger
புளி: புளிய மரம்; tamarind tree

135. புழுகு: அம்புத் தலை; arrow-head
புளுகு: சுத்தப் பொய்; obvious lie

136. புலை: புலால்; fish
புழை : துளை; hole
புளை: அலங்கரிக்கப்படு; to be adorned

137. புல்: புல்; grass
புள்: பறவைப் பொது; birds in general

138. புல்லி: புறவிதழ்; external petal of flowers
புள்ளி: மதிப்பீடு; apprizement

139. பூழை: சிறு வாயில்; wicket gate
பூளை: இலவம் பஞ்சு; silk-cotton

140. பொலி: தூற்று நெல்; unsifted paddy in a heap
பொழி: மழை பெய்; pouring as rain
பொளி: துளை; hole

141. பொலிப்பு: புணர்ச்சி; act of covering (especially by a bull)
பொழிப்பு : சுருக்கம்; abstract

142. பொலிவு : மிகுதி; abundance
பொழிவு : பொழிகை; raining
பொளிவு : பொளிகை ; chiselling

143. போல் : மூங்கில்; bamboo
போழ் : பிள; to split

144. மலை : மலை; hill, mountain
மழை : மழை; rain

145. மல்லன் : மல்லாடுவோன்; wrestler
மள்ளன் : உழவன்; agricultural labourer

146. மாலை : தொடை; garland
மாழை : அழகு; beauty
மாளை : புளியம் பட்டை; bark of tamarind tree

147. மால் : திருமால்; Vishnu
மாள் : சா ; to die

148. முலை : கொங்கை; breast of women
முழை : மலைக் குகை; mountain-cave
முளை : அங்குரம் ; a sprout

149. மூலி : செடி கொடி; plant
மூழி : அகப்பை; a ladle
மூளி : உறுப்புக் குறை; deformity

150. மூலை : கோணம்; corner
மூழை : அகப்பை; a ladle
மூளை : மூளை; brain

151. மூழ்தல் : பற்றிக்கொள்ளுதல் ; seizing
மூள்தல் : மூளல்; catching fire

152. மேழம் : ஆடு; ram
மேளம்: மேள வாத்தியம்; drum

153. வலப்பம் : கற் குச்சி ; slate-pencil
வழப்பம் : பழக்கம் ; practice or custom
வளப்பம் : கொழுப்பு; luxuriance

154. வலம் : வலப் பக்கம்; the right side
வளம்: அழகு; beauty

155. வலவன் : சமர்த்தன்; a capable man
வளவன் : சோழன்; the Chola

156. வலன் : வலம்; strength
வளன் : அழகு; beauty

157. வலி : வல்லமை; strength
வழி : நடவை; way or path
வளி : காற்று; wind
158. வலு : பலம்; strength
வழு : பிழை; error or mistake
வளு : இளமை; youth
159. வலை : மீன் வலை; fish net
வழை : சுரபுன்னை மரம்; a kind of tree
வளை : கைவளை; bracelet
160. வலையம் : வட்டம், பிரிவு; circle or tract of land
வளையம் : வட்டம்; hoop or ring.
161. வல்லி : படர் கொடி; a creeper
வள்ளி : வள்ளிக் கூத்து; a kind of dance
162. வல்லை : கால விரைவு; quickness
வள்ளை : ஓர் கொடி; a water plant
163. வாலி : இந்திரன் மகன் வாலி; Vali, son of Indra
வாழி : "வாழ்க"; "may you prosper !"
வாளி : அம்பு; arrow
164. வாலை : மகளிர் பருவத்தொன்று; a girl under maturity
வாழை : வாழை மரம்; the plaintain tree
வாளை : ஓர் மீன்; a kind of fish
165. வால் : வால்; tail
வாழ் : சீவி; live and prosper
வாள் : ஓர் ஆயுதம்; a sword
166. விலக்கம் : வழங்காமல் விலக்குகை; prohibition
விளக்கம் : தெளிவு; elucidation
167. விலக்குதல் : மாற்றல்; averting
விளக்குதல் : மினுக்குதல்; polishing
168. விலவு : விலா; sides of the body
விழவு : திருவிழா ; festival
விளவு : விளா மரம்; wood-apple tree
169. விலா : பழு; the sides of a body
விழா : விழவு; festival
விளா : விளா மரம்; wood-apple tree
170. விழி : கண்; the eye
விளி : அழை; to call
171. விலை : கிரயம்; price
விழை : விரும்பு; to desire
விளை : கொல்லை; high ground not supplied with water

172. விழைதல் : ஆசைப் பெருக்கம்; intense desire
விளைதல் : உண்டாதல்; being formed

173. வெல்லம் : கரும்பின் கட்டி; coarse sugar from the sugar cane
வெள்ளம் : நீர்ப் பெருக்கு; flood

174. வேலம் : தோட்டம்; garden
வேழம் : கரும்பு, யானை; sugar-cane, elephant
வேளம் : வாசத் தலம்; quarters

175. வேலை : தொழில்; work
வேளை : காலம்; time

176. வேல் : கை வேல்; lance or spear
வேள் : விவாகஞ் செய்; to marry

## பொருள் வேறுபாடின்றி வழங்கப்படும் ழகர ளகரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆழ்வார் | — | ஆள்வார் | : | ஆட் பெயர் |
| இழிவு | — | இளிவு | : | அவமானம், தாழ்வு |
| ஈழை | — | ஈளை | : | ஒரு நோய் |
| உழறுதல் | — | உளறுதல் | : | பிதற்றுதல் |
| உழி | — | உளி | : | இடம், காலம் |
| உழுந்து | — | உளுந்து | : | நவ தானியங்களில் ஒன்று |
| உழுவை | — | உளுவை | : | ஒரு வகை மீன் |
| குழறுதல் | — | குளறுதல் | : | பெருஞ்சத்த மிடுதல் |
| கொழுக்கிப் புழு | — | கொளுக்கிப் புழு | : | பாண்டு ரோகத்துக்குக் காரணமான ஒரு வகைப் புழு |
| குழிகை | — | குளிகை | : | உருட்டப்பட்ட மருந்து |
| குழைச்சு | — | குளைச்சு | : | சந்து, பொந்து |
| சுழித்தல் | — | சுளித்தல் | : | முகங் கோணுதல் |
| துழாய் | — | துளாய் | : | துளசி |
| பவழம் | — | பவளம் | : | நவமணிகளில் ஒன்று |
| வழும்பு | — | வளும்பு | : | நிணம் |

## பயிற்சி

A. பின்வரும் வாக்கியங்களில், எழுத்துப் பிழைகள் உளவேல், திருத்தியெழுதுக ;—

அ. 1. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குன்சு
2. மாலை வேழைகளிற் கடற்க்கரையிலே உலாவி வருவது நன்று
3. சோளப் பயிற் செய்கை இந்தியாவிலும் நடைபெறுகின்றது

4. 'அரஞ் செய விரும்பு' என்பது ஆத்திசூடி
5. அயல் வீட்டுக் கிளவி அடிக்கடி இருமாயணம் படிப்பாள்
6. பருந்து பறந்துவந்து கோளிக் குன்சுகளைப் பிடித்துக் கொண்டு போய் விட்டது
7. பளங்களுள்ளே வாளைப்பழம் மலிவானது
8. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
9. கர்ப்புடைய மங்கையரைக் கருதவேண்டாம்
10. வீளாத படுகுளியில் வீளவேண்டாம்

ஆ. 1. 'சாதி யிறண்டொழிய வேரில்லை' என்றது நல்வழி
2. மலைக்குமேல் நான் நின்ட இடத்துக்கு எவருமே ஏறிவர இயலவில்லை
3. கோபாலன் பச்சைக் கிழியைப் பிடித்துக் கூண்டில் அடைத்தான்
4. செம்மரியாடுகளிலிருந்து சில தேசஞ்களில் ஒரு வகைக் கம்பளி பெறுகிறுர்கள்.
5. உன்றை ஆடையிலே இரும்புக்கரள் பிடித்திருக்கிறது
6. கந்தன் ஒரு கிணரு தோண்டிக் கட்டுவித்தான்
7. பளம் நளுவிப் பாலில் விளுந்தது
8. மாணிக்கன் தனக்கு அழிக்கப்பட்ட உணவினை மென்று திண்டான்
9. தென்னஞ் கன்றுகள் கடற்கரையிலே செளிப்பாக வளர்கின்றன
10. ஆளந் தெரியாத குன்றிலே அவன் காலை வைக்கிருன்

இ. 1. அனுக்குண்டு போடப்பட்டபோது அளிந்த நாடுநகரங்கள் பல
2. முசிரீ ஒரு காலத்திலே சிறப்புவாய்ந்த துரைமுகமாக விளங்கிற்று
3. வீடுகளிலே சேருகின்ற குப்பைகளைக் குளிகள் தோன்றியும் புதைப்பதுண்டு
4. செய்யுள்களுக்கு உரை எளுதி வெளியிட்டால் எல்லோரும் படித்து இன்புறுவார்கள்
5. காட்டிலுள்ள மரங்களைத் தரித்துச் சிலர் விரகாகவும் உபயோகிப்பர்
6. சிரந்த தீனி வகைகளையெல்லாம் ஊட்டி ஆடுகளைக் கொளுப்பேறச் செய்தார்கள்
7. வயது முதிர்ந்த தந்தையார் தமது புத்திரர்களை அளைத்து, "குழந்தைகாள், நீங்கள் கவனமாகப் படித்தாலொளியப் பரீட்சையிலே சித்தியடைய மாட்டீர்கள்" என்று கூறினுர்
8. மளை பெய்து சிறிது நேரஞ் சென்றபின் புல் நுணிகளிலே மளைநீர் துழியாய்க் கிடந்தது
9. பன்ச வர்ணக் கிழிகள் மரங்களிலே கூட்டமாக வந்திறங்கின
10. அரச குடும்பத்தினர் வாள்கின்ற மாளிகையை அரண்மனை என்பதுண்டு

ஈ. 1. சுப்பிரமணியன் அந்த வளியால் நடந்து போனதை யாண் கண்டேன்

2. எங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள மாழிகையில் ஏறி நிண்டு பார்த்தால் அந்தக் குழம் வடிவாகத் தெரியும்.

3. திருநாவுக்கரசு நாயனுரின் குருபூசைத் தினத்தன்று ஏளைகளுக்குஉணவு அழித்தார்கள்.

4. மிகப் பளைய காலத்திலே அழுக்குத் துணிகளைச் சுமந்து செல்வதற்குக் களுதைகள் பயன்படுத்தப்பட்டன.

5. ஆசிரியர் வகுப்பிலே கூருவனவற்றைக்கூட எளுதமுடியாத மாணவர்கள் எங்ஙனம் பரீட்சையிலே சித்தியடைவார்கள்?

6. தன் குன்சுகளுக்கு இரை தேடிக்கொன்று வருவதற்காக அந்தப் பறவை பரந்து போயிற்று.

7. அந்தத் தோட்டத்திலிருந்த மான் கண்டுகளையெல்லாம் ஒரு ஆடு அளித்துவிட்டது.

8. சென்ற ஞாயிற்றுக்கிழமை கடர்க்கரையில் உலாவச் சென்ற இழைஞன் ஒருவனை மூண்டு குடிகாறர் மறித்து அவனிடமிருந்த பணம் முளுவதையும் பரித்துக்கொண்டு போய்விட்டார்களாம்.

9. பளைய தமிழகத்தின் சரித்திரத்தை நன்கு படித்தால் சேர சோள பான்டிய மன்னர்களைப்பற்றி அறிந்து கொள்ளலாம்.

10. மக்களுள்ளே ஒயாமல் உளைத்தவர்கள்கூட சில வேழைகளில் வறுமையெய்திவிடுகின்றனர்.

11. நோயின்றி வாழ விரும்புவர்கள் காலையில் விடிவதற்கு முன்னதாக எளுந்து குழிர்ந்த தண்ணீரிலே குழிக்கவேண்டும்.

12. தமிள் மொழியின் வளற்சியை விரும்புவோர் இயண்டளவுக்கு முயர்ச்சி செய்தல் வேண்டும்.

B. பின் வரும் சொற்களை, அவ்வவற்றின் வேறுபாடு விளங்குமாறு, வாக்கியங்கள் அமைத்தெழுதுக :—

1. அண்ணம், அன்னம்; எண்பது, என்பது; கணி, கனி; கண்ணி, கன்னி; காணம், பானம்.

2. கரப்பு, கறப்பு; குரு, குறு; குரைத்தல், குறைத்தல்; செரி, செறி, துரவு, துறவு.

3. அலி, அழி, அளி; இலை, இழை, இளை; ஒலித்தல், ஒழித்தல், ஒளித்தல்; தலை, தழை, தளை; பொலிவு, பொழிவு, பொளிவு.

C. பின்வரும் வாக்கியங்களிலே - கீறிடப்பட்ட இடங்களில்- பொருத்தமான சொற்களை வைத்தெழுதுக :—

i. காவோலை......குருத்தோலை சிரிக்கும்.

ii சித்திரமும்......செந்தமிழும்......

iii. பலகால் எறும்பூரக் கல்லும்......

•

iv. கீழோராயினும்......
v. மேழிச் செல்வம்......படாது.
vi. ......மாடானல் உள்ளூரில் விலைப்படாதா?
vii. மின்னுக்கெல்லாம் பின்னுக்கு......
viii. .......கல்வி சிலையில்.......
ix. .......அழுத கண்ணீர் கூரிய......ஒக்கும்.
x. எழுத்தறிவித்தவன்......ஆகும்.

D. பின்வரும் வடமொழி சொற்களைத் தமிழ் உருவமாக்கி, வாக்கியங்களில் அமைத்தெழுதுக:—

பங்கஜம், ஜுவாலை, ஔஷதம், விஷம், சாஸ்திரம், உத்ஸவம், ஹரிசனம், ஹிருதயம், ஹோமம், பக்ஷணம்.

E. முந்திய (D. யிலுள்ள) வினவிற் கொடுக்கப்பட்ட சொற்களுக்குத் தனித் தமிழ்ச் சொற்கள் தருக.

F. பின்வரும் சொற்களைத் திருத்தி, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்தெழுதுக:—

அ. இத்தினை, எண்ணை, கண் முழித்தல், கண்டுக்குட்டி, காச்சல், கிணத்தடி, குடும்பி, சிவர், தலகணி, தண்ணி.

ஆ. துறப்பு, தேள்வை, நேத்து, நொங்கு, பாவக்காய், பிலாமரம், பிராந்து, புடல், புண்ணாக்கு, மம்பட்டி.

இ. கோர்வை, சுற்றவாளி, நாநூறு, நேத்து, பூர்க்கும், மதவு, மம்பட்டி, வீடுமேய்தல், வெத்திலை, வெண்ணை.

G. பின்வரும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்கஞ் செய்து வாக்கியங்களில் அமைத்தெழுதுக:—

அ. லோகம், ரங்கம், ரசாயனம், ரட்சகர், ரத்தம், ராச்சியம், ராட்டினம், ரிஷி, ரேகை, உரோமம்.

ஆ. கர்த்தா, கல்பம், சப்தம், சம்பகம், சூர்ணம், நிர்ணயம், பக்வம், புண்யம், வம்சம், வாக்.

இ. அநந்தம், அநாவசியம், அநேகம், அநுகூலம், அநுதினம், அநுமானம், அநுமதி, அநுவாதம், அநுவதித்தல், அநுமேயம்.

ஈ. கவநம், தநு, திநம், நியமநம், பவநம், புநிதம், மநு, ஸந்நிதி, ஜநநம், ஜீவநம்.

# 2. சொல்

## எதிர்ப்பாற் சொற்கள்

| | |
|---|---|
| அச்சன் | அச்சி |
| அசடன் | அசடி |
| அடியான் | அடியாள் |
| அண்ணன் | அக்கா (அண்ணி) |
| அந்தணன் | அந்தணி |
| அப்பன் | அம்மை |
| அம்பட்டன் | அம்பட்டத்தி, அம்பட்டச்சி |
| அமைச்சன் | அமைச்சி |
| அரசன் | அரசி |
| அலவன் | பெடை நண்டு |
| அழகன் | அழகி |
| ஆசிரியன் | ஆசிரியை |
| ஆடவன் | பெண்டு |
| ஆடூஉ | மகடூஉ |
| ஆண்டவன் | ஆண்டவள் |
| ஆதிரையான் | ஆதிரையாள் |
| ஆயன் | ஆய்ச்சி |
| இடையன் | இடைச்சி |
| இந்திரன் | இந்திராணி |
| இல்லான் | இல்லாள் |
| ஈசுவரன் | ஈசுவரி |
| உத்தமன் | உத்தமி |
| உபாத்தியாயன் | உபாத்தியாயினி |
| உழவன் | உழத்தி |
| ஊமையன் | ஊமைச்சி |
| ஊரான் | ஊராள் |
| எசமான் | எசமானி, எசமாட்டி |
| எயினன் | எயிற்றி |
| ஐயன் | ஐயை |
| ஒருவன் | ஒருத்தி |
| கசடன் | கசடி |
| கடா | மறி |
| கடுவன் | மந்தி |
| கணக்கன் | கணக்கச்சி |
| கணவன் | மனைவி, கணவாட்டி |
| கலை | பிணை |
| கள்ளன் | கள்ளி |
| களிறு | பிடி |
| கன்னான் | கன்னாத்தி |
| கனவான் | கனவதி |
| காதலன் | காதலி |
| காவற்காரன் | காவற்காரி |
| காளை | பசு |
| கிழவன் | கிழவி. கிழத்தி |
| குணவான் | குணவதி |
| குறளன் | குறட்டி |
| குமரன் | குமரி |
| குமாரன் | குமாரி |
| குரு | குருத்தினி |
| குருடன் | குருடி |
| குறவன் | குறத்தி |
| கூகை | போத்து |
| கூத்தன் | கூத்தி |
| கூனன் | கூனி |
| கொல்லன் | கொல்லிச்சி |
| கொழுந்தன் | கொழுந்தி |
| கோமான் | கோமா |
| கோபாலன் | கோபிகை |
| சகோதரன் | சகோதரி |
| சிவம் | சத்தி |
| சிவன் | சிவை |
| சிற்றப்பன் | சின்னம்மை |
| சிறியன் | சிறியள் |
| சிறுக்கன் | சிறுக்கி |
| சிறுவன் | சிறுமி |

| | | | |
|---|---|---|---|
| சீமான் | சீமாட்டி | பல்லன் | பல்லி |
| சீனன் | சீனத்தி | பள்ளன் | பள்ளி |
| செட்டி | செட்டிச்சி | பறையன் | பறைச்சி |
| செல்வன் | செல்வி | பாக்கியவான் | பாக்கியவதி |
| செவிடன் | செவிடி | பாங்கன் | பாங்கி |
| சேங்கன்று | கிடாரி | பாட்டன் | பாட்டி |
| சேவகன் | சேவகி | பாணன் | பாடினி, விறலி |
| சேவல் | பேடு, பெட்டை | பாதகன் | பாதகி |
| சோழியன் | சோழிச்சி | பார்ப்பனன் | பார்ப்பனி |
| தட்டான் | தட்டாத்தி | பார்ப்பான் | பார்ப்பாத்தி |
| தச்சன் | தச்சிச்சி | பிராமணன் | பிராமணத்தி |
| தந்தை | தாய் | பிரான் | பிராட்டி |
| தம்பி | தங்கை | பிரியன் | பிரியை |
| தம்பிரான் | தம்பிராட்டி | பின்னோன் | பின்னை |
| தமிழன் | தமிழிச்சி | பீட்டன் | பீட்டி |
| தமையன் | தமக்கை | புண்ணியவான் | புண்ணியவதி |
| தலைவன் | தலைவி | புத்திரன் | புத்திரி |
| தனவந்தன் | தனவந்தி | புதல்வன் | புதல்வி |
| தனவான் | தனவதி | புலவன் | புலமையள், புலத்தி, புலவி |
| தனையன் | தனையை | | |
| தாசன் | தாசி | புலையன் | புலைச்சி |
| திருடன் | திருடி | பெருமகன் | பெருமகள் |
| திருமால் | திருமகள் | பெருமான் | பெருமாட்டி |
| திருவாளன் | திருவாட்டி | பேரன் | பேர்த்தி |
| தூர்த்தன் | தூர்த்தை | பொன்னன் | பொன்னி |
| தேவன் | தேவி | மணவாளன் | மணவாட்டி |
| தொண்டன் | தொண்டிச்சி | மணாளன் | மணாட்டி |
| தோழன் | தோழி | மருகன் | மருகி |
| நடிகன் | நடிகை | மருத்துவன் | மருத்துவச்சி |
| நண்பன் | நண்பி | மருமகன் | மருமகள் |
| நம்பி | நங்கை | மாணவன் | மாணவி |
| நல்லான் | நல்லாள் | மாணாக்கன் | மாணாக்கி |
| நாயன் | நாய்ச்சி | மாமன் | மாமி |
| நாயகன் | நாயகி | மித்திரன் | மித்திரை |
| நான்முகன் | கலைமகள் | முடவன் | முடத்தி |
| நிபுணன் | நிபுணை | முதலியார் | முதலிச்சி |
| நெட்டையன் | நெட்டைச்சி | மூதாதை | மூதாட்டி |
| பண்டிதன் | பண்டிதை | மைத்துனன் | மைத்துனி |
| பத்தா | பத்தினி | யுவன் | யுவதி |
| பரவன் | பரத்தி | யௌவனன் | யௌவனை |

| | | | |
|---|---|---|---|
| வண்ணன் | வண்ணாத்தி | வீரன் | வீரி |
| வணிகன் | வணிகச்சி | வெள்ளாளன் | வெள்ளாட்டி |
| வலைஞன் | வலைச்சி | வேளாளன் | வேளாட்டி |
| வாலன் } | வாலை | வேடன் | வேடிச்சி |
| வாலிபன் } | | வேடுவன் | வேடுவச்சி |
| விருத்தன் | விருத்தை | வேலைக்காரன் | வேலைக்காரி |

## ஆண்பால் பெண்பால் இரண்டுக்கும் பொதுவாய் வரும் பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| அகதி | தந்திரி | குணசாலி | மந்திரி |
| அறிவாளி | தளபதி | குழந்தை | மேதை |
| அறிவிலி | தனாதிகாரி | குற்றவாளி | வழக்காளி |
| உரோகி | தைரியசாலி | சிற்பி | வாதி |
| உலோபி | நோயாளி | சுத்தவாளி | பிரதிவாதி |
| எதிரி | பாவி | சுயம்பாகி | விவேகி |
| ஏழை | பிள்ளை | சோம்பேறி | வியாபாரி |
| காமி | புத்திசாலி | ஞானி | வைரி |
| காரியதரிசி | பேதை | | |

## எதிர்ப் பொருட் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அகங்கை | புறங்கை | ஆண்டான் | அடிமை |
| அகம் | புறம் | ஆதாயம் | நட்டம் |
| அகலம் | நீளம், ஒடுக்கம் | ஆதி | அந்தம், அநாதி |
| அகழ்தல் | தூர்த்தல் | இகம் | பரம் |
| அடருதல் | ஐதாதல் | இகழ் | புகழ் |
| அடி | முடி, நுனி | இசை | வசை |
| அடைத்தல் | திறத்தல் | இடு | எடு |
| அடைதல் | நீத்தல் | இணங்கல் | பிணங்கல் |
| அண்மை | சேய்மை | இணை | பிரி, தனி |
| அணு | மலை | இம்மை | மறுமை |
| அமாவாசை | பூரணை | இயக்கம் | நிலைப்பு |
| அழுகை | சிரிப்பு | இயற்கை | செயற்கை |
| அறம் | மறம் | இரகசியம் | பரகசியம் |
| அன்பு | வன்பு | இரவு | பகல் |
| ஆக்கம் | கேடு | இருள் | ஒளி |
| ஆக்கல் | அழித்தல் | இல்லறம் | துறவறம் |
| ஆடவர் | பெண்டிர் | இலாபம் | நட்டம் |

| | | | |
|---|---|---|---|
| இழு | தள்ளு | கனவு | நனவு |
| இளமை | முதுமை | காடு | நாடு |
| இறப்பு | எதிர்வு | காய் | கனி, பழம் |
| இறுக்கம் | இளக்கம் | காய்தல் | உவத்தல் |
| இன்சொல் | வன்சொல் | காலை | மாலை |
| இன்பம் | துன்பம் | கிழக்கு | மேற்கு |
| ஈதல் | ஏற்றல் | கிழித்தல் | பொருத்துதல் |
| ஈரம் | வரட்சி, உலர்வு | கீழ் | மேல் |
| உண்டு | இல்லை | கீழ்மை | மேன்மை |
| உண்மை | இன்மை | குணம் | குற்றம் |
| உத்தமம் | அதமம் | குரு | சீடன் |
| உதயம் | மறைவு, அத்தமனம் | குளிரான | சூடான |
| உபகாரம் | அபகாரம் | குறுக்கம் | விரிவு, அகலம் |
| உபசாரம் | அபசாரம் | குனிதல் | நிமிர்தல் |
| உபயம் | தனி | குறைவு | நிறைவு |
| உயர்வு | தாழ்வு, இழிவு | கூட்டல் | கழித்தல், குறைத்தல் |
| உருகுதல் | இறுகுதல் | கூடல் | பிரிதல் |
| உருவம் | அருவம் | கேடு | ஆக்கம் |
| உலோபி | வள்ளல் | கைதூக்கல் | கைவிடுதல் |
| உவகை | அவலம் | கொடுக்கல் | வாங்கல் |
| உறக்கம் | விழிப்பு | கொந்தளிப்பு | அமைதி |
| உறவு | பகை | கோபித்தல் | இணங்கல் |
| ஊடல் | கூடல் | கோரம் | சாந்தம் |
| எரிதல் | அவிதல் | சந்தோடம் | துக்கம் |
| எழுதல் | விழுதல் | சற்குணம் | துர்க்குணம் |
| எளிது | அரிது | சாத்துதல் | திறத்தல் |
| ஏற்றம் | இறக்கம் | சாதகம் | பாதகம் |
| ஏற்றுமதி | இறக்குமதி | சாவு | வாழ்வு |
| ஐது | செறிவு | சிக்கனம் | இடாம்பீகம் |
| ஐயம் | துணிவு | சிரிப்பு | அழுகை |
| ஒற்றுமை | வேற்றுமை | சிற்சில | பற்பல |
| ஒற்றை | இரட்டை | சிறப்பு | பொது |
| ஒழுக்கம் | இழுக்கம் | சிறிது | பெரிது |
| ஒளி | இருள் | சிறுவர் | பெரியர் |
| ஒறுப்பு | மலிவு | சீதளம் | உட்டணம் |
| கட்டுதல் | அவிழ்த்தல் | சீதேவி | மூதேவி |
| கரடு முரடு | ஒப்புரவு, அழுத்தம் | சுகம் | துக்கம் |
| கருமை | வெண்மை | சுருங்குதல் | விரிதல் |
| கலக்கம் | தெளிவு | சுருட்டுதல் | விரித்தல் |
| கற்றார் | கல்லாதார் | சுலபம் | துர்லபம் |

| | | | |
|---|---|---|---|
| சுவர்க்கம் | நகரம் | புகழ் | இகழ் |
| சூரியோதயம் | சூரியாத்தமனம் | புண்ணியம் | பாவம் |
| செங்கோல் | கொடுங்கோல் | புணர்ச்சி | பிரிவு, நீக்கம் |
| செல்வம் | வறுமை | புதிய | பழைய |
| சோடு | தனி | புதுமை | பழமை |
| ஞாபகம் | மறதி | புராதனம் | நவீனம் |
| தட்பம் | வெப்பம் | புலவன் | பேதை |
| தண்மை | வெம்மை | புறம் | அகம் |
| தமர் | பிறர் | பூரிப்பு | வாட்டம் |
| தன்வினை | பிறவினை | பெண் | ஆண் |
| தாமதம் | துரிதம், விரைவு | பெரிய | சிறிய |
| தாழ்வு | உயர்வு | பெருக்கல் | பிரித்தல் |
| திண்மை | நொய்ம்மை | போற்றுதல் | தூற்றுதல் |
| திரவம் | கடினம் | மடமை | புலமை |
| தீமை | நன்மை | மந்தன் | விவேகி |
| திறத்தல் | பூட்டுதல் | மயக்கம் | தெளிவு |
| தூக்கம் | விழிப்பு | மருட்சி | தெருட்சி |
| தூரம் | சமீபம் | மலிவான | ஒறுப்பான |
| தூலம் | சூக்குமம் | மறம் | அறம் |
| தேடுதல் | அழித்தல் | மறைத்தல் | வெளிப்படுத்தல் |
| தேய்தல் | வளர்தல் | மாரி | கோடை |
| தேவர் | நரகர் | மிதத்தல் | தாழ்தல், அமிழ்தல் |
| தொகை | விரி | மீறுதல் | அமைதல் |
| தொடக்கம் | முடிவு | முடி | அடி |
| தோன்றல் | மறைதல், கெடுதல் | முதுமை | இளமை |
| நஞ்சு | அமிர்தம் | முன் | பின் |
| நடுதல் | பிடுங்குதல் | மூடல் | திறத்தல் |
| நண்பகல் | நள்ளிரவு | மூடன் | விவேகி |
| நன்மை | தீமை | மூப்பு | இளமை |
| நனைதல் | காய்தல் | மெய்மை | பொய்மை |
| நுண்மை | பருமை | மேடு | பள்ளம், மடு |
| பகல் | இரவு | மேன்மை | கீழ்மை |
| பகை | நட்பு, உறவு | மேனோக்கிய | கீழ்நோக்கிய |
| பண்டிதர் | பாமரர் | வண்மை | இவறன்மை |
| பருத்தல் | சிறுத்தல் | வரவு | செலவு |
| பழி | புகழ் | வளர்தல் | தேய்தல் |
| பள்ளம் | மேடு | வளைந்த | நேரான |
| பாலர் | விருத்தர் | வறுமை | செல்வம் |
| பிடித்தல் | விடுதல் | வன்மை | மென்மை |
| பிறப்பு | இறப்பு | விண் | மண் |

| | | | |
|---|---|---|---|
| விருப்பு | வெறுப்பு | வெப்பம் | தட்பம் |
| விற்றல் | வாங்கல் | வெம்மை | தண்மை |
| வினு | விடை | வெல்லுதல் | தோற்றல் |
| வீரம் | அச்சம் | வெளியே | உள்ளே |
| வீரன் | கோழை | வெற்றி | தோல்வி |
| வெந்நீர் | தண்ணீர் | வேருக | ஒன்ருக |

## ஒரு பொருட் பன்மொழி

அகத்தியர் (Agastya): கும்பயோனி, குறுமுனி, சிவமுனி

அசுரர் (Asuras): அவுணர், தானவர், திதியின் மைந்தர், தைத்தியர், நிசாசரர்.

அடி (feet): கழல், கால், தாள், பதம், பாதம்

அணிதல் (wearing): அலங்கரித்தல், சூடுதல், தரித்தல், புனைதல், பூணல், மிலேதல்

அதிகம் (abundance): உறு, கழி, கூர், சால, தவ, நனி

அந்தணர் (Brahmins): பார்ப்பார், பிராமணர், பூசுரர், மறையவர், வேதியர்

அந்திப் பொழுது (evening): சந்தி, சாய்பொழுது. சாயுங்காலம், மாலேக் காலம்

அபாயம் (danger): ஆபத்து, இடர், இடையூறு

அம்பு (arrow): அத்திரம், கணே, சரம், பாணம், வாளி

அரசன் (king): அண்ணல், இறை, காவலன், கொற்றவன், கோ, கோன், பதி, மன்னன், வேந்தன்

அருள் (grace): இரக்கம், கருணே, கிருபை, தயவு

அழகு (beauty): அணி, எழில், கவின், சுந்தரம், வடிவு, வனப்பு

அழுதல் (weeping): அரற்றல், இரங்கல், கலங்கல், புலம்பல், விம்மல்

அறிவாளிகள் (the Learned): அறிஞர், உரவோர், கற்ருேர், சான்ருேர். நிபுணர்

அன்பு (affection): ஈரம், நேயம், பரிவு, பற்று

ஆகாயம் (aerial region): அண்டம், அந்தரம், உம்பர், சேண், வான், வானம், விசும்பு, விண்

ஆசிரியன் (teacher): ஆசான், உபாத்தியாயன், குரவன், தேசிகன்

ஆடு (goat): அசம், கடா; தகர், மேடம்

ஆபரணம் (ornament): அணி, ஆரம், இழை, கலன், நகை, பணி, பூண்

ஆரம்பம் (beginning): ஆதி, தொடக்கம், முதல்

ஆற்றல் (strength): உரம், சக்தி, வலிமை

இகழ்தல் (scorning): எள்ளல், நகுதல், நிந்தித்தல், பழித்தல்

இரத்தம் (blood): உதிரம், கறை, குருதி, சோரி

இன்பம் (delight) உவகை, உவப்பு, களிப்பு, சந்தோஷம், மகிழ்ச்சி
இனம் (relation): உறவு, கிளை, சுற்றம், பரிசனம்
உடல் (body): உடம்பு, சடலம், சரீரம், மெய், மேனி, யாக்கை
உணவு (food) ஆகாரம், உண்டி, போசனம்
உதயம் (dawn): புலரி, விடியல், வைகறை
உபாத்தியாயர் (teacher): ஆசான், ஆசிரியன், குரு, தேசிகன்
ஊமை (the dumb): மூகை, மூங்கை
எருது (bull): இடபம், நந்தி, பகடு, விடை
ஒலி (sound): அரவம், ஆர்ப்பு, ஓசை, கம்பலை, தமரம், துழனி, தொனி
ஒளி (light): கதிர், காந்தி, சுடர், பிரகாசம், சோதி
கடல் (sea): உவரி, ஓதம், சமுத்திரம், சாகரம், பரவை, புணரி, வாரி, வேலை

கடவுள் (God): ஆதி, இறைவன், ஈசன், ஏகன், தெய்வம், முதல்வன்
கடை (end): அந்தம், இறுதி, ஈறு, எல்லை, முடிபு
கணவன் (husband): கொழுநன், தலைவன், நாயகன். பதி, புருஷன்
கரும்பு (sugar-cane): கழை, கன்னல்
கல்வி (education): கலை, கல்வி, வித்தை
களவு (theft): கரவு, சோரம், படிறு
காடு (forest): அடவி, ஆரணியம், கானம், சுரம், வனம்
காதணி (ear-wear): குண்டலம், குழை, தோடு
காமன் (Cupid): அனங்கன், உருவிலி, மதனன், மன்மதன், வேள்
காரணம் (cause): ஏது, நிமித்தம். மூலம், வழி
கால் (feet): அடி, கழல், சரணம், தாள், பதம், பாதம்
காற்று (wind): ஊதை, கால், பவனம், மருத்து, மாருதம், வளி
கீழ் மக்கள் (the low): அற்பர், கயவர், சிறியர், தீயோர், நீசர், புல்லர்
குடித்தல் (drinking): அருந்தல், சுவைத்தல், பருகுதல், மாந்தல்
குதிரை (horse): அசுவம். அரி, கந்துகம், கற்கி, பரி, புரவி, மா
குழந்தை (child): குழவி, சேய், பிள்ளை, மகவு
குளித்தல் (bathing): ஆடல், தோய்தல், நானம், படிதல். மஞ்சனம்
குளிர்ச்சி (coolness): ஈரம், சீதம், சீதளம், தண், நளிர், பனி
குற்றம் (fault): ஆசு, ஏதம், கசடு, களங்கம், கறை, தப்பு, தவறு, பிழை, புரை, மறு, மாசு, வசை, வடு, இழுக்கு
குறைதல் (decreasing): அருகுதல், அல்குதல், குன்றுதல், சிறுத்தல், சுருங்குதல், தேய்தல்
கூட்டம் (meeting): அவை, குழாம், கோட்டம், சபை, சமூகம், சமுதாயம், தொகுதி, தொகை
கூந்தல் (head of hair): அளகம், ஓதி, குழல், கேசம்
கேடு (ruin): அழிவு, சிதைவு, சேதம், நட்டம்
கொடி (flag): துகில், துவசம், படம், பதாகை

கொடுமை (fierceness): கடினம், குரூரம், கோரம், வக்கிரம், வஞ்சகம்
கொத்து (bunch): குலை, தாறு, மஞ்சரி
கொல்லுதல் (killing): ஒழித்தல், கோறல், செகுத்தல், செறுத்தல், தெறுதல், தொலைத்தல், படுத்தல், மாய்த்தல், வதைத்தல்
சக்கரம் (wheel): ஆழி, திகிரி, நேமி, வட்டம்
சத்தம் (sound): அரவம், ஒலி, கம்பலை
சத்தியம் (truth): ஆணை, உண்மை, வாய்மை
சந்திரன் (moon); அம்புலி, உடுபதி, சோமன், திங்கள், நிலவு, பிறை, மதி
சபை (society): அவை, குழு, கூட்டம், சங்கம்
சம்மதித்தல் (agreeing): அனுமதித்தல், இணங்குதல், உடன்படுதல், நேர்தல்
சமையம் (time): அவகாசம், காலம், செவ்வி, தருணம், போது, வாய்ப்பு, வேளை
சரசுவதி (Saraswathi): இசை மடந்தை, கலைமகள், நாமகள், வாணி
சருக்கரை (brown sugar): கட்டி, கன்னல், பாகு
சாதல் (dying): இறத்தல், ஒழிதல், துஞ்சல், பொன்றல், மடிதல், மாய்தல், மாளல், முடிதல்
சிங்கம் (lion): அரி, ஆளி, கேசரி, கோளரி, சீயம்
சினேகிதர் (friends): ஒட்டுநர், நண்பர், நயவர், தோழர்
சிரிப்பு (laughter): இளிப்பு, நகைப்பு, முறுவல்
சினம் (anger): உடற்றல், காய்தல், கோபம், சீற்றம், முனிவு, வெகுளி
சுடுகாடு (cremation ground): ஈமம், சுடலை, பிணக்காடு, மயானம்
சுத்தம் (purity): சுசி, தூய்மை, புனிதம், வால்
சுற்றம் (relatives): உறவு, ஒக்கல், கிளை, பரிசனம்
சூரியன் (sun): இரவி, எல்லி, கனலி, தினகரன், பகலவன், பரிதி, வெய்யோன்
செல்வம் (wealth): திரு, நிதி, பொருள், மாடு
சேனை (army): சைனியம், படை
சொல் (word): கிளவி, கூற்று, மாற்றம், மொழி வாக்கு
சோலை(grove): உபவனம், கா, தண்டலை, நந்தாவனம், பூங்காவனம், பொழில்
சோறு (rice): அடிசில், அன்னம், சாதம், புற்கை, போனகம்
ஞானம் (knowledge): அறிவு, ஆற்றல், போதம், வித்தகம், வித்தை விவேகம்
தடாகம் (tank): ஏரி, கயம், குளம், தடம், பொய்கை, வாவி
தந்தை (father): அப்பன், தகப்பன், தாதை, பிதா
தம்பி (younger brother): இளவல், இளையோன், பின்னவன் பின்னோன்
தமையன் (elder brother): அண்ணன், முன்னவன், முன்னோன்.

தரித்திரம்(poverty) இரப்பு, இலம்பாடு, நல்குரவு, மிடி, வறுமை
தலை (head): உச்சி, சிகரம், சிரசு, சென்னி, முடி
தாமரை (lotus): அம்புயம், கமலம், சரோருகம், பங்கயம், புண்டரிகம். மரை, முளரி
தாய்(mother): அன்னை, ஆய், மாதா
திருடர் (thieves): கள்வர், கள்ளர், சோரர்
துதித்தல் (praying): ஏத்தல், பரவல், புகழ்தல், போற்றுதல், வழுத்துதல்
துன்பம் (affliction): அல்லல், இடர், இடும்பை, இன்னல், துயர், பீடை, வேதனை
தேன் (honey): கள், தேறல், நறவு, மது
தொண்டு (service): சேவை, பணி
தோழன் (companion): கேள்வன், சிநேகிதன், துணைவன், நண்பன், பாங்கன்
தோழி (hand-maid): சகி, சிநேகிதி, சேடி, துணைவி, பாங்கி
நகை (ornament) அணி, ஆபரணம், பணி, பூண்
நட்சத்திரம் (star): உடு, தாரகை, விண்மீன்
நன்மை (goodness): உறுதி, நயம், நலம், விழுப்பம், விழுமம்
நாள் (day): எல், தினம், பகல், வைகல்
நித்திரை (sleep): அனந்தல், உறக்கம், கண்படை, துஞ்சல், துயில்
நீதி (justice): தருமம், நடு, நியாயம், நீதம், நெறி
நீர் (water): அப்பு, சலம், சிந்து, தீர்த்தம், புனல்
நெருப்பு (fire): அக்கினி, அழல், கனல், தழல், தீ, தேயு.
பக்கம் (side): இடை, சிறை, பாங்கு, பாரிசம், பால், புடை, புறம்
பகைவர் (enemies): ஏதிலார், ஒட்டார், ஒல்லார், ஒன்னுர், செறுநர், சேரலர், துன்னுர், தெவ்வர், நேரலர், மாற்றலர்
படுக்கை (bed): அமளி, கண்படை, கிடக்கை, சயனம், சேக்கை
படை (army): சேனை, தானை
பல் (teeth): எயிறு, தசனம், தந்தம்
பவளம் (coral): அரதிதம், துகிர், துப்பு, துவர்
பன்றி (pig): ஏனம், கேழல், வராகம்
பாட்டு (verse): கவி, கவிதை, செய்யுள், தூக்கு, பா, பாடல், யாப்பு
பாம்பு (snake): அரவம், உரகம், கட்செவி, சர்ப்பம், பணி, பன்னகம். பாந்தள், புயங்கம், மாசுணம்
பாயிரம் (preface): அணிந்துரை, தந்துரை, நூன்முகம், பதிகம், புனைந்துரை, பெய்துரை, பாயிரம்
பிரமன் (Brahma): அயன், திசைமுகன், நான்முகன், மலரோன்
பிள்ளை (child): குழந்தை, குழவி, சிசு, சேய், மகவு
பிறப்பு (birth): உற்பத்தி, உற்பவம், சனனம், சனிப்பு, ஜென்மம்

புகழ் (fame): இசை, ஒளி, கீர்த்தி, சீர், மீக்கூற்று, மேம்பாடு
புசித்தல் (eating): அருந்தல், உண்ணல், தின்னல், துய்த்தல், நுகர்தல்
புணர்தல் (mixing): கலத்தல், கூடல், சங்கமித்தல், புல்லல்
புத்தகம் (book): ஏடு, நூல், பனுவல்
புலி (tiger): உழுவை, கொடுவரி, வயமா, வியாக்கிரம், வேங்கை
புழுதி (dust): துகள், தூசி, தூளி, பொடி, பூழி
பூ (flower): அலர், தார், புட்பம், போது, மலர், வீ
பூமி (earth): அகிலம், காசினி, குவலயம், சகம், ஞாலம், தரணி, பார், புவனம், புவி, பூ, மண், மண்டலம், வையகம், வையம்
பெண் (woman): அணங்கு, அரிவை, காரிகை, கோதை, தையல், நாரி, பாவை, பூவை, பேதை, மகடூஉ, மங்கை, மடந்தை, மாது, வனிதை
பெருமை (greatness): தகை தகைமை, பீடு, மாட்சி, மாண்பு, விறல், வீறு
பொய் (falsehood): இழுக்கு, தப்பு, படிறு, கிருத்திரமம்
பொழுது (time): அமையம், கால், காலை, பருவம், போது, வேளை
பொன் (gold): ஆடகம், இரணியம், சாம்பூநதம், சொர்ணம், தசும்பு
போர் (war): அமர், இகல், சமர், செரு, மலைவு, யுத்தம்
மகள் (daughter): குமாரத்தி, குமாரி, தனயை, புத்திரி, புதல்வி
மகன் (son): குமரன், குமாரன், சுதன், தனயன், புத்திரன், புதல்வன், மைந்தன்
மதில் (wall): அரண், இஞ்சி, எயில்
மயக்கம் (swooning): அயர்வு, பித்தம், பிரமை, மயல், மருள்
மலை (mountain): அசலம், கிரி, குன்று, சிலம்பு, நகரம், நாகம், பொருப்பு, வெற்பு
மனம் (mind): அகம், உள், உள்ளம், உளம், சித்தம், நெஞ்சு
மனிதர் (men): ஆடவர், நரர், மக்கள், மாந்தர், மானிடர்
மனைவி (wife): இல்லாள், கிழத்தி, தலைவி, பாரி, பெண்சாதி
மாணவன் (student): சீடன், மாணாக்கன்
மாலை (garland): ஆரம், கண்ணி, கோதை, தாமம், தார், தொடை
மிகுதி (abundance): அதிகம், ஆற்ற, உறு, கழி, கூர், சால, தவ, நனி, பெரிது, மிகை
முட்டை (egg): அண்டம், கரு, கோசம், சினை
முத்து (pear;): தரளம், நித்திலம்
முதல் (beginning): ஆதி, ஆரம்பம், தொடக்கம்
முருகன் (Muruga): ஆறுமுகன், கந்தன், காங்கேயன், குமரன், சண்முகன், சேய்
முலை (breast): கொங்கை, கொம்மை, தனம், நகிலம், பயோதரம்
முனிவர் (sages): அடிகள், அறவர், இருடிகள், தபோதனர், தாபதர், துறவோர், நீத்தோர், மாதவர், யோகர்

மூங்கில் (bamboo) ஓங்கல், கழை, கிளை, சேய், பணை, புணை, வேய்
மெய் (truth): ஆணை, உண்மை, சத்தியம். திடம், திண்மை, நிச்சயம், பட்டாங்கு, வாய்மை

யமன் (Yama): அந்தகன், காலன், கூற்றுவன், தருமன், மறலி
யாகம் (sacrifice) ஓமம், மகம், வேள்வி
யானை (elephant): அத்தி, கயம், கரி, களிறு, குஞ்சரம், தும்பி, மாதங்கம் வாரணம், வேழம்

வண்டு (beetle): அளி, சராகம், சாளிகை, சுரும்பு, மதுகரம், மதுாகம்
வணங்குதல் (adoration), அஞ்சலி செய்தல், இறைஞ்சுதல், கும்பிடல், தொழுதல், பணிதல்

வயல் (field): கழனி, பண்ணை, பழனம், பானல், புலம்
வயிறு (stomach): உதரம், மடி, மோடு
வலி (strength); அடல், ஆண்மை, உரம், உறுதி, பீடு, வன்மை, விறல்
வழி (path): ஆறு, ஒழுக்கம் நெறி, மார்க்கம்
வளமை (fertility): கொழுமை, செழுமை, மல்லல், யாணர், வளம்
வளி (wind): கால், காற்று, வாயு
வாசனை (fragrance): கடி, கந்தம், கொங்கு, நறை, நாற்றம், பரிமளம், மணம், முருகு, வம்பு, விரை

வானம் (sky): எழிலி, கார், கொண்டல், கொண்மூ, புயல், மஞ்சு, முகில், வான், விசும்பு, விண்

விட்டுணு (Vishnu): அரி, கேசவன், நாராயணன், பதுமநாதன், மாதவன், மாயவன், மால், முகுந்தன்

விடை (answer): உத்தரம், பதில், மறுமொழி
விநாயகன் (Vinayaga): ஐங்கரன், கணபதி, கயமுகன், விக்கினேசுவரன்
விரைவு (speed): ஒல்லை, கெதி, துரிதம், வல்லை, விசை, வேகம்
வில் (bow): கார்முகம், கோதண்டம், சாபம், சிலை, தனு
விழி (eye): கண், நேத்திரம்
வீடு (house): அகம், இல், இல்லம், உறையுள், கிருகம், மனை
வெண்மை (whiteness): தவளம், நரை, பால், வால், விளர், வெள்ளி, வெள்ளை, வெளிறு

வெளிச்சம் (light): ஒளி, சோதி, பிரகாசம்
வேசி (harlot): கணிகை, பரத்தை, பொதுமகள், விலைமகள்
வேதம் (the Vedas): ஆரணம், ஓத்து, சமயம், சுருதி, மறை
வேற்றுமை (difference): திரிவு, பின்னம், பேதம், மாற்றம், விகற்பம், விரோதம், வேறுபாடு

வேளாளர் (ploughmen): உழவர், காராளர், பூபாலர், மேழியர்

# பல பொருள் ஒரு மொழி

அகம்: இடம் (place); மனம் (mind); மனை (house)

அங்கி: சட்டை (gown); தீ (fire); அக்கினி தேவன் (God of fire);

அடி: அடி என்னும் ஏவல் (to beat or lash); ஆதி (origin); கால் (foot); பன்னிரண்டு அங்குலங்கொண்ட அளவு (foot)

அணங்கு: அழகு (beauty); தெய்வப் பெண் (a female deity); அச்சம் (fear)

அணி: அலங்காரம் (rhetorical embellishment); ஆபரணம் (jewel) ஒழுங்கு (order); படை வகுப்பு (division of an army) கருவி (instrument or tool); அணி என்னும் ஏவல் (to wear)

அணை: செய் கரை (dam or artificial bank); மெத்தை (cushion); வரம்பு (ridge); முட்டு (support); சேர் என்னும் ஏவல் (to unite)

அத்தன்: அருகன் (the god of the Jainas); சிவன் (Siva); தந்தை (father); மூத்தோன் (elder)

அத்தி: ஓர் மரம் (a tree); கடல் (sea); யானை (elephant); கொலை (murder) திப்பலி (long pepper)

அத்திரம்: குதிரை (horse); கழுதை (ass); அம்பு (arrow); நிலையின்மை (unsteadiness)

அத்தை: தந்தையின் சகோதரி (father's sister); தாய் (mother); குரு பத்தினி (wife of a priest); தலைவி (a lady)

அப்பு: நீர் (water); கடல் (sea); பாதிரி மரம் (a tree); அப்பு என்னும் ஏவல் (to attach to a surface as cement)

அமர்: போர் (war); உக்கிரம் (rage or violence); மதில் (wall round a fort); அமர் என்னும் ஏவல் (to tranquil or calm)

அமளி: மெத்தை (mattress); மக்கட் படுக்கை (bed)

அம்பி: ஓடம் (dhoney); தெப்பம் (raft); மிடா (water-pot); இறை கூடை (a basket used for casting forth water)

அம்பு: கணை (arrow); மூங்கில் (bamboo); தளிர் (sprout); நீர் (water) மேகம் (cloud)

அம்மை: தாய் (mother); அடுத்த பிறப்பு (next birth); அழகு (beauty)

அயில்: இரும்பு (iron); கைவேல் (javalin); கூர்மை (sharpness); அழகு (beauty); உண் என்னும் ஏவல் (to eat)

அரக்கு: அரக்கு (lac); சிவப்பு (reddishness); அரக்கு என்னும் ஏவல் (to wear away by rubbling)

அரங்கம்: நாடக சாலை (theatre); சபை (assembly); சிலம்பக் கூடம் (school of fencing); போர்க்களம் (battle-field)

அரசு: அரசன் (king); அரசாங்கம் (government); ஓர் மரம் (a tree)

அரண் : மதில் (fortifying wall); கோட்டை (fortress); காவல் (defence); அழகு (beauty)

அரம்பை : வாழை (plantain tree); தெய்வப் பெண் (one of the courtesans in the world of Gods)

அரவம் : ஒலி (sound); பாம்பு (snake); சிலம்பு (anklet); பேரொலி (great noise or roar)

அரி : அரிசி (rice); குதிரை (horse); கூர்மை (sharpness); சிங்கம் (lion); விட்டுணு (Vishnu); பகைவன் (enemy); அரி என்னும் ஏவல் (to sift or wash away)

அரை : இடை (waist); பாதி (half); அரை என்னும் ஏவல் (to grind or pulverise)

அலை : கடற்றிரை (wave or billow); கடல் (sea); கருமணல் (black sand); அலை என்னும் ஏவல் (to vex or disturb)

அவதி : எல்லை (limit); அளவு (measure); தவணை (due date)

அவி : சோறு (boiled rice); தேவருணவு (boiled rice etc. offered to gods); நெய் (ghee); தணி என்னும் ஏவல் (to quench or extinguish)

அழல் : நெருப்பு (fire); செவ்வாய் (Mars); நரகம் (hell); வெப்பம் (heat); வெப்புறு என்னும் ஏவல் (to be hot)

அளி : அன்பு (love); வண்டு (beetle); மது (liquor); காய் (unripe fruit); குளிர்ச்சி (coolness); அளி என்னும் ஏவல் (to give, bestow or protect)

அளை : மலைக் குகை (cave); புற்று (hole or an ant-hill); தயிர் (curd) மோர் (buttermilk); குழை என்னும் ஏவல் (to mix up or macerate as food)

அறுகு : ஓர் புல் (a kind of grass); ஆண் புலி (male tiger); சிங்கம் (lion); யானை (elephant)

அறை : வீட்டின் அறை (room); திரை (curtain); பாறை (rock); அடி (slap with the hand); சொல் என்னும் ஏவல் (to say); பறை அடி என்னும் ஏவல் (to beat a drum)

அன்னம் : ஓர் புள் (swan); சோறு (boiled rice); கவரி மா (bosgrunaiens)

ஆசை : விருப்பு (desire); பொன் (gold); திசை (any point of the compass)

ஆடல் : கூத்து ஆடல் (dancing); குளித்தல் (bathing); சொல்லுதல் (saying); அசைதல் (moving or vibrating)

ஆடி : ஆடி மாதம் (July); கண்ணாடி (mirror)

ஆடு : வெள்ளாடு (goat); வெற்றி (victory); ஆடு என்னும் ஏவல் (to dance)

(......)

ஆணை : ஏவல் (command); சத்தியம் (oath); மெய் (truth); வெற்றி (victory)

ஆயம்: சுங்கம் (toll or customs); சூதாடு கருவி (dice); தாய் (mother); நாண் (bow-string); நீளம் (length); மகளிர் கூட்டம் (assembly of women)

ஆய்வு : ஆராய்வு (investigation); நுட்பம் (fineness); அகலம் (brea: dth); வருத்தம் (distress)

ஆரம்: ஆபரணம் (ornament); சந்தனமரம் (sandal wood tree); பூமாலை (flower garland); முத்து (pearl)

ஆலம் : நஞ்சு (poison of snake); மழை (rain); நீர் (water); ஆல மரம் (banian tree); அம்புக் கூடு (quiver)

ஆலி : கள் (toddy); காற்று (wind); மழை (rain) ; அமுதம் (ambrosia)

ஆவி: உயிர் (spirit); புகை (steam); வாசனை (fragrance); குளம் (pond)

ஆழி: சக்கரம் (the discus weapon); வண்டிச் சில் (whee): மோதிரம் (ring): கடல் (sea)

ஆளி: ஆளுவோன் (governor); சிங்கம் (lion); சிங்கவிராசி (seo): செய்கரை (artificial embankment)

ஆறு: ஓர் எண் (six); நதி (river); வழி (road, mode or method); ஆறு என்னும் ஏவல் (to rest or relax)

ஆற்றல்: செய்தல் (doing); வன்மை (power); மிகுதி (excess); பொறை (patience)

இசை: சங்கீதம் (music); சொல் (word); ஒலி (sound); புகழ் (praise); இசை என்னும் ஏவல் (to join or blend)

இடம்: இடம் (place); இடப்பக்கம் (the left side); விசாலம் (spacious ness); செல்வம் (wealth); ஆகாயம் (sky)

இடி: தாக்குகை (blow); ஒலி (roar); இந்திரன் கொடி (standard of Indra); சுண்ணம் (anything pulverised); அசனி (thunder-bolt); இடி என்னும் ஏவல் (to pound)

இடை: நடு (centre); அரை (waist); பக்கம் (side); சமையம் (oppor-tunity); இடை (space or room)

இணை: உவமை (comparison); கண்ணிணை (pair of eyes); கூந்தல் (women's hair); துணை (associate); இணை என்னும் ஏவல் (to join)

இதழ்: பூவிதழ் (petals of a flower); பனையேடு (palmyra leaf); உதடு (lips); இலை (leaf)

இரவு: இராத்திரி (night); வறுமை (poverty); இரத்தல் (begging)

இருள்: இருட்டு (dark); உன்மத்தன் (mental delusion); கருமை (black-ness); நரகம் (hell); யானை (elephant); இருள் என்னும் ஏவல் (to darken)

இரை: உணவு (food); ஒலி (noise); பறவை யூண் (food of birds and animals, prey); இரை என்னும் ஏவல் (to buzz)

இல்: வீடு (house); மனைவி (wife): சா (death); இடம் (place)

இழை: நூற்கும் நூல் (yarn); ஆபரணம் (ornament); இழை என்னும் ஏவல் (to perform)

இளை: மேகம்; (cloud); வேலி (fence); தலைக்காவல் (main guard); இளமை (tenderness); இளை என்னும் ஏவல் (to grow weary)

இறப்பு: சா (death); முகடு (roof); போக்கு (passage); மிகுதி (excess)

இறால்: ஓர் மீன் (prawnl); எருது (bull); தேன் கூடு (honey-comb)

இறை: அரசன் (king); குடியிறை (tax): கையிறை (lines on the fingers of the palm); தலை (head); பெருமை (superiority); வீட்டிறப்பு (roof of a house); இறை என்னும் ஏவல் (to pour out)

ஈ: (house-fly); வண்டு (bettle); தேனீ (bee); ஈ என்னும் ஏவல் (to give or bestow)

ஈமம்: சுடுகாடு (cremation ground); விறகு (fire-wood)

ஈரம்: குளிர்ச்சி (coolness); அன்பு (kindness); கிருபை (grace); பண்பு (nature); அழகு (beauty); அறிவு (knowledge)

ஈழம்: கள் (toddy); இலங்கை (Ceylon); பொன் (gold)

ஈறு: உவர் நிலர் (brackish Sand); முடிவு (end)

உடு: விண் மீன் (star); அகழி (ditch); அம்பு (arrow); ஆடு (goat); உடு என்னும் ஏவல் (to dress)

உடை: உடுப்பு (dress or garment); உடைமை (possession); செல்வம் (wealth); உடை என்னும் ஏவல் (to break)

உத்தரம்: எதிர்ச்சொல், விடை (reply, answer); வடக்கு (north) உயர்ச்சி (height); ஊழித் தீ (final' deluge of fire)

உந்தி; கொப்பூழ் (navel); ஆறு (river); கடல் (sea); மகளிர் விளையாட்டில் ஒன்று (a kind of sport among women)

உரம்: ஊக்கம் (energy); மார்பு (breast); வலி (strength); திண்மை hardness); ஞானம் (wisdom)

உரு: உடல் (body); வடிவம் (form); நிறம் (colour); நோய் (disease); கோபம் (anger)

உரை: உயர்ச்சி (eminence); பொன் (gold for touching); ஒலி(sound) உரை என்னும் ஏவல் (to say or speak)

உறுதி: நிலை (firmess or stability); வல் (power); நன்மை (benefit) கல்வி (education)

உறை: படைக்கலக் கூடு (sheath, quiver); பிரை (ferment for curdling milk); மழை (rain); வாழ்நாள் (life-time); உறை என்னும் ஏவல் (to dwell; or inhabit)

ஊறு : இடையூறு (disaster); தீமை (evil); கொலை (murder); ஊறு என்னும் ஏவல் (ooze through)

ஊனம் : குறைபாடு (deficiency); ஈனம் (disgrace); தீமை (moral evil)

எச்சம் : மிச்சம் (remainder); எச்சில் (remains of food); மகன், மகள் (son, daughter); யாகம் (sacrifice)

எல் : ஒளி (light): சூரியன் (sun); நாள் (day), பகல் (day-time); இரவு (night)

ஏடு : பனையோலை ஏடு (the leaves of a palmyra bound together as a book); கண்ணிமை (eye-lids); பூ விதழ் (petals of a flower)

ஏறு : எருது (bull); இடி (thunderbolt); ஏறு என்னும் ஏவல் (to mount or climb)

ஏற்றம் : உயர்வு (rise or ascent); மேன்மை (excellence); புகழ் (fame)

ஏனம் : பன்றி (hog); பாவம் (sin); ஓலைக் குடை (umbrella made of palm-leaf)

ஐயம் : சந்தேகம் (doubt); பிச்சை (alms); இரப்போர் பாத்திரம் (begging bowl)

ஒட்டு : படைப் பிரிவு(division of an army); போட்டி (rivalry); ஒட்டு என்னும் ஏவல் (to paste or stick)

ஒழுக்கம் : நடை (behaviour); பண்பு (reverence); முறைமை (prescribed rules); வழி (way)

ஒளி : வெளிச்சம் (light); விளக்கு (lamp); சூரியன் (sun); புகழ் (fame) ஒளி என்னும் ஏவல் (to hide)

ஓடு : ஆமை விதை முதலியவற்றின் ஓடு (shell): உடைந்த மட்கலம் (broken earthenware): வீடுவேயும் ஓடு (tile); ஓடு என்னும் ஏவல் (to run)

ஓரை : சமயம்(opportunity); மகளிர் கூட்டம்(concourse of women); தோழி (female attendant); விளையாட்டு (play)

கடகம்: கைவளை (bracelet); கேடகம் (shield); கெண்டிகை (pot with a kind of spout); மதில் (fortification); வட்டம் (circle)

கடன் : முறைமை (obligation or duty); கடன் (loan of money); குடியிறை (tax)

கடா : வினா (question); ஆடு எருமை இவற்றின் ஆண் (male of goats, sheep or buffaloes)

கடி : காவல் (defence); வாசனை (fragrance); சிறப்பு (beauty): களிப்பு (merriment): அச்சம் (fearfulness): கடி என்னும் ஏவல் (to bite)

கடை : வாயில் (gateway): முடிவு (end): கீழ் (inferiority): கடை என்னும் ஏவல் (to churn)

கட்டு : கட்டப்பட்டது (bundle): காவல் (guard): மிகுதி (a bundance) கட்டு என்னும் ஏவல் (to tie)

கண்டம்: கழுத்து (neck); துண்டம் (fragment); தத்து (catastrophe); எல்லை (boundary); பிரிவு (section); நாடு (country)

கண்ணி: அரும்பு (flower-bud); பூங்கொத்து (bunch of flowers); பூமாலை (flower-garland). புள்வகை பிடிக்கும் வலை (trap-net)

கதிர்: சூரிய ஒளி (rays of the sun); சூரியன் (sun); பயிர்க் கதிர் (ear of corn)

கதை: சொல் (message); சரிதம் (story); கட்டுக்கதை (fable); தண்டாயுதம் (club or truncheon): கதை என்னும் ஏவல் (to speak)

கம்பலை; ஒலி (sound); வயல் (field); மருத நிலம் (agricultural district); நடுக்கம் (trembling); அச்சம் (fear); துன்பம் (distress)

கயம்: குளம் (tank); ஆழம் (depth); அகழ் (ditch); கேடு (destruction); யானை (elephant)

கரி: கரி (charcoal): நஞ்சு (poison); யானை (elephant); சாட்சி (witness); கரி என்னும் ஏவல் (to char or to be scorched)

கரை: கரை (bank or shore); முடிவு (end); எல்லை (border); கரை என்னும் ஏவல் (to dissolve)

கலம்: மட்கலம் (earthenware); மரக்கலம் (boat or vessel); ஆபரணம் (ornament)

கலி: கடல் (sea); ஒலி (noise); போர் (battle); வஞ்சகம் (fraud)

கலை: ஆண் மான் (stag); ஆண் குரங்கு (male of red monkey); கல்வி (arts and sciences); சந்திரன் பங்கு (phasis); அரைப் பட்டிகை (girdle)

கல்: கல்லு (stone); மலை (mountain); அரதனம் (precious stones) கல் என்னும் ஏவல் (to dig out or learn)

கவி: பாட்டு (verse); புலவன் (poet); குரங்கு (monkey); கவி என்னும் ஏவல் (to bend in or over)

களம்: இடம் (place); நெற் களம் (threshing flooer); போர்க் களம் (battle-field); மனைவி (wife); விடம் (poison)

களி: கள் (toddy); களிப்பு (mirth); செருக்கு (arrogance); மயக்கம் (aberration of mind); களி என்னும் ஏவல் (to exult or rejoice)

களை: அழகு (beauty); அயர்வு (weariness); குற்றம் (fault); களை என்னும் ஏவல் (to be fatigued)

கள்: தேன் (honey); மது (toddy); பொய் (falsehood); களவு (theft)

கள்ளி: ஓர் மரம் (milk hedge); திருடி (thievish woman)

கறி: கறி (cooked vegetables, fish or meat); மிளகு (pepper); கறி என்னும் ஏவல் (to bite or nibble)

கன்று: பசு எருமை முதலியவற்றின் குட்டி (calf); இளமரம் (young tree); கன்று என்னும் ஏவல் (to become over-ripe or rot)

•

காப்பு: காவல் (watching); கதவு (door); மதில் (wall); ஆடை (clothes); நூலிற் கடவுள் வணக்கம் (invocation at the commencement of poems)

காயம்: உடல் (body); பெருங்காயம் (assafoetida) ; வெண்காயம் (onion) ; ஆகாயம் (ether)

காய்: (unripe fruit) ; காய் என்னும் ஏவல் (to bear fruit or dry)

கால்: கால் (leg); நாலிலொன்று (a quarter); காற்று (wind) ; தூண் (post)

கிரகம்: நவக் கிரகங்களுள் ஒன்று (planet); வீடு (house)

கிளை: மரக் கிளை (branch of tree); மூங்கில் (bamboo) ; உறவினர் (relations); கிளை என்னும் ஏவல் (to grow full of branches)

குடி: ஊர் (village); குலம் (family); வீடு (house) ; குடி என்னும் ஏவல் (to drink)

குடை: குடை (umbrella); குமரக் கடவுளின் திருவிளையாடல் (dance of Skanda); குடை என்னும் ஏவல் (to hollow out)

குலை: கொத்து (bunch); செய்கரை (causeway); குலை என்னும் ஏவல் (to untie)

குழவி : குழந்தை (infant); பெருமை (greatness); இளம் பிறை (cresent moon)

குறி : அடையாளம் (sign); குறிப்பு (hint) ; குறி என்னும் ஏவல் (to specify)

கூடு: பறவைக் கூடு (nest); கூண்டு (cage); கூடு என்னும் ஏவல் (to join)

கூறு: பங்கு (portion); பாதி (section); கூறு என்னும் ஏவல் (to declare)

கூனல் : கோணல் (curvature); சங்கு (conch); பிறை (crescent moon)

கொத்து : குலை (bunch); கொத்து என்னும் ஏவல் (to hoe)

கோடி : ஓரெண் (ten millions); புதுமை (newness); தரை முனை (cape)

கோட்டம் : கோயில் (temple) நாட்டின் பகுதி (part of a country); வளைவு (crookedness); அழுக்காறு (malice)

கோதை : பூமாலை (flower-garland); பெண் (woman); பெண்மயிர் (women's hair); காற்று (wind)

சக்கரம் ; தேர்ச்சில் (wheel of a vehicle); பிறப்பு (birth); கடல் (sea); வட்டம் (circle)

சத்தி : கக்கல் (disgorged matter); குடை (umbrella); வலி (power); பார்வதி (Parvathi the female energy of God); சத்தி என்னும் ஏவல் (to vomit)

சம்பு ; ஓர் புல் (a kind of grass); நரி (jackal); நாவல் (jambu tree); அரன் (Siva); சூரியன் (Sun)

சரணம்: கால் [foot); அடைக்கலம் (shelter); வீடு (house); நமஸ்காரம் (homage)

சரம்: அம்பு (arrow); கொறுக்கை (a kind of grass); மாலை (garland of flowers tied simply); அசைவு (motion)

சலம்: நீர் (water); பொய் (falsehood); தணியாக் கோபம் (malice); முட்பன்றி முள் (quills of porcupine)

சலனம்: அசைவு (motion): காற்று (wind); கால் (leg)

சாதனம்: கருவி (instrument); ஏது (proof); அடையாளம் (distinctive marks); இடம் (place of dwelling)

சாதி: குலம் (caste); குலவினம் (sex); கள் (toddy); சாதி என்னும் ஏவல் (to persevere)

சாறு: குலை (bunch); கள் (toddy); திருவிழா (temple festiva)

சிலை: கல் (stone); வில் (bow); ஒலி (sound)

சிறை: இறகு (wing); காவல் (guard); சிறைச் சாலை (prison); பக்கம் (side)

சினை: உறுப்பு (component part); கருப்பம் (embryo); பூவரும்பு (flower-bud)

சுகம்: இன்பம் (happiness); உடல் நலம் (health); தருமம் (virtue); கிளி (parrot)

சுரம்: காடு (forest); பாலை நிலம் (barren tract of land); அரு நெறி (narrow and difficult path); காய்ச்சல் (fever): கள் (toddy)

சுருதி: வேதம் (the Vedas); சுதி (pitch of tune); இசை (melody); காது (ear); ஒலி (sond)

சூடு: வெப்பம் (heat); அரிக் குவியல் (stack of paddy sheaves) சூடு என்னும் ஏவல் (to wear)

செப்பு: சொல் (speech); செப்பு (little box of copper); செப்பு என்னும் ஏவல் (to tell)

செல்: கறையான் (white-ant); மேகம் (cloud); இடி (thunderbolt); செல் என்னும் ஏவல் (to go)

செல்வி: அழகு (beauty): காலம் (occasion); தன்மை (appearance or state)

சேடன்: அனந்தன் என்னும் பாம்பு (the king of the serpent race) தோழன் (companion); ஏவல் செய்வோன் (servant); தம்பி (younger brother)

சேண்: உயர்ச்சி (height); தூரம் (distance); அகலம் (spaciousness) ஆகாயம் (sky)

சேய்: மகன் (son); முருகன் (Skanda); செவ்வாய் (Mars); சிவப்பு (reddishness); இளமை (youthfulness)

தட்டு: வட்டணை (tray); வட்டம் (circle); வளைவு (curve); திரிகை (potter's wheel); குற்றம் (fault); தட்டு என்னும் ஏவல் (to knock at)

தலை: (head); தலைமை (superiority); ஆதி (origin); ஆகாயம் (air)

தளை: கால் விலங்கு (fetter); ஆண் மயிர் (men's lock of hair); தளை என்னும் ஏவல் (to tie)

தறி: தூண் (pillar); நெய்வோர் கருவி (weaver's loom); முளை (peg) தறி என்னும் ஏவல் (to cut down)

தாயம்: தந்தைவழிச் சுற்றம் (paternal relationship); உரித்து (inheritance); துன்பம் (distress); சூதாடு கருவி (cubical pieces in the play of dice)

தாரம்: மனைவி (wife): மூக்காற் பிறக்கும் இசை (nasal sound); பாதரசம் (mercury); அரும் பண்டம் (rare thing); நாக்கு (tongue); வெண்கலம் (bell-metal)

தாலம்: கூந்தற் பனை (bastard sago); பனை (palmyra); பூமி (earth) நா (tongue)

தானம்: இடம் (place); கொடை (gift in charity); வலி (power)

திங்கள்: சந்திரன் (moon); மாதம் (month)

திட்டம்: ஒப்புரவு (smoothness); நிலைவரம் (certainty); ஏற்பாடு (plan)

திரி: விளக்குத் திரி (wick); மூன்று (three); திரி என்னும் ஏவல் (to wander)

திரு: இலக்குமி (Godess of wealth); மேன்மை (eminence); செல்வம் (wealth); அழகு (beauty)

தீரம்: கரை (bank); வரம்பு (ridge); வலி (strength); தைரியம் (courage)

துப்பு: மெழுகு (red wax); அறிவு (intelligence); உணவு (food); சுத்தம் (cleanliness); பவளம் (red coral); நெய் (ghee)

தூக்கு: நிறை (weight); தூக்குக் குண்டு (plumb line); செய்யுள் (poetry); கூத்து (dancing); உயர்ச்சி (height)

தூசி: புழுதி (dust); குதிரை (horse); படை வகுப்பு (division of an army)

தேர்: இரதம் (chariot); தேர் என்னும் ஏவல் (to be thoroughly acquainted with)

தேறல்: தங்கல் (staying); துணிவு (presuming); நிச்சயம் (ascertaining); தேன் (honey); கள் (toddy)

தொடர்: பூமாலை (flower-garland); சங்கிலி (chain); சொற்றொடர்

(phrase); பழமை (antiquity); தொடர் என்னும் ஏவல் (to follow in order)

தொடை: தொடை (thigh): பூமாலை (flower garland): நாண் (bow-string); பாட்டு (verse)

தொண்டு: பழமை (antiquity); அடிமை (slavery); ஒன்பது (nine)

தோகை: இறகு (feather); மயில் (peacock); மயிற்றோகை (tail of a peacock); பெண் (day)

தோடு: காதணி (ear-jewe); பூவிதழ் (petals of flower); கூட்டம் (assembly)

தோற்றம்: பிறப்பு (birth); மகன் (son); வலி (strength); புகழ் (fame) நூதனக் காட்சி (phenomena)

நகம்: நகம் (finger nail); மலை (mountain); மரம் (tree); பூமி (earth) அடிக்குளம்பு (lower part of a hoof)

நகை: சிரிப்பு (laughter); இன்பம் (delight), ஆபரணம் (jewel); ஒளி (brightness); பூவரும்பு (flower bud); நகை என்னும் ஏவல் (to smile at)

நாகம்: நாக பாம்பு (cobra); மலை (mountain); யானை (elephant); தேவலோகம் (celestial world); நற் சீலை (fine cloth)

நாகு: இளமை (youthfulness); பெண்ணெருமை (she-buffalo) சங்கு (conch)

நாடி: நரம்பு(artery); யாழின் நரம்பு (string of a harp); தாது (pulse)

நாடு: இடம் (place); பூமி (earth); நாடு என்னும் ஏவல் (to inquire after)-

நாறு: பயிர் முளை (shoot); நாறு என்னும் ஏவல் (to be fragrant)

நிரை: ஒழுங்கு (row); பசுக் கூட்டம் (herd of cattle); படை வகுப்பு (fi!e of an army)

நிலை: நிற்கும் நிலை (posture); இடம் (place); குணம் (quality); பொழுது (time); நிலை என்னும் ஏவல் (to be permanent)

நூல்: இழை (thread); கல்விநூல் ((literary treatise); எண்ணம் (deliberation); நூல் என்னும் ஏவல் (to spin)

நேர்: உவமை (similarity); உடன்பாடு (settlement); செவ்வை (straightness); நேர் என்னும் ஏவல் (to occur or happen)

படி: நிறையறி கருவி (weight for scales); நாழி (a measure); ஏறும் படி (stair); பூமி (earth): படி என்னும் ஏவல் (to read)

படை: ஆயுதம் (weapon); கலப்பை (plough); தானை (army); அடுக்கு (layer); படை என்னும் ஏவல் (to create)

பணி: ஆபரணம் (jewellery); ஏவல் (service); பாம்பு (snake); பணி என்னும் ஏவல் (to bow or worship)

பதம் : இடம் (place); கால் (feet); பதவி (state of future bliss); சோறு (boiled rice); அழகு (beauty)

பதி : அரசன் (king); ஊர் (town); இறைவன் (the Supreme God); கணவன் (husband); வீடு (abode); பதி என்னும் ஏவல் (to sink in)

பத்தி : அன்பு (love); ஆராதனை (worship); ஒழுங்கு (column); ஒழுக்கம் (conduct)

பத்திரம் : இலை (leaf); அம்பின் இறகு (feathers of an arrow); அழகு (beauty)

பந்தம் : உறவு (relationship); கட்டு (bondage); மலக்கட்டு (earthly attachment); அழகு (beauty)

பரி : குதிரை (horse); சுமை (burden); பெருமை (greatness); வருத்தம் (pain); பரி என்னும் ஏவல் ((to sympathise with)

பள்ளி : நித்திரை (sleep); பள்ளிக்கூடம் (school) அறச்சாலை (almonry); தேவர் கோயில் (temple); சிற்றூர் (small village)

பற்று : அன்பு (affection); ஆசை (desire) ; பற்று என்னும் ஏவல் (to grasp)

பாதம் : பங்கு (share); பாதி (half); சமையல் (cooking); புயம் (arm); பக்கம் (side): ஓரளவு (fathom)

பாடு : பக்கம் (side); பெருமை (greatness): கேடு (ruin); படுதல் (suffering); இடம் (place)

பாணி : இசைப் பாட்டு (song as sung); சொல் (word); பாகு (treacle); கள் (toddy): காலம் (time)

பாரி : பாரி வள்ளல் (a king famed for liberality); கட்டில் (bedstead); பூமி (earth); மனைவி (lawful wife): பாரி என்னும் ஏவல் (to cause to appear)

பிடி : பெண் யானை (female elephant); கைப்பிடி (handle); பெண் கவரி (female yak); பிடி என்னும் ஏவல் (to adhere to)

பிணி : கட்டு (ink); நோய் (sickness); துன்பம் (affliction); பிணி என்னும் ஏவல் (to tie or fasten with ropes)

பிணை : கட்டு (bandage); மான் (deer); ஆசை (desire); உடன்பாடு (agreement); பிணை என்னும் ஏவல் (to tie or couple)

பிரமாணம் : அளவை (measure); சத்தியம் (oath); சாட்சி (proof) மேற்கோள் (illustration); நிறுவு கட்டளை (regulation)

புரி : தலை நகர் (capital city): ஊர் (town): கயிறு (string): சங்கு (conch): சுருள் (curl): புரி என்னும் ஏவல் (to do)

புலம் : அறிவு (knowledge) இடம் (place): புலன் (sensation): திசை (region); வயல் (field)

புனல்: நீர் (water); ஆறு (river)

பூசை: வழிபாடு (worship); அன்னமளித்தல் (feeding with rice); பூனை (cat)

பூண்: ஆபரணம் (ornament); பூண் என்னும் ஏவல் (to wear)

பொங்கல்: உயர்ச்சி (becoming elevated); பொலிதல் (increasing); மிகுதி (abundance)

பொருள்: கருத்து (meaning); தலைமை (superiority); பணம் (wealth); பண்டம் (goods); வாய்மை (truth)

பொறை: பொறுமை (patience); பாரம் (weight); மலை (mountain); பூமி (earth)

போகம்: அனுபோகம் (enjoyment); செல்வம் (wealth); விளைவு (produce of a season); பாம்பின் உடல் (body of a snake)

போது: பூ (flower); மலரும் பருவத்து அரும்பு (flower-bud ready to open); காலம் (time); போது என்னும் ஏவல் (to be sufficient)

போர்: நெற் போர் (corn-stack); சண்டை (war); போர் என்னும் ஏவல் (to wrap oneself in a cloth)

மஞ்சு: பனி (dew); மேகம் (cloud); கட்டில் (bed); அழகு (beauty)

மடம்: அறிவின்மை (ignorance); மடம் (inn) முனிவர் வாசம் (monastery of ascetics)

மடி: சோம்பல் ( idleness); கேடு (ruin); நோய் (disease); பொய் (lie); சீலை (cloth); மடி என்னும் ஏவல் (to perish or fold)

மடை: நீர் பாய் மடை (small sluice of a canal); துளை (hole); சோறு (rice)

மட்டு: அளவு (proportion); அவதி (expiration of a term); கள் (toddy)

மணம்: வாசனை (fragrance); கலியாணம் (wedding)

மணி: மணி (bell); முத்து (pearl); கண்மணி (apple of the eye) நென்மணி (grain of rice); கறுப்பு (blackness)

மதம்: கருத்து (opinion); சமயம் (religion); செருக்கு (arrogance) யானை மதம் (rut); மயக்கம் (intoxication)

மதி: அறிவு (intellect); சந்திரன் (moon); மாதம் (month); மதிப்பு (honour); மதி என்னும் ஏவல் (to estimate)

மலை: மலை (mountain); உவமை (comparison); மலை என்னும் ஏவல் (to be confused)

மறை: வேதம் (the Vedas); இரகசியம் (secrecy); அடைக்கலம் (refuge); கேடகம் (shield); சொல் (word); அடையாளம் (blemish); மறை என்னும் ஏவல் (to be hidden)

மா: மா மரம் (mango tree) தூள் (powder); அழகு (beauty); இலக்குமி (Luxmi); செல்வம் (wealth); சீலை (cloth)

மாடு: மாடு (cow or bull); பக்கம் (side); செல்வம் (wealth); இடம் (place)

மாலை: இரவு (night); தொடை (garland); ஒழுங்கு (line); இயல்பு (natural quality); அரண்மனை (palace)

மால்: திருமால் (Vishnu); கருமை (blackness); காற்று (wind); பெருமை (greatness); மயக்கம் (illusion); மேகம் (cloud)

மாறு: துடைப்பம் (broom); கைம்மாறு (recompense); மாறு என்னும் ஏவல் (to exchange)

மாற்றம்: சொல் (word); பகை (hatred); வேற்றுமை (diversity)

மானம்: வெட்கம் (shame); அளவு (measure); உவமை (comparison); குற்றம் (fault); வலி (strength)

மீன்: மீன் (fish); நட்சத்திரம் (star); நெய்தற் பறை (drum used in maritime districts)

முடி: மகுடம் (crown); குடுமி (tuft of hair); தலை (head); நாற்று முடி (bundle of paddy plants); முடி என்னும் ஏவல் (to tie or make a knot)

முட்டு: குறைவு (wanting in); அடைப்பு (impediment); கடிவாளம் (horse's bridle); முட்டு என்னும் ஏவல் (to touch or butt)

முதல்: ஆதி (the first); பணமுதல் (capital); முதல் என்னும் ஏவல் (to become first)

முத்தம்: முத்து (pearl); உதடு (lip); பிரியம் (endearment); மருத நிலம் (agricultural land)

முயல்: முயல் (hare); போர் (war); முயல் என்னும் ஏவல் (to endeavour)

முருகன்: (Muruga); வாசனை (fragrance); அழகு (beauty); இளமை (tenderness); எழுச்சி (elevation); தேன் (honey)

முறை: முறைமை (system); குணம் (good nature); ஒழுக்கம் (manners); புத்தகம் (book); பழமை (antiquity)

முனை: நுனி (point or edge); பகை (hatred); முதன்மை (superiority); முனை என்னும் ஏவல் (to show signs of indignation)

மூலம்: மூல நோய் (piles); காரணம் (cause); கிழங்கு (root); முதல் (origin); வேர் (root of trees)

மெய்: உடல் (body); உண்மை (truth); ஒற்றெழுத்து (consonant)

மோடு: உயர்ச்சி (elevation); பெருமை (greatness); வயிறு (stomach); மடமை (ignorance)

யூகம்: புலி (tiger) பெண் குரங்கு (female monkey); காந்தி brightness); தர்க்கம் (reasoning); படை (battle); உட்பொருள் உணர்தல் (knowledge of secret arts)

வங்கம்: ஓர் தேயம் (Bengal); ஓர் மொழி (Bengali language); ஈயம் (lead); வெள்ளி (silver); மரக்கலம் (ship)

வஞ்சி: சேரன் ஊர் (a town of tbe Cera country); ஓர் கொடிய (a creeper) பெண் (female); வஞ்சி என்னும் ஏவல் (to deceive)

வடம்: கயிறு (rope); ஆலமரம் (banyan tree); ஊர் (town); பூவரும்பு (flower-bud; அணிவடம் (string of jewels)

வடு: தழும்பு (scar); குற்றம் (faut); இளங்காய் (unripe fruit); வண்டு (beetle) வடு என்னும் ஏவல் (to set as the bud of fruits)

வண்ணம்: வடிவம் (form); நிறம் (colour); அழகு (beauty); குணம் (property); சாந்தம் (harmony); நன்மை (goodness); இராகம் (melody):

வதை: தேன் வதை (honeycomb); கொலை (murder); வாதனை (torment); வதை என்னும் ஏவல் (to kill)

வம்பு: புதுமை (novelty); வாசனை (smell); நிலையின்மை (unstability) மிடா (urn); கச்சு (women's bodice)

வயிரம்: மர வயிரம் (hard interior of the heart of trees); வச்சிரம் (diamond); தண்டாயுதம் (club); சினம் (wrath); சலஞ் சாதித்தல் (malice);

வலம்: வலப்பக்கம் (dexter side); வலி (strength); வெற்றி (victory); சேனை (army)

வலி: பலம் (strength); பற்றிரும்பு (pincers or tongs); வலி என்னும் ஏவல் (to grow stout);

வாகை: வெற்றி மாலை (conqueror's wreath); வெற்றி (victory); ஈகை (beneficence); மிகுதி (plenty); தவம் (penance)

வாசி: குதிரை (horse); பறவை (bird); மிகுதி (adundance); வாசி என்னும் ஏவல் (to read)

வாடை: வாசனை (effluvia); வட காற்று (north wind); தெரு (street) இடைச் சேரி (village of herdsmen);

வாரம்: கிழமை (week); அன்பு (love); கரை (bank) திரை (wave); பங்கு (prat); சமையம் (opportunity); மிகுதி (multitude)

வாளி: அம்பு (arrow); காதணி (ear-jewel): வாளி (pail)

வாள்: ஒளி (lustre): வாள் (sword)

விடை: மறுமொழி (answer): இடபம் (ox): விடுதல் (permission)

விதி: விதி (precept): ஊழ் (fate); செய் தொழில் (act): உண்மை (truth): விதி என்னும் ஏவல் (to institute or enact)

**விரை:** வாசனை (perfume); விதை (seed); விரை என்னும் ஏவல் (to hasten)

**வில்:** வில் (bow): ஒளி (light): வில் என்னும் ஏவல் (to sell);

**விளக்கு:** தீபம் (lamp): விளக்கு என்னும் ஏவல் (to sell)

**வினை:** தொழில் (action; ஊழ் (fate), வினைச் சொல் (verb)

**வீறு:** பெருமை (greatness): புண்ணியம் (merit), தனிமை (solitariness); விளக்கம் (clearness)

**வேய்:** மூங்கில் (bamboo); உட்டுளைப் பொருள் (anything hollow): கூரை வேய் என்னும் ஏவல் (to thatch the roof)

**வேலை:** தொழில் (work): கடல் (sea)

**வைரம்:** பகை (enmity): வீரம் (bravery)

## வழூஉச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அகண்ட | அகன்ற | broad |
| அண்டாடு | அன்றாடு | daily |
| அடப்பம் | அடைப்பம் | weight |
| அடமழை | அடை மழை | continual rain |
| அடமானம் | அடைமானம் | pledge |
| அதுகள் | அவைகள் | they |
| அநாதிப்பயல் | அநாதைப் பயல் | helpless man |
| அவன்கள் | அவர்கள் | those people |
| அண்டைக்கு | அன்றைக்கு | on that day |
| அப்ப, அப்போ | அப்போது | then |
| அமக்களம் | அமர்க்களம் | tumult |
| அய்யா | ஐயா | sir, father |
| அரணாக்கயிறு | அரைஞாண் கயிறு | cord round the loins |
| அரலி | அலரி | oleander |
| அருகாமை | அருகு | side |
| அருமந்த | அருமருந்தன்ன | precious |
| அருவாள் | அரிவாள் | scythe |
| அவன்ரை | அவனுடைய | his |
| அழுகணி | அழுகுணி | scurvy |
| அவங்க, அவன்கள் | அவர்கள் | those people |
| அனியாயம் | அநியாயம் | injustice |

| | | |
|---|---|---|
| ஆக்கள் | ஆட்கள் | people |
| ஆச்சு | ஆயிற்று | has become |
| ஆத்தங்கரை | ஆற்றங்கரை | bank of river |
| ஆத்துக்காரி | அகத்துக்காரி | mistress of the house |
| ஆம்படையான் | அகமுடையான் | householder, husband |
| ஆம்பிளைப்பிள்ளை | ஆண்பிள்ளை | male child |
| ஆயிதம் | ஆயுதம் | weapon |
| இகழ்ட்சி | இகழ்ச்சி | contempt |
| இஞ்சை | இங்கே | here |
| இடது கை | இடக்கை | left hand |
| இப்ப<br>இப்போ | இப்போது | now |
| இண்டைக்கு | இன்றைக்கு | to-day |
| இத்தினை | இத்துணை | so much |
| இத்துப்போதல் | இற்றுப் போதல் | decaying |
| இமைய மலை | இமய மலை | the Himalayas |
| இராப்போலாய் | இராப் பகலாய் | all day and night |
| இளனி | இள நீர் | young coconut |
| இறச்சி | இறைச்சி | meat |
| ஈக்கு | ஈர்க்கு | rib of coconut leaf |
| உசிர் | உயிர் | life, soul |
| உட்காந்தான் | உட்கார்ந்தான் | (he) sat |
| உடமை | உடைமை | belonging |
| உடம்பாடு | உடன்பாடு | agreement |
| உணத்து | உலர்த்து | cause to dry |
| உத்திரவு | உத்தரவு | permission |
| உமிநீர் | உமிழ் நீர் | spittle |
| உயற்சி | உயர்ச்சி | elevation |
| உருத்து | உரித்து | inheritance |
| உஸ்தியோகம் | உத்தியோகம் | employment |
| ஊத்துதல் | ஊற்றுதல் | pouring |
| ஊந்துதிரிதல் | ஊர்ந்து திரிதல் | creeping |
| ஊரணி | ஊருணி | tank near a village |
| எண்ணை | எண்ணெய் | oil |
| எலிமிச்சம்பழம் | எலுமிச்சம் பழம் | lime fruit |
| எழவு | இழவு | bereavement |
| என்ரை | என்னுடைய | my |
| என்னமோ | என்னவோ | what may it be ? |
| ஏப்பை | அகப்பை | wooden ladle |
| ஒண்டு | ஒன்று | one |

| | | |
|---|---|---|
| ஒண்டியாய் | ஒன்றியாய் | as a bachelor |
| ஒத்தணம் / ஒத்தடம் | ஒற்றிடம் | fomentation |
| ஒத்தை ரெட்டை | ஒற்றையிரட்டை | 'one or two' |
| ஒம்பது | ஒன்பது | nine |
| ஒருக்கால் | ஒருகால் | once |
| ஒருவள் | ஒருத்தி | a person (lady) |
| ஓஞ்சவேளை | ஓய்ந்தவேளை | time of tiresomeness |
| கட்டிடம் | கட்டடம் | building |
| கடக்கரை | கடற்கரை | sea - shore |
| கடைமை | கடமை | obligation |
| கண்டு | கன்று | calf |
| கண்பூளை | கண் பீளை | viscid discharge from the eye. |
| கண் முழித்தல் | கண் விழித்தல் | watchfulness |
| கத்திரிக்காய் | கத்தரிக்காய் | brinjal |
| கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் | pair of scissors |
| கதைத்தல் | பேசுதல் | speaking |
| கயறு | கயிறு | rope |
| கருப்பட்டி | கருப்புக் கட்டி | lump of jaggery |
| கருவப்பிலை | கறி வேப்பிலை | black margosa |
| கழட்டு | கழற்று | unloose |
| கறடி | கரடி | bear |
| கறடுமுறடு | கரடுமுரடு | ruggedness |
| கஸ்டம் | கஷ்டம் | difficulty |
| காச்சல் | காய்ச்சல் | fever |
| காதுக் குடும்பி | காதுக் குறும்பி | ear - wax |
| கார்க்கும் | காக்கும் | guarding |
| காலமை | காலை | morning |
| காக்ஷி | காட்சி | spectacle |
| கிணத்தடி | கிணற்றடி | well - side |
| கிடாய் | கடா | male of goats |
| கிராணம் | கிரகணம் | eclipse |
| குடுத்தல் | கொடுத்தல் | giving |
| குடும்பி | குடுமி | tuft of hair |
| குத்துயிர் | குற்றுயிர் | the state of being half-dead |
| கும்புடுதல் | கும்பிடுதல் | worshipping |
| குலைத்தது | குரைத்தது | (it) barked |
| கேழ்வி | கேள்வி | question |

| | | |
|---|---|---|
| கைமாத்து | கைமாற்று | loan |
| கைமாறு | கைம்மாறு | recompense |
| கெடிகாரம் | கடிகாரம் | time - piece |
| கெவுளி | கௌளி | wall lizard |
| கோதம்பை | கோதுமை | wheat |
| கோர்வை | கோவை | string of beads |
| கோடாலி | கோடரி | axe |
| சதை | தசை | flesh, muscle |
| சந்தணம் | சந்தனம் | sandal paste |
| சம்பாரித்தல் | சம்பாதித்தல் | earning |
| சமயல் | சமையல் | cooking |
| சமுகம் | சமூகம் | society |
| சவுக்காரம் | சவர்க்காரம் | soap |
| சவுக்காலை | சவக்காலை | graveyard |
| சாம்பராணி | சாம்பிராணி | frankincense |
| சாய்ங்காலம் | சாயுங் காலம் | the evening towards sunset |
| சிகப்பு | சிவப்பு | red |
| சிதல் | சீழ் | pus |
| சித்தப்பன் | சிற்றப்பன் | father's younger brother |
| சிலது | சில | some |
| சிலவு | செலவு | expense |
| சிவர் | சுவர் | wall |
| சீயாக்காய் | சிகைக்காய் | soap - pod wattle |
| சுகயீனம் | சுகவீனம் | illness |
| சுடுதண்ணி | சுடு நீர் | warm water |
| சுதந்தரம் | சுதந்திரம் | independence |
| சுந்திரம் | சுந்தரம் | beauty |
| சுழட்டு | சுழற்று | to whirl |
| சுற்றவாளி | சுத்தவாளி | holy innocent man |
| சுறுட்டு | சுருட்டு | cigar, to roll |
| சேதி | செய்தி | news |
| சொற்பனம் | சொப்பனம் | dream |
| சோத்துப்பானை | சோற்றுப் பானை | rice pot |
| தடமாட்டம் | தடுமாற்றம் | perplexity |
| தண்ணி | தண்ணீர் | water |
| தலகணி | தலையணை | pillow |
| தவக்கை | தவளை | frog |
| தாவாரம் | தாழ்வாரம் | verandah |

| | | |
|---|---|---|
| திரத்தல் | துரத்தல் | chasing |
| திராசு | தராசு | balance |
| திருவுதல் | திருகுதல் | twisting |
| திரேகம் | தேகம் | body |
| தின்மை | தீமை | evil, vice |
| தீவாளி | தீபாவலி<br>தீபாவளி | Dipavali |
| துகை | தொகை | amount |
| துகையல் | துவையல் | seasonings for food |
| துடங்குதல் | தொடங்குதல் | starting |
| துடை | தொடை | thigh |
| துலைத்தல் | தொலைத்தல் | destroying |
| துளிர் | தளிர் | sprout |
| துறப்பு | திறப்பு | key |
| துறவுகோல் | திறவுகோல் | key |
| தூத்தன் | தூர்த்தன் | a knave |
| தெண்டம் | தண்டம் | fine |
| தேள்வை<br>தேழ்வை | தேவை | want |
| தேத்தண்ணி | தேநீர் | tea (water) |
| தொந்திரவு | தொந்தரவு | trouble, vexation |
| தொப்புள் | கொப்பூழ் | navel |
| தொவக்கம் | துவக்கம் | start |
| தோர்வி | தோல்வி | defeat |
| நஞ்சை | நன் செய் | wet lands |
| நாகரீகம் | நாகரிகம் | civilisation |
| நாத்தம் | நாற்றம் | smell |
| நாநூறு | நானூறு | four hundred |
| நிறம்ப | நிரம்ப | in full |
| நெத்தி | நெற்றி | forehead |
| நேத்தி | நேர்த்தி | neatness, fineness |
| நேத்து | நேற்று | yesterday |
| நொங்கு | நுங்கு | young palmyrah fruit |
| நோம்பு | நோன்பு | fasting |
| பசும்பால் | பசுப் பால் | cow's milk |
| பட்டிணி | பட்டினி | starvation |
| பண்டி | பன்றி | pig |
| பத்தை | பற்றை | bushes |
| பதியம் | பதிகம் | preface |
| பயிர்ச்சி | பயிற்சி | practice |

| | | |
|---|---|---|
| பயிறு | பயறு | green gram |
| பயித்தங்காய் | பயற்றங்காய் | kidney - bean |
| பரியாரி | பரிகாரி | physician |
| பலது | பல | many |
| பறண் | பரண் | loft under the roof of a house |
| பன்ரண்டு | பன்னிரண்டு | twelve |
| பாச்சல் | பாய்ச்சல் | leaping, watering |
| பாவக்காய் | பாகற்காய் | bitter gourd |
| பிசுக்கு | பீர்க்கு | a kind of gourd |
| பிடிங்குதல் | பிடுங்குதல் | snatching away |
| பிலாமரம் | பலா மரம் | jak tree |
| பிராந்து | பருந்து | hawk, kite |
| பிரையாணம் | பிரயாணம் | travel, journey |
| பீத்தல் | பீற்றல் | a rip, a slit |
| புக்கை | புற்கை | rice - pap |
| புஞ்செய் | புன் செய் | dry grains |
| புட்டு | பிட்டு | a kind of pastry cooked by steam |
| புடல் | புடோல் | snake - gourd |
| புடவை<br>பிடவை | புடைவை | cloth |
| புடுங்குதல் | பிடுங்குதல் | snatching away |
| புண்ணாக்கு | பிண்ணாக்கு | oil - cake |
| புணையல் | பிணையல் | brace, couple |
| புத்து | புற்று | ant - hill |
| புழுக்கை | பிழுக்கை | dung of goats, rats etc |
| புஸ்த்தகம் | புஸ்தகம் | book |
| புஷ்ப்பம் | புஷ்பம் | flower |
| பூசினி | பூசுணி | pumpkin |
| பூர்க்கும் | பூக்கும் | will flower (blossom) |
| பூளை | பீளை | rheum |
| பெம்பிளைப்பிள்ளை | பெண் பிள்ளை | girl |
| பெரிசு | பெரிது | that which is great |
| பேதமை | பேதைமை | folly, ignorance |
| பொக்குள் | கொப்பூழ் | naval |
| பொயிலை<br>போயிலை | புகையிலை | tobacco |
| மசி | மை | ink |
| மணத்தக்காளி | மணித் தக்காளி | a plant |

| | | |
|---|---|---|
| மதவு | மதகு | bridge |
| மம்பட்டி | மண் வெட்டி | hoe |
| மனவி | மனைவி | wife |
| மாத்தல் | மாற்றல் | changing |
| மாதாளை | மாதுளை | pomegranate |
| மானம் பார்த்த பூமி | வானம் பார்த்த பூமி | land that awaits rain for cultivation |
| மாக்ஷி | மாட்சி | splendour |
| மிதுவடி | மிதிதடி | wooden slippers |
| மினைக்கேடு | வினைக்கேடு | destruction of deed or work |
| முகந்து | முகர்ந்து | examined by smell |
| முடுக்கு | மிடுக்கு | pride |
| முதலை | முதலை | crocodile |
| முந்தாணி | முன் தானை | skirt of a person's cloak |
| முத்துதல் | முற்றுதல் | ending |
| முயர்ச்சி | முயற்சி | effort, activity |
| முயர்ச்சித்தான் / முயற்சித்தான் | முயன்றான் | he made effort |
| முளகாய் | மிளகாய் | chillies |
| முழிக்கிறது | விழிக்கிறது | remain astonished |
| முழுங்கு | விழுங்கு | swallow up |
| முன்னூறு | முந்நூறு | three hundred |
| மூச்சி | மூச்சு | breath |
| மூண்டு | மூன்று | three |
| மெள்ள | மெல்ல | slowly |
| மோர்ந்து / முகந்து | மோந்து | examined by smell |
| மோவாய்க்கட்டை | முகவாய்க் கட்டை | face |
| யாபாரி | வியாபாரி | trader |
| யாப்பாணம் | யாழ்ப்பாணம் | Jaffna |
| ரங்கன் | அரங்கன் / இரங்கன் | Ranga |
| ராகம் | அராகம் / இராகம் | Raga |
| ராமன் | இராமன் | Rama |
| ரூபாய் | ரூபா | rupee |
| ரெட்டை | இரட்டை | pair, two |
| ரெண்டு | இரண்டு | two |

| | | |
|---|---|---|
| ரேகை | இரேகை | line |
| ரொம்ப | நிரம்ப | in full |
| ரோமம் | உரோமம் | hair |
| வகிறு<br>வயறு | வயிறு | stomach |
| வத்தி | வர்த்தி | sticks of frankincense |
| வலது | வலம் | right |
| வலது கை | வலக்கை | right hand |
| வவுத்துவலி | வயிற்று வலி | stomach-ache |
| வழவு | வளவு, வளைவு | crookedness, bend |
| வாய்வு | வாயு | gas |
| விசிரி | விசிறி | fan |
| விடியப்புறம் | விடியற் புறம் | break of day |
| விதரம் | விரதம் | fasting |
| விரால் | வரால் | a kind of fish |
| விரை | விதை | seed |
| விற்க்கும் | விற்கும் | that which is being sold |
| வீடு மேய்தல் | வீடு வேய்தல் | thatching a house |
| வெத்திலை | வெற்றிலை | betel leaf |
| வெங்கலம் | வெண்கலம் | bell-metal |
| வெண்ணை | வெண்ணெய் | butter |
| வெய்யில் | வெயில் | heat of the sun |
| வென்னீர் | வெந்நீர் | warm water |
| வேக்குரு | வேர்க்குரு | prickly heat |
| வேண்டாம். | வேண்டா (வேண்டும் என்பதின் எதிர்மறை.) | don't want |
| வேஷ்டி | வேட்டி | cloth |
| வைக்கல் | வைக்கோல் | straw |
| வேணும் | வேண்டும் | is wanted |
| வேர்வை | வியர்வை | sweat, perspiration |

## மயக்கம் விளக்கும் சொற்கள்

சொற்களின் உண்மைப் பொருட் குறிப்பையும் வேறுபாட்டையும் தெளிவாக உணர்ந்து கொள்ளாமையால், மக்கள், சில சொற்களை ஒன்றோடொன்று மயக்கிவிடுவதுண்டு. அங்ஙனம் ஏற்படுகின்ற மயக்கங்களை உதாரணங்கள் வாயிலாக நோக்கித் தெளிந்து கொள்ளலாம்.

உ-ம்:

1. (அ) மலைகள் உள்ள இடங்களிலே குளிர் **அதிகம்**. (அதிகம்-அளவைக் குறித்தது ; much)

(ஆ) இக்காலத்திலே வெளியிடப்படும் நூல்களிலே காணப்படுகின்ற பிழைகள் **அநேகம்**. (அநேகம் - எண்ணைக் குறித்தது ; many)

2. (அ. i) கந்தன் கொண்டுவந்தவை புத்தகங்கள் **அல்ல**.

(அ. ii) நான் எழுதிய கடிதம் இது **அன்று**, [(அல்ல, அன்று - ஒரு பொருள் இன்னொன்றல்லாமையைக் குறித்தது ; denies something that is said.) 'அல்ல': அஃறிணைப் பன்மை வினைமுற்று ; 'அன்று': அஃறிணை ஒருமை வினைமுற்று.]

(ஆ) அந்த வயலிலே குதிரைகள் **இல்லை**. (இல்லை - ஒன்று ஓரிடத்திலின்மையைக் குறித்தது ; denies the existence of something.)

3. (அ) நான் **அவசரமாக** விமான நிலையத்துக்குப் போகவேண்டியிருந்தமையால், வண்டியை விரைவாக ஓட்டிச் சென்றேன். (அவசரம்-விரைவு ; urgency.)

(ஆ) இருளிலே செல்பவர்கள் கையிலே விளக்குக் கொண்டு செல்வது **அவசியம்**. (அவசியம் - இன்றியமையாமை ; necessity.)

4. (அ.) கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு **அறிக்கையிலே**, சங்க ஆதரவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் விளக்கமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.
(அறிக்கை - நிகழ்ச்சி வரலாறு - report.)

(ஆ) இன்று மாலை நடைபெறவிருக்கும் கூட்டத்தைப் பற்றிய **அறிவிப்பு** (அறிவித்தல்) இப்போதுதான் எனக்கும் கிடைத்தது.
(அறிவிப்பு, அறிவித்தல் - notice.)

5. (அ) **ஈண்டு**க் கூறியவற்றை நீங்கள் ஒருபொழுதும் மறக்கலாகாது.
(ஈண்டு - இவ்விடம் ; here.)

(ஆ) உங்களை **ஈன்று** பேணி வளர்த்த தாயே முன்னறி தெய்வம் ஆவாள்.
(ஈன்று - பெற்று ; giving birth to.)

6. (அ) உனக்கு **எத்தனை** புத்தகங்கள் வேண்டும் என்று கணக்கிட்டுக் கூறுதல் அவசியம்.
(எத்தனை - எண்ணைக் குறித்தது ; what number.)

(ஆ) எங்களுக்கு **எவ்வளவு** நெல் அனுப்பினார்கள் என்று கூறமுடியாது.
(எவ்வளவு - அளவைக் குறித்தது ; how much.)

7. (அ) "மாமன் மகள்" **என்னும்** நாடக நூலினை இயற்றியவர் நாமக்கல் கவிஞர்.
(என்னும் - எனப்படும் ; known so.)

(ஆ) தந்தையார் **இன்னும்** வந்திலர்.
(இன்னும் – இப்பொழுதும்; even now.)

8. (அ) அவனை எல்லோரும் நாஸ்திகன் என்றே உறுதி கூறினும், அவன் கடவுளை **ஏத்தினன்** என்பதை எவரும் மறுக்க முடியாது.
(ஏத்தினன் - வணங்கினன்; he prayed to.)

(ஆ) தான் இழுத்துக்கொண்டு வந்த சிறு வண்டியிலே எல்லாப் பொருள்களையும் கந்தன் **ஏற்றினன்.**
(ஏற்றினன் - he loaded.)

9. (அ) அந்தப் பசுவின் **கன்று** புல் வெளியிலே துள்ளித் துள்ளித் திரிந்தது.
(கன்று - calf.)

(ஆ) கண்டிக்குப் போகும் வழியிலே பல மலைகளைக் **கண்டு** மகிழ்ந்தோம்.
(கண்டு - பார்த்து; having seen.)

10. (அ) நேற்றுக் காலையில் அவ் வீதி வழியாகக் **குமரன்** ஒருவன் வரக் கண்டேன்.
(குமரன் - இளைஞன்; youth.)

(ஆ) தனது **குமாரன்** இராமன் வனம் புகுந்த செய்தியைக் கேள்வியுற்றதும் தசரதன் உயிர் துறந்தான்.
(குமாரன் – மகன்; son.)

11. (அ) யாழ்ப்பாணத்தவர் **குமரி**களைத் தன்னந் தனியே வெளியிற் செல்ல விடுவதில்லை.
(குமரி - இளையள்; young girl.)

(ஆ) சனகன் **குமாரி** தசரதன் மகனை இராமனைக் கடைக் கண்ணால் நோக்கினள்.
(குமாரி - மகள்; daughter.)

12. (அ) சுப்பையன் கொலை செய்ததாகக் **குற்றஞ் சாட்டப்பட்டு**ச் சிறையில் இருக்கிறன்.
(குற்றஞ்சாட்டு - to accuse.)

(ஆ) தந்தையார் மாலையிலே வீட்டுக்குத் திரும்பியவுடன் மாற்றாந்தாயின் மேற் **குற்றஞ்சாற்றுவது** அவளுக்கு இயல்பாய்விட்டது.
(குற்றஞ்சாற்று - to tell the crime.)

13. (அ) இலங்கையின் நடுப்பகுதியிலே **குன்று**கள் பல உள்ளன
(குன்று - மலை; mountain.)

(ஆ) கடந்த பெரும்போரிலே **குண்டு** வீசியே பல நாடுகளை அழித்தார்கள்.
(குண்டு - bomb.)

14. (அ) சந்திரனைப் பார்த்தும் சில நாய்கள் **குரைப்பது**ண்டு.
(குரை - to bark.)

(ஆ) முந்திரிகைக் கொடியிலே பழங்கள் **குலை** குலையாகத் தொங்கிக் கொண்டிருந்தன.
(குலை - bunch.)

15. (அ) அறிஞர்களுடன் பேசும்பொழுது மிகத் **தாழ்மையுடன்** பேசுதல் வேண்டும்.
(தாழ்மை - பணிவு ; humility.)

(ஆ) **தாழ்வு** மனப்பான்மையை ஒழிக்காவிட்டால் மக்கள் சிறப்படைய முடியாது.
(தாழ்வு - கீழ்மை ; inferiority.)

16. (அ) **தீன்** பண்டங்களை ஈக்கள் மொய்க்கும்படி வெளியே வைத்தலாகாது.
(தீன் - eatables.)

(ஆ) ஆடு மாடுகளுக்கு நல்ல **தீனி** அளித்துப் பேணி வளர்த்தால் மிகுந்த பயன்களைப் பெற்றுக்கொள்ளுதல் கூடும்.
(தீனி - இரை ; food for animals.)

17. (அ) உடம்பிலுள்ள அழுக்கை அடிக்கடி **துடைத்துக்** கழுவ வேண்டும்.
(துடை - to whip off)

(ஆ) தொடுக்கப்படுவதனால் பூமாலைக்குத் **தொடை** என்று பெயர்.
(தொடை - flower-garland.)

18. (அ) பகைவர்கள் ஏதோ சூழ்ச்சி செய்வதாக எனக்குத் **தோன்றுகிறது.**
(தோன்று - to appear)

(ஆ) குப்பைகளைப் புதைப்பதற்காகச் சிலர் தங்கள் வீட்டுகளுக்குப் பக்கத்திலே குழிகள் **தோண்டுவதுண்டு.**
(தோண்டு - to dig.)

19. (அ) வண்டிகளை நடு வீதிகளில் **நிறுத்துவது** கூடாது.
(நிறுத்து - to stop.)

(ஆ) எங்கள் ஊரிலே வாசிகசாலை யொன்று **நிறுவுவது** அவசியம்
(நிறுவு - to establish.)

20. (அ) கொள்ளை நோய் பரவி யிருப்பதனால் ஊரை விட்டு **நீங்குதல்** வேண்டும் என்று நீங்கள் கருதியது தவறு.
(நீங்குதல் - leaving.)

(ஆ) உடல் நலத்துக்காகவேனும் மக்கள் கடலில் **நீந்துதல்** வேண்டும் என்று வைத்தியர் கூறினர்.
(நீந்துதல் - swimming.)

21. (அ) மலை நாட்டுப் பகுதியில் உள்ளவற்றில் மிகச் சிறந்தது கண்டிப் **பட்டணம்.**
(பட்டணம் - a large town.)

(ஆ) யாழ்ப்பாணப் **பட்டினம்** ஒரு காலத்திலே கப்பலோட்டத்துக்குப் பிரசித்தி பெற்றிருந்தது.
(பட்டினம் - a sea-port town.)

22. (அ) **பருமை**யாகத் தோற்றமளிக்கும் தபால்களைத் தபாலக அதிபர் திறப்பித்துப் பார்ப்பதுண்டு.
(பருமை - bulk.)

(ஆ) மக்கள் **பெருமை** பெறுவதற்குக் கல்வியுடைமை இன்றியமையாதது
(பெருமை - greatness.)

23. (அ) வான்கோழி தன்னை மயிலாகப் **பாவித்துக்** கொண்டது.
(பாவித்துக் கொள்ளல் - conceiving.)

(ஆ) நாங்கள் இப்பொழுது இந்த வண்டியையே **உபயோகிக்கின்றோம்.**
(உபயோகி - to use.)

24. (அ) நாங்கள் வணக்கத்துக்காக நித்தமும் கோயிலுக்குப் போவது **வழக்கம்**
(வழக்கம் - habit, custom.)

(ஆ) நகரத்திலிருப்பவர்களுக்கு அயலவர்களுடன் சிலவேளைகளிற் **பழக்கம்** ஏற்படுவதில்லை.
(பழக்கம் - acquaintance.)

25. (அ) திரு. இளமுருகனர் இன்றைய கூட்டத்தில் 'மொழித் தூய்மை" என்னும் பொருள் பற்றிப் **பேசுவார்.**
(பேசு - to speak; to lecture.)

(ஆ) நான் குற்றம் புரிந்தால் தந்தையார் **ஏசுவார்.**
(ஏசு - to reproach.)

26. (அ) தமிழ்க் கழக ஆண்டு விழாவுக்குத் திரு. சோமசுந்தர பாரதியார் தலைமை **வகிப்பார்.**
(வகி - தாங்கு i.e. to preside.)

(ஆ) நிகழ்ச்சி நிரலினைப் பாடசாலை ஆசிரியர்கள் **வகுத்து** அமைத்தல் வேண்டும்.
(வகு - திட்டமிடு i.e. to plan or lay out)

27. (அ) நாங்கள் வசிக்கின்ற இந்த **உலகம்** உருண்டை வடிவமானது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.
(உலகம் - world.)

(ஆ) வெள்ளி விலையுயர்ந்த **உலோகம்** எனப்பட்டாலும், பொன்னுக்கு ஈடானதன்று.
(உலோகம் - metal.)

28 (அ) நீதி நூல்களையெல்லாம் இன்றைய இளைஞரே படித்து **உணர** வேண்டும்
(உணர் - to understand.)

(ஆ) நனைந்த ஆடைகளை வெயிலிலே போட்டு **உலர** விடவேண்டும்.
(உலர் - to dry.)

29. (அ) துச்சாதனன் துரௌபதையின் **துகிலை** உரிந்தபொழுது சபையி லிருந்தோர் வெட்கமுற்றுத் தலை குனிந்தனர்.
(துகில் - clothes.)

(ஆ) சூரியன் உதிக்கும்பொழுது **துயில்** கொள்வது உடல் நலத்துக்கு ஆகாது.
(துயில் - sleep)

30. (அ) முன்னொரு காலத்திலே, உலக இன்பங்களைத் **துறந்து** காட்டில் வாழ்வதே முத்தி தருவதாகும் எனச் சிலர் கருதினர்.
(துற - to renounce)

(ஆ) வீட்டின் கதவைத் **திறந்து** விளக்கேற்றும்படி கூறிவிட்டு வருகி றேன்.
(திற - to open)

31. (அ) யாழ்ப்பாணத்திலுள்ள சிலர் பனையோலைகளைக் கொண்டு தங்கள் வீடுகளை **வேய்**கிறார்கள்.
(வேய் - to thatch)

(ஆ) தோட்டத்திலுள்ள புல்லினை மாடுகள் **மேய்**கின்றன.
(மேய் - to graze)

32. (அ) அழகான **மயில்** தோகையை விரித்து ஆடுகின்றது.
(மயில் - peacock)

(ஆ) மாணிக்கன் காட்டுவழியாகப் பல **மைல்** தூரம் நடந்து சென்றான்.
(மைல் - mile.)

## இந்துஸ்தானிச் சொற்கள்

[இந்தியும் உருதுவும் கலக்கப் பெற்றதே இந்துஸ்தானியாம்]

அகஸ்மாத்தாய் - தற்செயலாய்; by chance, unexpectly, causelessly
அசல் - முதல்; principal, capital, மூலம்; the original
அஞ்சனு - பயிர்ச்செயற்கை மதிப்பு; estimate or appraisement of the probable amount and value of the crop standing on a field
அண்டா - கிடாரம்; a large vessal, cauldron
அஸ்திபாரம் - அடியிடுதல்; foundation
அந்தஸ்து - நிலைமை; condition, rank, standine; ஒழுங்கு; regularity, order
அமீர் - தலைவன்; commander, nobleman
அமுல் - அதிகாரம்; authority, sway
அயன் - அரசாங்க நிலம்; government lands
அனுமத் - பிரத்தியேகமான; not belonging to any specified item, separate

அஜ்மாஷ் - பரிசோதனை ; experiment, scrutiny
அஜாடி - பயனற்றவன்; a good-for-nothing fellow; a useless fellow
ஆசாமி - ஆள், individual
ஆஜர் - வரவு குறித்தல் ; present, in attendance; ஆயத்தம், ready
இனும் - நன்கொடை ; present, reward
இஸ்திரிப் பெட்டி - துணியழுத்து பெட்டி ; flat-iron used by dhobies
இஜார் நாமா - வார ஒப்பந்தம், deed of lease
இஸ்கால் - தடை ; hindrance
இஸ்தியார் - விளம்பரம் ; proclamation, notice, advertisement
உண்டியல் - காசோலை ; cheque, draft காணிக்கைப் பெட்டி; alms-box
உறுமால் - தலைப் பாகை ; turban ; சால்வை ; shawl
உஷார் - விழிப்பு ; wakefulness, carefulness, prudence. ஆயத்தம் ; readiness, alertness
ஐவேஜ் - உடைமை ; property, wealth
கச்சேரி - இறைவரிக் கந்தோர் ; revenue office, kachcheri. அரங்கு, assembly as for musical entertainment
கசாப்புக் கடை - ஊன் இறைச்சி விற்குமிடம் ; butcher's shop
கசாலா - துன்பம் ; distress, afflliction. வருத்தம் ; difficulty obstruction.
கமான் - வளைவு ; arch. வளைந்த குறடு ; curling tongs
கலாய் - உலோகப் பாத்திரங்களுக்குப் பூசப்படும் ஈயம் ; tin used for tinning vessels
கலால் - கள், மது; toddy
கவாத் - போர்வீரர் பயிலுகின்ற உடற்பயிற்சி; military drill
கரூர் - உறுதி ; stability, fixity
கரூர் விலை - ஒரே விலை ; fixed price
கஜானு - கருவூலம் ; treasury
கஸ்து - இரவிற் சுற்றும் ஊர்க்காவல் ; night-patrol
கஸ்பா - தலைமையூர் ; chief station of a district
கஸரத் - உடற் பயிற்சி ; physical exercise
காலி - போக்கிலி ; worthless fellow
கிச்சடி - பச்சடி ; curry prepared with curd, coconut and green chillies
கில்லடி - நேர்மையற்றவன் ; scamp
கிலாசு - கப்பற்றொழிலாளி ; lascar, Indian sailor
கிஸ்தி - நில வரி ; land revenue payable in instalments
குமாஸ்தா - எழுது வினைஞன் ; clerk
குர்சி - நாற்காலி ; chair
குஸ்தி - மற் போர் ; wrestling
குஷி - கொண்டாட்டம் ; gaiety, merriment

கேலி - விளையாட்டு ; jest, joke, fun ; நகையாடல் ; ridicule, mockery
கைதி - சிறையாளி ; prisoner, captive, accused person
கோஷா - முக்காட்டுப் பெண் ; zenana lady
சந்தா - கையொப்பப் பணம், கட்டணப் பணம் ; money-subscription
சபாஷ் - "மிக நன்று"; "well done", "excellent",
சவாப்பு - விடை; answer, reply
சவாரி - ஊர்வு, மேற்செலவு ; ride, drive
சவால் - அறை கூவல்; challenge. வினு; question, interrogation
சவான் - சேவகன்; peon, constable
சாமான் - பண்டம், பொருள்; goods, articles
சிபார்சு - மதித்துரை; recommendation
சிப்பந்தி - வேலைக்காரன்; establishment of clerks
சிப்பாய் - போர் வீரன்; seapoy
சிரஸ்ததார் - தலைமைக் கணக்காளன்; head accountant of a taluk
சொக்காய் - சட்டை; coat, shirt, jacket .
சொகுசு - சுகானுபவம்; luxury. நேர்த்தி; refinement, neatness
சோதா - சோம்பேறி; lazy fellow
டாணு - பாடி காவல், நகர்க் காவல்; police station, guard house
டேரா - கூடாரம்; tent. படை மாடம்; camp
டோபி - வண்ணான்; washerman
டோலி - ஏணை; litter
தகவல் - செய்தி; information விடை; answer
தகரார் - தடை; objection, altercation. விவாதம்; dispute
தம்படி - கால் துட்டு; one-twelth of an anna
தமாஷ் - வேடிக்கை; sport, fun
தயார் - ஆயத்தம் ; readiness, preparedness
தர்பார் - ஓலக்கம் ; royal audience
தரப்பு - பக்கம் ; party, side
தஸ்தவேஸ் - ஆவணம் ; document. சான்றேடு ; voucher, legal paper bond as legal evidence
தாக்கல் - பதிகை ; entry, registration
தாசில்தார் - வரியாளர் ; revenue officer in charge of a taluk
தாலுகா – உரிமை ; connection, dependence. சிறு பிரதேசம்; revenue sub-division
தாவா - வழக்கு ; plaint, case. தடை : objection, obstruction
தினுசு - வகை ; kind, grade
துப்பட்டி - இரட்டு ; coarse cotton cloth, cotton blanket
நகரா - முரசு ; large kettle-drum
நகல் - படியல் ; duplicate copy
நகாஸ் - நுணுக்கம் ; delicate

பங்கா - தூங்கு படல் விசிறி ; punkah; a large swinging fan
பஞ்சாயத் – ஐவர் குழு ; a body of five persons sitting as a court of arbitration
படுதா - திரைச் சீலை ; curtain, screen, veil
பந்தோபஸ்து-திட்டப்படுத்திய ஒழுங்கு; agreement, settlement. காவல்; care, safety
பர்வாணு - உத்தரவு ; order, written command
பல்லக்கு - சிவிகை : palanquin
பல்டி - கரணம் ; a gymnastic feat
பவுஞ்சு - படை ; army, troops. ஒழுங்கு ; order, course, range
பவுஷ் - செல்வம் ; afflluence, opulance, prosperity. சோபை ; splendour, felicity. செருக்கு ; pride
பாக்கி - நிலுவை ; balance, arrears. மிச்சம் ; remainder
பாரா - காவல் ; watch, custody. பாகம் ; bit, fragment
பாரிகத்து - நுண்மை ; sublety, minuteness
பிராது - வழக்கு ; complaint, suit
பேட்டி - காண்கை ; interview
பேஷ் - "மிக நன்று"; 'very good", "excellent"
பேஜா - தாழ்ந்தது ; low quality
பைசல் - தீர்ப்பு ; judgement, decision
பைசா - சில்லறை ; copper change. காலணா ; quarter anna
பைதா - வண்டிச் சக்கரம் ; wheel of a cart
பைல்வான் - மல்லன் ; athlete, wrestler
மகஜர் - பொது முறையீடு ; written representation, memorial
மசாலை - கறிச் சம்பாரம் ; condiments
மசோதா - வரைமுறி ; rough draft as of a document (also draft bill of an Act)
மராமத் - பழுதுபார்ப்பு ; repairs
மனு - முறையீடு, வேண்டுகோள் ; request, petition, prayer
மஜ்ஜிதி - பள்ளிவாசல் ; mosque
மஹஸர் - வேண்டுகோள், விண்ணப்பம் ; petition, memorial
மஹால் - அரண்மனை ; palace
மஸ்தான் - குடியன் , drunkard
மஸ்து - கொழுப்பு; fat. மயக்கந்தரும் பொருள் ; intoxicant
மாமூல் - பழைய வழக்கம் ; established usage
மாகுல் - பயிர் விளைச்சல் ; produce
மாஜி - பழைய, முந்தின ; past, former. காலஞ்சென்ற; the late
மிட்டா - நாட்டின் உட் பகுதி ; sub-division of a district
மிட்டாதார் - வேள், நாடாளி ; male proprietor of a "மிட்டா".
மிட்டாய் - பண்ணிகார வகை ; sweet-meat

முகாம் - தங்கலிடம், பாசறை; place of encamping, camp
முச்சலிக்கா-இணங்கலெழுத்து ; written obligation, agreement, bond
முசாபரி - வழிப்போக்கர் ; traveller
முரபா - ஊறுகாய்; preserve, jam. முரப்பு ; roughness
முலாம் - பொன் வெள்ளிப் பூச்சு ; gilding, electroplating
முன்சிப் - ஊராளி ; village headman
முன்ஷி - மொழியாசிரியர் ; teacher of a language, munshi
முஸ்தீப் - ஆயத்தம் ; preparedness. தளபாடங்கள் ; appurtenancese, paraphernalia
மேஸ்திரி - கொத்தன் ; head workman. மேற்பார்வையாளர்; overseer, superintendent, foreman
ரத்து - தள்ளுபடி ; repeal, rejection, abrogation
ரஸ்தா - தெரு ; street. பெரும்பாதை ; high road
ரஜா - விடுமுறை ; holiday, vacation. அனுமதி ; permission, leave
ராஜினாமா - வேலை விடுகை ; resignation
ருஜு - அத்தாட்சி, சான்று ; proof ; கையெழுத்து ; signature
ரொக்கம் - மொத்தப் பணம் ; cash, ready money
லங்கோடு - சல்லடத் துணி ; strip of cloth fitted to the loins (as of a wrestler)
லதி - கழி ; staff, cane, cudgel
லாகா - திணைக்களம், பகுதி, துறை ; department
லாடம் - குரைப் பறனை ; horse-shoe
லாயக் - தகுதி ; fitness, suitability. செருக்கு ; haughtiness
லாயம் - கொட்டில் ; shed, குதிரை கட்டுமிடம் ; stable for horses
லேவாதேவி - கொடுக்கல் வாங்கல் ; money dealings
லோட்டா - குவளை ; pipkin, a small metal vessel generally of brass
வக்கில் - வழக்கறிஞர் ; authorized attorney
வக்காலத்து - வழக்காட்டு ஆணை ; power of attorney given to a lawyer for conducting a case
வஜா - நிலவரிக் குறைப்பு ; deduction or abatement (as of revenuel)
வஜுல் - தண்டல் ; collection. தண்டும் வரி; collections as of revenue
வஸ்தாது - மற்போர் வல்லோன் ; gymnast, wrestler
வாபீஸ் - மீளப்பெறுகை ; withdrawl
வாய்தா - கெடுவு, தவணை ; instalment
வார்சு - மரபுரிமையாளன் ; heir
ஜட்கா - குதிரைவண்டி ; small one-horse cart
ஜதை - இரட்டை, இணை ; pair
ஜப்தி - பறிமுதல் ; seizure, distraint
ஜமீன் - வேளகம் ; estate of a zemindar

ஜமீன்தார் - கிழார், வேள் ; landholder, zemindar
ஜல்தி - விரைவு ; quickness, speed
ஜவாப் - பொறுப்பு ; responsibility. பதில் ; reply
ஜவான் - கட்டிளமையுடையவன் ; strong robust youth. சேவகன் ; peon, police constable
ஜாகை - தங்கிடம் ; residence
ஜாட்டி - தாற்றுக்கோல் ; whip
ஜாப்தா - பட்டியல் ; list, inventory
ஜாமீன் - பிணை ; surety, security
ஜால்ரா - கொச்சகம் ; decorative network, fringe
ஜாலர் - சிங்கி : cymbals
ஜாஸ்தி - மிகுதி ; abundance, excess
ஜிப்பா - மேற் சட்டை ; a kind of sleeveless shirt
ஜீரா - பாகு ; treacle
ஜீனி - சேணம் ; saddle
ஜெண்டா - கொடி ; flag
ஜேப் - சட்டைப் பை ; pocket
ஜோர் - நேர்த்தி ; fine (as of workmanship)
ஸர்க்கார் - அரசினர் ; government
ஷர்பத் - தேறல் ; sherbet, syrup
ஷரத்து - நிபந்தனை ; regulation, condition
ஷோக் - பகட்டு ; foppishness, pomposity.

## போர்த்துக்கேயச் சொற்கள்

| | |
|---|---|
| அச்சாறு | pickles. |
| அட்டாளை | watch-tower. |
| அடுத்தார் | altar. |
| அத்வெந்து | advent. |
| அப்புக்காத்து | advocate. |
| அப்போஸ்தொலு | apostle. |
| அம்பர் | amber; a fossil resin. |
| அமார் | ship's cable. |
| அமித்து | amice. |
| அலப்பாரி | to ring the bells on some festive day |
| அலவாங்கு | crowbar. |
| அலுகோசு | hangman. |
| அலுப்பாந்தி | custom-house |
| அலுப்பு நேத்தி | pin. |

| | |
|---|---|
| அலுமாரி | almyrah. |
| அரக்கு | arrack. |
| அன்னாசி | pine-apple. |
| அன்னவுன்னா | custard apple (wild) |
| ஆக்குத்து | official papers, act of appointment. |
| ஆசுப்பத்திரி | hospital. |
| ஆஞ்சு | angel. |
| ஆத்தா | ordinary species of custard apple. |
| ஆயா | nurse. |
| ஆல்வை | alb. |
| இகிரேசு | church. |
| இலாசடி | troublesome. |
| இலேஞ்சி | handkerchief |
| இறப்பிறமாது | the 'reformed' religion |
| இருத்தல் | a pound |
| இறைசால் | coin varying in value |
| இறைசுவதோர் | receiver (a sort of kanakka-pillai) |
| இஸ்கோலை | school |
| இஸ்தோலா | stole |
| இஸ்பிரீத்துசாந்து | Holy Ghost |
| ஈரேசா | church |
| உலாந்தேசு | Hollander |
| எம்பிரதோர் | emperor |
| ஏலம் | auction |
| ஒப்பீசு | office of the dead |
| ஒஸ்தி | Host |
| ஓரிசா | to work to windward |
| கசாது | marriage |
| கசுலா | chasuble |
| கட்டைக் களிசாண் | a narrow coarse web of cloth |
| கடதாசி | paper, letter |
| கத்திரிசால் | candle-stick |
| கத்தோலிக்கு | Catholic |
| கதிரை | chair |
| கந்தாரி | to sing (used for European way of singing alone) |
| கப்பலா | chapel |
| கப்பாத்து | gelding, pruning tree |

| | |
|---|---|
| கப்பித்தான் | captain |
| கமான் போகிறது | to go on circuit (for official visits) |
| கமானியர் | a travelling officer (for men in Engineering Department) |
| கமிசு | shirt |
| கரத்தை | small cart |
| கலிசு | chalice |
| களிசாண் / களிசான் | trousers |
| கஜு | the cashew tree |
| காசா | muslin |
| காப்பிரி | negro |
| காப்பை | cope |
| காம்பறை | apartment |
| கார்ப்பு | fork |
| கிருதி | railings |
| கிறீஸ்தவன் | Christian |
| குசினி | kitchen |
| குதம் | godown |
| கும்பாசு | compass |
| கும்பாதிரி | god-father |
| கும்மாதிரி | god-mother |
| குருசு | cross |
| குருசுபிக்காசு | crucifix |
| குளோவை | globe |
| குறோசு | a gross |
| குறேசுமை | lent |
| கொஞ்சேஞ்சி | [Immaculate] Conception [of the Virgin Mary] |
| கொடுதாம் | cord |
| கொடுதார் | to cut |
| கொந்திருத்து | contract |
| கொந்திசு | terms of a contract |
| கொந்தைமணி | beads |
| கொப்பர் பெட்டி | a chest |
| கொம்பாஞ்ஞி | company |
| கொம்பிசம் | confession |
| கொம்பிசாரி | to confess |
| கொம்மாண்டோர் | commander |

| | |
|---|---|
| கொய்யா | gauva |
| கோப்பை | cup |
| கோவா<br>கோவி | cabbage |
| சக்கிடுத்தார் | secretary |
| சக்கிரிஸ்தி | vestry |
| சக்கிறமேந்து | sacrament |
| சங்கிலிஸ்தாம் | sexton |
| சத்தனுசு | Satan |
| சந்த<br>சம் | Saint |
| சப்பாத்து | shoe |
| சரோலை | Andor for procession of images |
| சலாது | salad |
| சறப்பிளு | harp |
| சன்னல் | window |
| சாயை | petticoat |
| சாவி | key |
| சிக்காராய் | firmly |
| சிஞ்ஞோர் | title of honour |
| சித்தாரி | to cite |
| சிப்பம் | a pack forming a man's load |
| சிப்பாய் | seapoy |
| சீத்தை | chintz |
| சீதாரி | city |
| சீமேந்து | cement |
| சுத்தான் | cassock |
| சுப்பிளீசு. | surplice |
| சேந்தை | tent |
| சொளுதாது | soldier |
| சோம்பறை | shading |
| சோலி | women's under-jacket |
| தம்பாக்கு | tampac, (a kind of copper and zinc alloy) |
| தம்பேறு | drum |
| தவணாக்குலு | tabernacle |
| தவறணை | tavern |
| தஸ்நேவிசு | [Our Lady] of Snows |
| தாச்சி | copper pot |

| | |
|---|---|
| திதாள் | thimble |
| திருந்தாதி | tolling of the 'Angelus' beil |
| திருங்கு | door or window bar |
| தீசிமை | tithe |
| தீந்தை | ink, tint, colour |
| துப்பாக்கி | a gun |
| துப்பாசி | topaz |
| துரிவில் | censer |
| துருப்பு | troop |
| துலங்கு | prison, stocks |
| துவாய் | towel |
| தெஸ்தமேந்து | testament |
| தொன் | Don, title of honour |
| தோம்பு | public register of lands |
| தோம்பை | bier |
| தோனா | title of a lady (usually European) |
| நங்கூரம் | anchor |
| நத்தார் | Christmas |
| நவித்து | incense-box |
| நொத்தீசு | notice |
| நோயை | title of a lady (usually Eurasian) |
| நோவினா | devotion of nine days |
| நோனு | title of a lady (usually European) |
| பசாம் | passion of our Lord |
| பட்டாசு | crackers |
| பட்டாளம் | battalian |
| பப்பாசி / பப்பாய் | papaw |
| பம்பிளாஸ் | abobora |
| பாசு | representation of the passion |
| பாடம் | a bale |
| பாண் | bread |
| பாதிரி | Father (Catholic Priest) / Protestent ministers |
| பாப்பு | Pope |
| பாப்பூசு | sandals |
| பாஸ்கு | Easter |
| பிக்கான் | pickaxe |
| பிசுங்கான் | pieces of broken bottle |
| பிந்தாரி | to paint |

| | |
|---|---|
| பிந்தாரிப்பு | a picture |
| பிப்பினி | cucumber |
| பிருசர் | pleasure [party] (a sort of picnic held after the feasts of the church) |
| பீங்கான் | basin, plate |
| பீத்தை | ribbon |
| பீப்பா | a large cask |
| பீயோன் | peon |
| பீரங்கி | a cannon |
| பீரிசு | saucer |
| புலசந்தோர் | merry - maker |
| புற்பக்கூடு | pulpit |
| புறந்தால் | frotnal |
| புறப்பேத்து | Prophet |
| புனல் | funnel |
| பெட்டிசம் | petition |
| பெலிசந்தி | president |
| பெறகாம் | proclamation |
| பேக்கிணாஸ் | poor people |
| பேனை | pen |
| பொத்தான் | button |
| போரணை | oven for baking bread |
| மசுவாது | keeping a mistress |
| மடுத்தல் | hammer |
| மத்திரோணா | matron |
| மனுவாலை | Manual of prayers |
| மாந்தை | mantle (This is an attachment to girl's jackets under their knot of hair) |
| மார்த்திர் | martyr |
| மிசல் | missal |
| மிசியோணாரி | missionary |
| மிஸ்திசு | Eurasian |
| மீசா | mass |
| மீசாம் | mission (parish) |
| மெலிஞ்சி | accountant |
| மேசு | stockings |
| மேசை | table |
| மேஸ்திரி | artist |

| | |
|---|---|
| மையோர் | great |
| மையோர்க் கிழங்கு | manioc |
| மொடுதாம் | stewart |
| மோழை | sauce |
| வஞ்சிலி | Gospel |
| வட்டம் | agio |
| வத்தகை | sweet water - melon |
| வத்தாளை | sweet potato |
| வயினாத்து | bayonet |
| வரத்தி | cap (peculiar head dress for dramas) |
| வரோணிக்கம் | medal, casket for the crucifix |
| வள்ளம் | boat, canoe |
| வாங்கு | bench |
| வாணிசு | varnish |
| வாத்து | duck |
| வாளி | bucket |
| விக்காரியு | vicar |
| விசுப்பு | bishop |
| வில்லூதி | velvet |
| விலிம்பி | bilimbin |
| விவிலியம் | Bible |
| விருந்தை | verandah |
| விறுமி | gimlet |
| வின்னாகிரி | vinegar |
| விஸ்கோத்து | biscuit |
| வீதுறு | tumbler |
| வெந்திசாரி | to bless |
| வெந்தீசு | auction |
| வேஸ்பர் | Vespers |
| வையிலா | to dance |
| யல்லூசி | lattice |
| லாக்கிரி | sealing wax |
| லேஞ்சி | handkerchief |
| றவுக்கிஞ்ஞை | fiddle |
| றேந்தை | lace |
| ரோசாயிலு | rosary |

# மரபுச் சொற்கள்

## 1. உயிரினங்கள் சிலவற்றின் தொனிகள்

| | | |
|---|---|---|
| அணில் | ... | கீச்சிடும் |
| ஆடு | ... | கத்தும் |
| ஆந்தை | ... | அலறும் |
| எருது | ... | முக்காரம் போடும் |
| கரடி | ... | கத்தும் |
| கழுதை | ... | கத்தும் ; கூவும் |
| காகம் | ... | கரையும் |
| கிளி | ... | கொஞ்சும் ; பேசும் |
| குதிரை | ... | கனைக்கும் |
| குயில் | ... | கூவும் |
| குருவி | ... | கீச்சிடும் |
| கோழி | ... | கொக்கரிக்கும் |
| சிங்கம் | ... | கர்ச்சிக்கும் |
| சேவல் | ... | கூவும் |
| தவளை | ... | கத்தும் |
| தேனீ | ... | இரீங்காரஞ் செய்யும் |
| நரி | ... | ஊளையிடும் |
| நாய் | ... | குரைக்கும் |
| பசு | ... | கதறும் |
| பல்லி | ... | சொல்லும் |
| பன்றி | ... | உறுமும் |
| பாம்பு | ... | இரையும் ; சீறும் |
| புலி | ... | உறுமும் |
| புறா | ... | குறுகுறுக்கும் |
| பூனை | ... | உறுமும் ; சீறும் |
| மயில் | ... | அகவும் |
| மாடு | ... | கத்தும் |
| யானை | ... | பிளிறும் |
| வண்டு | ... | இரையும் |

## 2. அஃறிணைப் பெயர்கள்

| உயிரினம் | ஆண் | பெண் |
|---|---|---|
| ஆடு | தகர்<br>கடா | மறி |
| எருமை | கடா<br>கண்டி | நாகு<br>கிடேரி |
| குதிரை | குண்டு | வடவை<br>பெட்டை |
| குரங்கு | கடுவன்<br>திம்மன் | மந்தி |
| கோழி | சேவல் | பேடு<br>அளகு |
| நண்டு | அலவன் | பெடை |
| நாய் | கடுவன் | பெட்டை |
| பன்றி | கேழல் | பிணா |
| புலி | போத்து | பிணா |
| பூனை | கடுவன் | பெட்டை |
| மயில் | போத்து | அளகு |
| மாடு | ஏறு<br>காளை<br>எருது | நாகு<br>பசு |
| மான் | கலை | பிணை |
| முசு | கலை | பிணை |
| யானை | களிறு | பிடி |
| பறவைகள் | சேவல் | பெடை<br>பேடு |

## 3. இளமைப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| அணில் | ... | குஞ்சு, குட்டி, பறழ், பிள்ளை |
| ஆடு | ... | குட்டி |
| எருமை | ... | கன்று |
| எலி | ... | குஞ்சு, குட்டி |
| கமுகு | ... | கன்று, பிள்ளை |
| கரடி | ... | குட்டி, குடாவடி |
| காக்கை | ... | குஞ்சு, பிள்ளை |
| கிளி | ... | குஞ்சு, பிள்ளை |

| | | |
|---|---|---|
| கீரி | ... | குட்டி, பிள்ளை |
| குதிரை | .... | குட்டி, |
| குரங்கு | ... | குட்டி, பறழ் |
| கோழி | ... | குஞ்சு |
| தவளை | ... | குஞ்சு, பேத்தை |
| தென்னை | ... | கன்று, பிள்ளை |
| நாய் | ... | குட்டி, குருளை |
| நெல் | ... | நாற்று |
| பயிர்கள் | ... | நாற்று |
| பலா | ... | கன்று |
| பனை | ... | வடலி |
| பாம்பு | ... | குட்டி |
| புலி | ... | குட்டி, குருளை |
| பூனை | ... | குட்டி, பறழ் |
| மா | ... | கன்று |
| மான் | ... | கன்று, குட்டி |
| மீன் | ... | குஞ்சு |
| யானை | ... | களபம், கன்று, போதகம் |
| வாழை | ... | குட்டி |
| வேம்பு | ... | கன்று |

## 4. இலைப் பெயர்கள்

| முதற்பெயர் | | சினைப்பெயர் |
|---|---|---|
| தென்னை, பனை | ... | ஓலை |
| நெல், புல் | ... | தாள் |
| வாழை, மா | ... | இலை |

## 5. பிஞ்சுப் பெயர்கள்

| முதற் பெயர் | | சினைப் பெயர் |
|---|---|---|
| தென்னை, பனை | ... | குரும்பை |
| மா | ... | வடு |
| பலா | ... | மூசு |
| வாழை | ... | கச்சல் |

## 6. வித்துப் பெயர்கள்

| முதற் பெயர் | | சினைப் பெயர் |
|---|---|---|
| மிளகாய், கத்தரி | ... | விதை |
| நெல், சோளம் | ... | மணி |
| மா, பலா | ... | கொட்டை |
| ஆமணக்கு, வேம்பு | ... | முத்து |

## 7. கூட்டத்தைக் குறிக்கும் பெயர்கள்

| | | |
|---|---|---|
| ஆ | ... | நிரை |
| ஆடு | ... | மந்தை |
| ஒளி | ... | கற்றை |
| கல் | ... | குவியல், கும்பி |
| கள்ளர் | ... | கூட்டம் |
| காலாள் | ... | படை |
| சனம் | ... | கும்பல், கூட்டம் |
| சுருட்டு | ... | கட்டு |
| சேனை | ... | திரள் |
| தானியம் | ... | கதிர் |
| திறப்பு | ... | கோவை |
| தென்னை | ... | தோப்பு |
| நாற்று | ... | பிடி, முடி |
| நூல் | ... | பந்து |
| நெல் | ... | குவியல் |
| பல் | ... | வரிசை |
| பழம் | ... | குலை |
| புகையிலை | ... | முடிச்சு, சிப்பம் |
| புல் | ... | கற்றை |
| பூ | ... | கொத்து |
| பேய் | ... | கணம் |
| மணி | ... | மாலை |
| மரம் | ... | சோலை, கா |
| மலர் | ... | மாலை, செண்டு |
| மலை | ... | தொடர் |
| மா | ... | சோலை |
| யானை | ... | பந்தி |

## 8. பிற மரபுச் சொற்கள்

| | | |
|---|---|---|
| ஆடு மேய்ப்பவன் } மாடு மேய்ப்பவன் } | ... | இடையன் |
| தேர் செலுத்துபவன் | ... | பாகன், வலவன் |
| யானை செலுத்துபவன் | ... | பாகன் |
| குதிரை செலுத்துபவன் | ... | தோட்டி, பாகன் |
| மாடு, எருமை என்பவற்றின் மலம் | ... | சாணம் |
| ஆட்டு மலம் | ... | பிழுக்கை |
| கழுதை மலம் | ... | விட்டை |
| காகம் குருவி என்பவற்றின் மலம் | ... | எச்சம் |

## பயிற்சி

**A.** பின் வரும் சொற்களுக்கு எதிர்ப்பால் தருக :—

1. எயினன், கனவான், கொல்லன், சீனன், நடிகன், பண்டிதன், பிரான், புதல்வன், பெருமான், வண்ணான்.
2. அண்ணன், ஆடவன், உபாத்தியாயன், ஊரான், எசமான், ஒருவன், கன்னன், சிறுக்கன், வலைஞன், வேளாளன்.
3. ஊராள், எயிற்றி, சின்னம்மை, செல்வி, தமிழிச்சி, நிபுணை, பல்லி, புத்திரி, மித்திரை, மூதாட்டி.
4. அக்கா, பெண்டு, கிழத்தி, தனையை, நாய்ச்சி, பத்தினி, பள்ளி, பேர்த்தி, மூதாட்டி, வேளாட்டி.
5. அலவன், கடா, கலை, காளை, சேங்கன்று, சேவல், பிடி,

**B.** பின்வரும் சொற்களுக்கு எதிர்ப் பொருட் சொற்கள் தருக :—

1. அகழ்தல், அண்மை, ஆதி, இசை, இரவு, உறக்கம், ஏற்றுமதி, ஒற்றை, கோரம், தமர்.
2. கனவு, கேடு, சோடு தொகை, பகை, புறம், வரவு, விண், வெப்பம், வேருக.
3. வன்பு, நிலைப்பு, ஏற்றல், அரிது, துணிவு, இல்லை, எதிர்வு, மலிவு, ஆக்கம், பாமரர்.

**C.** பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் அதனதன் பொருள்கொண்ட சொற்கள் பல (பரியாய நாமங்கள்) தருக :—

1. ஆபரணம், இன்பம், ஊமை, கடல், குடித்தல், சினம், தாமரை, நீதி, பிறப்பு, பொய்.

2. அடி, ஒளி, தடாகம், பாட்டு, புலி, மனிதர், வாசனை, வானம், வேதம், மாலை.

D. பின்வரும் சொற்கள் எவ்வெப் பொருள்களைக் குறிப்பன வென எழுதுக :—

1. அணி, அயில், இடி, உரை, ஏறு, கட்டு, தொடை, பாரி, மதி, வாளி.

2. அரி, அளி, இறை, கடை, கோட்டம், நகை, பதி, பூசை, மலை, மூலம்,

E. பின்வரும் சொற்களில், பிழைகள் உளவேல், திருத்தி யெழுதுக :—

1. ஆக்கள், இப்ப, உயற்சி, ஒண்டியாய், ஒருவள், கிணத்தடி, சிலவு, தண்ணி, நேத்து, பட்டிணி.

2. இடதுகை, எலிமிச்சம் பழம், கருவப்பிலை, கோர்வை, சுற்றவாளி, தேள்வை, நாநூறு, பிலாமரம், புட்டு, வெத்திலை.

3. பரியாரி, போயிலை, யாபாரி, வாய்வு, வீடு மேய்தல், வைக்கல், காச்சல், குடும்பி, கோடாலி.

F. பின்வருஞ் சொல்லிணைகளை, வேறுபாடு தெளிவாகும்படி, வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—

அவசரம், அவசியம்; எத்தனை, எவ்வளவு ; குமரன், குமாரன் ; நீங்குதல், நீந்துதல்; துறத்தல், திறத்தல்.

G. பின்வரும் இந்துஸ்தானிச் சொற்களின் பொருள் தெளிவாக விளங்கும்படி அவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—

அ. 1. அசல், ஆஜர், உஷார், கச்சேரி, குமாஸ்தா, சபாஷ், சிப்பாய், மசாலை, மிட்டாய், ஜாப்தா,

2. அந்தஸ்து, கசாப்புக் கடை, கருர்விலை, சிபார்சு, தஸ்தவேஸ், பாக்கி, முலாம், ஜட்கா, ஜேப், ஷரத்து.

ஆ. இவ்வினாவின் "அ" பிரிவிலுள்ள இந்துஸ்தானிச் சொற்களுக்கேற்ற தனித் தமிழ்ச் சொற்கள் தருக.

H. பின்வரும் போர்த்துக்கேயச் சொற்களின் பொருள் தெளிவாக விளங்கும்படி அவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—

அ. 1. அட்டாளை, அலுமாரி, ஆயா, ஏலம், கப்பித்தான், கரத்தை, கொந்திருத்து, சன்னல், தவறணை, பிசுங்கான்.

2. அப்புக்காத்து, உலாந்தேசு, கதிரை, காம்பறை, காவி, துருப்பு, பட்டாளம், போரணை, விசுப்பு, லாக்கிரி.

ஆ. இவ்வினவின் 'அ" பிரிவிலுள்ள போர்த்துக்கேயச் சொற்களுக்கேற்ற தனித் தமிழ்ச் சொற்கள் தருக.

I. பின் வரும் உயிரினங்கள் உண்டாக்கும் தொனிகள் இவையிவையெனக் கூறுக:

ஆந்தை, கிளி, சேவல், நரி, புலி, மாடு, வண்டு, பன்றி, புரு, யானை

J. பின்வரும் உயிரினங்களின் "ஆண்" வகையின எங்ஙனமெங்ஙனம் குறிக்கப்படுகின்றனவெனக் கூறுக:

ஆடு, குதிரை. கோழி, நண்டு, நாய், பன்றி, புலி, பூனை, மயில், முசு.

K. பின்வரும் உயிரினங்களின் "பெண்" வகையின எங்ஙனமெங்ஙனம் குறிக்கப்படுகின்றனவெனக் கூறுக:

எருமை, குரங்கு, நண்டு, நாய், புலி, மாடு, மான், காக்கை, புரு, யானை.

L. பின்வருவனவற்றின் இளமையைக் குறித்து வரும் பெயர்கள் இவையிவை யென்று எழுதுக:

எருமை, காக்கை, குதிரை, கோழி, தென்னை, பலா, புலி, யானை, கீரி, நெல்.

M. பின்வருவனவற்றின் கூட்டத்தைக் குறிக்கும் பெயர்கள் இவையிவையென்று எழுதுக:

ஒளி, சனம், தென்னை, நெல், பழம், புல், பேய், மலர், மலை, யானை

# 3. சொற்றொடர்

## மரபுச் சொற்றொடர்கள்

பண்டு தொட்டுத் தொடர்ந்து வரும் பழக்க வழக்கங்களையும் சொற்களின் வழக்காற்றையும் "மரபு" என்பதுண்டு. தந்தை மகன் வழிமுறையாகவோ ஆசிரியர் மாணவர் வழிமுறையாகவோதான் வழக்கங்கள்—மரபுகள்—பேணப் பட்டு வருகின்றன. அழகும், ஓசை நயமும், பொருட் செறிவுமுள்ள சொற்கள் சில ஒருங்கே இணைக்கப்பட்டனவாய்த் தலைமுறை தலைமுறையாகக் குறித்த ஒவ்வோர் கருத்தில் வழங்கி வருகின்றன. அவற்றுட் சில, அச் சொற்கள் தனித் தனியாகவோ சேர்ந்தோ குறிக்கும் பொருளினின்று வேறுபாடடைந்து, சிறப்பான கருத்துக்களைக் கொண்டனவாயுள்ளன. அச் சொற்களே, இணைந்து வரும்போது, "மரபுச் சொற்றொடர்கள்" எனப்படுகின்றன. அச் சொற்றொடர்கள், (அவ்வமைப்பிலே) தனி வீறு கொண்டு பொருட்செறிவும் சிறப்புமுடையனவாய் விளங்குவதால், தமிழ் அறிஞர்களால் வாக்கியங்களில் அமைத்தெழுதப்படுகின்றன. வழக்காற்றினாலே தனிச்சிறப்பு வாய்ந்த அந்தச் சொற்றொடரமைப்பை மாற்றினாற் பொருளீட்டமும் குன்றிவிடுவதாகும். உதாரணமாக, "சந்திக்கு இழுத்தல்" என்ற சொற்றொடர் (சொற்பொருளாக)" தெருக்கள் ஒன்றுகூடும் இடத்துக்கு ஈர்த்துச் செல்லல்" என்றே பொருள்படுமாயினும், "ஒருவன் குற்றங் குறைகளை வெளிப்படுத்தி நிந்தைக்கிடமாக்குதல்" என்ற கருத்திலேயே (மரபால்) வழங்கப்படுகின்றது.

அகட விகடம் : தந்திரம் ; stratagem ; chicanery ; pettifogging

அங்காடி பாரித்தல் : மனோராச்சியம் பண்ணுதல் ; building castles in the air

அங்கிடுதத்தி : நிலை கெட்டவன் ; one of vagrant habits

அசடு வழிதல் : அறியாமை பெருகுதல் ; ignorance overflowing

அசை போடுதல் : அசையிடுதல் ; அசை வெட்டல் ; chewing the cud ; ruminating

அஞ்சனம் பார்த்தல் : மறைந்த பொருள்களை அஞ்சன மிட்டறிதல் ; discovering hidden things with the help of magic black pigment

அச்சாணி : இன்றியமையாத தொன்று ; something indispensable ; a person indispensable (as the linch-pin)

அடக்கம் பண்ணல் : உள்ளடக்கி வைத்தல் ; பிணத்தை அடக்கம் செய்தல் ; burying, entombing

அடம் பண்ணல்: பொல்லாங்கு செய்தல்; doing evil; injuring

அடி கோலல்: அத்திவாரமிடுதல், முயற்சி செய்தல்; laying foundation for any building; making preparations

அடி பணிதல்: தண்டனிடுதல்; நமஸ்காரம் செய்தல்; falling at one's feet, submitting

அடி பிடித்தல்: காலடையாளம் பார்த்தல்; மூலத்தைப் பின்பற்றல்; பின்றொடர்தல்; discovering one's footmarks; getting a clue to a thing; pursuing

அடிப் பிடித்தல்: சுண்டு பற்றல்; அடியிலொட்டல்; sticking to the bottom of a vessel; being scorched

அடி பெயரல்: போதல்; starting; taking a step; move from the spot where one stands

அடிப்படல்: கீழ்ப்படுதல்; being in subjection

அடிப்படுத்தல்: கீழ்ப்படுத்தல்: bringing into subjection

அடிப்பதறல்: கால் நடுங்குதல்; losing a situation; being perplexed in consequence of failure

அடியிடல்: தொடங்குதல்; commencing; an undertaking; making a beginning

அடி வருடல்: கால்களைத் தடவுதல்; stroking or shampooing the legs of another

அடுக்குக் குலைத்தல்: வரிசை கெடுத்தல்; putting in disorder

அடுக்குப் பண்ணல்: ஆயத்தம் செய்தல்; putting in order; arranging; preparing

அடுக்குப் பார்த்தல்: ஒத்திக்கை பார்த்தல்: rehearsing as stage plays

அடை காத்தல்: கோழி அவயங்காத்தல்: sitting on eggs, incubation

அடைகொடுத்தல்: நிலவிளைவில் அரசனுக்குரிய பங்கைக் கொடுத்தல்; rendering the king's share of the produce

அடை கொள்ளுதல்: அடைக்கலம் வைத்த பொருளைக் காக்குமாறு ஏற்றுக் கொள்ளல்; accepting a deposit for safe keeping

அணி படுத்தல்: ஒழுங்கு படுத்துதல்: arranging; setting in order; regulating

அணி வகுத்தல்—படை வகுத்தல்: arranging troops

அணைதல்—கார்தல்; சேருதல்: approaching; joining closely together

அணை கோலல்—அணை போடல்; அணை கட்டல்: casting up a dike

அணைத்தல்: தழுவிக்கொள்ளல்; embracing; fondling

அண்டப் புரட்டன்: பெரிய புரட்டுக்காரன்; a consummate rogue

அண்டப் புளுகன் : பெரும் புளுகன்; a veritable liar: huge liar
அண்டை கொடுத்தல் : முட்டுக் கொடுத்தல்; placing a prop
அண்டை போடல் : ஒட்டுப் போடுதல் : patching; clouting
அதட்டிப் பார்த்தல் : பயமுறுத்திப் பார்த்தல்: intimidating; threatening; sounding one's mind by menacing
அதர் கொளல் : வழிப்பறித்தல்; highway robbery
அதர் பறித்தல் : அதர் வெட்டல்; digging a ditch
அத்து மீறல் : எல்லை தாண்டல்; எல்லை கடத்தல்; transgressing the boundary or limit
அந்தரத்திலே நிற்றல் : உதவியின்றித் தனியே நிற்றல்; standing unsupported; being forsaken by all
அந்தரங்கம் : இரகசியம்; privacy; secrecy ; what is said in confidence
அந்திய கருமம் : மரணச் சடங்கு; funeral ceremonies
அமசடக்கம் பண்ணல் : மறைப்பாகச் செய்தல்; keeping under cover; doing a thing without noise, quietly
அமளி பண்ணல் : குழப்பஞ் செய்தல், கலகஞ் செய்தல்; causing disturbance ; scuffling
அம்பலமாதல் : வெளிவருதல்; becoming public
அரங்கேற்றல் : சபையில் அங்கிகாரத்துக்காக ஏறச் செய்தல்; exhibiting a book or bringing it before an assembly for approval and acceptance
அரவணைத்தல் : கட்டித் தழுவிக்கொள்ளல்; embracing ; fondling receiving with compassion
அலைக்கழித்தல் : உலைத்தல் ; கொடுத்தல் : vexing ; disappointing ; ruining
அளவளாவுதல் : கலந்து உறவாடிப் பேசுதல் : holding intimate intercourse ; conversing freely ; being in close intimacy
அள்ளிக் கொட்டுதல் : மிகச் சம்பாதித்தல் : hoarding in plenty
அள்ளியிறைத்தல் : அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்தல் ; spending in excess
அள்ளு கொள்ளை : மிக மலிவு ; பெருங்கொள்ளை : abundance ; profusion ; great waste ; taking more than what is right
அறி துயில் : யோக நித்திரை : a kind of sleep or meditation, in which a person understands all that passes about him
அறை கூவுதல் : போருக்கழைத்தல் : challenging ; summoning to combat
அன்னியோன்னியம் : ஐக்கியம் : mutuality ; friendship ; intimacy
ஆகாசத் தாமரை : அந்தரத் தாமரை; பொய்: a water plant; an aerial or sky lotus (fig) a fanciful or ideal thing ; impossibility

ஆசாரக் கள்ளன் : முகத்துதி செய்பவன் : a flatterer ; fawning rogue ; flattering impostor

ஆசைப்பேச்சு : தித்திக்கப் பேசும் பேச்சு. வசமாக்கும் பேச்சு : flattery ; persuasive speech

ஆணித்தரம் : முதற்றரம் ; உறுதி : first quality ; firmness

ஆபத்து சம்பத்து : வாழ்வு தாழ்வு : loss and gain ; adversity and prosperity, sometimes death and matrimony

ஆமானவன் : சிறந்தவன் : a worthy, competent, respectable person

ஆரம்ப சூரன் : தொடக்கத்தில் வீரனுயிருப்போன் ; வீம்பு பேசுவோன் : a forward person ; one more ready to undertake than patient to execute; a boaster ; blusterer

ஆலை மாலை : அலைச்சல் : trouble ; vexation

ஆழம் பார்த்தல் : ஒருவனது அறிவு முதலியவற்றை (நிலைமையை) ஆராய்தல் : examining one's depth of knowledge etc.

ஆறப் போடுதல் : பின்போடுதல் : காலந் தாழ்த்துதல் : postponing ; delaying

ஆற்றுப் படுத்தல் : வழிப்படுத்தல் : leading, directing or conducting a person into the right way

இங்கிதக்காரன் : இன்சொற் சொல்வோன் : one who accommodates himself to another's views ; a flatterer

இசகு பிசகு : குழப்பம் : disturbance, irregularity

இசைகேடு : இடைந்துபோன நிலைமை : reduced state ; emaciated state

இசைவுகேடு : காரியத் தவறு : disappointment : abortiveness

இடக்கு முடக்கு : இடைஞ்சல் : trouble ; difficulty

இடறு கட்டை : தடை : a stumbling block ; hindrance ; an obstruction

இடுக்கு முடக்கு : சங்கடம் ; straits ; difficult circumstances ; embarrassment ; difficulty

இடைக்கிடை : நடுநடுவே ; வேளைக்கு வேளை ; here and there ; interspersed ; from time to time ; at interval

இடைவிடாமல் : தொடர்ச்சியாய் ; constantly ; incessantly ; without intermission

இடைவெட்டுப் பேச்சு : கேலியுரை ; பழிப்புரை ; speaking in derision ; ridiculing

இரண்டகவாதி : துரோகி ; a treacherous person ; an insincere friend

இரண்டு தோணியில் கால் வைத்தல் : இரண்டு காரியங்களில் ஒரே நேரத்தில் ஈடுபடல் ; engaging oneself in two affairs at the same time

இரண்டுக்குப் போதல் : மலங்கழித்தல்; going to stool; defecating

இருதலைக் கொள்ளி : எப்பக்கத்துக்கும் துன்பஞ் செய்வது; that which causes trouble in every direction

இரை மீட்டல் : அசை வெட்டல்; chewing the cud-as cows etc.

இலவு காத்த கிளி : ஒன்றைக் காத்திருந்து ஏமாறியவன்; (like a parrot, awaiting the ripening of the pods of the cotton tree) one of vain expectation

இலை மறை காய் : மறைபொருள்; hidden meaning contained in an expression, just as the fruit of a tree is hidden among the rich foliage

இல்லிக் குடம் : ஓட்டைக்குடம்; pot with a hole that would contain or retain anything (அது போன்றவன்)

இழுக்கடித்தல் : பணஞ் செலுத்துதலைத் தாழ்த்துதல்: putting off the time of payment; delaying payment

இளநாக்கடித்தல் : சம்மதமில்லாததுபோற் காட்டுதல்; feigning reluctance

இளித்த வாயன் : முழுமூடன்; one who grins like a monkey; a fool

இளித்தவாய்ப் பட்டம் : இளித்தவாயன் (ஒன்றுந் தெரியாதவன்) என்னும் பட்டப் பெயர்; notriety for grinning, the state or character of one baffled or defeated in his projects

இருட்டுப் பிருட்டு : சச்சரவு; quarrel; squabble; strife

இனிப்புக் காட்டல் : தித்திப்புக் காட்டல்; pleasing one; alluring; gratifying

இனிப்புத் தட்டல் : ஆசை உண்டாதல்; having a relish or desire for a thing; smacking

ஈவிரக்கம் : கருணை; liberality and compassion

உச்சி குளிர்தல் : மகிழ்ச்சி: joy; pleasure; delight; high spirits

உடும்பு நாக்கன் : வஞ்சகம் செய்வோன்; a double-tongued or deceitful person.

உருத்திராட்சப் பூனை : அடியார் வேடம் பூண்ட வஞ்சகன்; one who assumes the garb of a devotee with an unworthy object in view; profound dissembler

உலக்கை சாத்துதல் : அடிக்கடி சொல்லிச் சொல்லி அறிவுறுத்தல்; dinning a thing several times into a person's ears so as to make him comprehend it.

உலை வைத்தல் : திங்கு (அழிவு) புரிய முயலுதல்; meditating one's ruin

உள் விழுதல் : காரியார்த்தமாய்ச் சினேகித்தல்; assuming the appearance of friendship for a sinister object; pretending kindness

68376

**உள் விழுத்துதல்:** நட்பாக்கி வசப்படுத்துதல்; joining a person on professions of friendship in order to deceive and entrap him

**உள்ளங்கை நெல்லிக்கனி:** தெளிவு: anything that is as clear and certain as the nelli fruit on the palm of one's hand

**ஊடாடல்:** நன்கு பழகுதல்; going about as a domestic in a house, being very familiar with

**ஊமணே:** பேசத்திறமில்லாதவன்; a person habitually silent; taciturn; unable to speak freely

**ஊமணேயன்:** அவலட்சணமான முகத்தையுடையவன்; a stupid, sullen, pouting person; one with an ugly or forbidding countenance

**ஊமைக் கோட்டான்:** பேசத்தெரியாமல் விழிப்பவன்; one who merely stares or blinks and gives no answer, like an owl

**எடுத்துக் கட்டுதல்:** இல்லாத காரியத்தைத் தொடுத்தல்: fabricating; inventing—as of a word or story

**எடுத்தெறிதல்:** அலட்சியம் பண்ணுதல்; disregarding one's advice or commands

**எண்ணெய் தேய்த்தல்:** எண்ணெய் தேய்த்து முழுகுதல்; smearing one's head as well as body and limbs with plenty of oil immediately before a bath

**ஏட்டுச் சுரைக்காய்:** அனுபவத்தோடு சேராத கல்வியறிவு; அனுபவமின்றி நூலறிவு மாத்திர முள்ளவன்; book-learning that is divorced from practical wisdom; a person with such book-learning

**ஏட்டுப் படிப்பு:** உலக அனுபவமில்லாத கல்வி; without practical knowledge

**ஏப்பை சாப்பை:** உபயோகமற்றது; that which is useless

**ஏமிலாந்தி:** திகைத்து நிற்பவன்; மனமயங்கி நிற்பவன்; one who is despondent, confounded; absent-minded, forgetful person

**ஏறப் பறத்தல்:** உயரப் பறத்தல்; ஏலாதவற்றைச் செய்ய முயலுதல்; flying on high; attempting the impossible

**ஏறிட்டுப் பார்த்தல்:** கவனித்தல்; taking notice of, care of

**ஒக்கப் பாடுதல்;** பிறன் கூற்றுக்கு ஒத்துக் கூறுதல்; assenting to everything said by another

**ஓட்டை வாயன்:** இரகசியங்களை மறைக்கமாட்டாது வெளியிடுபவன்; one who cannot keep secrets; a babbler

**ஓடியாடிப் பார்த்தல்;** பெருமுயற்சி யெடுத்தல்: exerting oneself to the utmost

**ஓடு தாவடி :** கலக்கம் : bustle and confusion in preparing—as for journey etc.

**கச்சை கட்டுதல் :** ஒன்றைச் செய்ய மூண்டு நிற்றல்; girding up one's loins ; solemnly determining to do a thing

**கசக்கிப் பிழிதல் :** நெருக்கி வருத்துதல்; teasing and troubling a person ; harassing ; oppressing

**கசுகுசெனல் :** காதுக்குள் மெதுவாய்ப் பேசுங்குறிப்பு; whispering into the ear.

**கஞ்சி வார்த்தல் :** காப்பாற்றுதல்: maintaining ; supporting

**கட்குத்திக் கள்வன் :** விழித்திருக்கும்போதே ஏமாற்றுபவன்; very skilful deceiver ; one who is able to hoodwink, or throw dust into the eyes of even a wide-awake person

**கட்டாக் காலி :** பட்டிமாடு; ox or cow suffered to roam at large or that is not put into the stall by night

**கட்டிக் கொடுத்தல் :** பெண்ணுக்குக் கலியாணம் செய்வித்தல்: giving a girl in marriage

**கட்டுப் பெட்டி :** பழமையே பேணிப் புதுமையைக் கைக்கொள்ளாதவன்: a person of old-fashioned ways

**கடை கட்டுதல் :** காரியத்தை நிறுத்திவிடுதல் : terminating of discontinuing a work, used depreciatingly

**கடை போடுதல் :** வம்பளத்தல் : gathering together for loafing or idle gossip

**கடை விரித்தல் :** பலர் முன்பாகத் தன்னாற்றலைச் சொல்லுதல் : bragging or swaggering about one's own abilities

**கண்கெடச் செய்தல் :** அறிந்து தீமை செய்தல் : doing that which one knows to be wrong and harmful

**கண் கொள்ளாக் காட்சி :** அதிசயமான தோற்றம்: a rare and wonderful scene

**கண் காத்துதல் :** அன்போடு நோக்குதல் : looking upon with favour

**கண் காய்தல் :** அறிவு தளர்த்தல்; அன்பு குறைதல் : losing one's wits ; growing cold in love

**கண்டு கழித்தல் :** வெறுப்புண்டாகும் வரைக்கும் அனுபவித்துக் கழித்தல் : enjoying to satiety

**கண்ணழித்தல் :** பதம் பதமாகப் பிரித்துப் பொருளுரைத்தல் : dissecting the words of a poem and interpretting the same, word by word

**கண்ணாயிருத்தல் :** விழிப்பாயிருத்தல் : being watchful, vigilant, closely attentive

P31, J 68376
N57.1

கண்ணாரக் காணுதல்: கண்கூடாகப் பார்த்தல்; ஆசைதீர நோக்குதல்: seeing with one's own eyes; having a full view to one's complete satisfaction

கண்ணி வைத்தல்: புள் முதலியவற்றை அகப்படுத்துவதற்காகச் சுருக்குக் கயிறு தொடுத்து வைத்தல்; setting a snare or trap for catching game, etc

கண்ணுக்குக் கண்ணாதல்: மிகவும் பாராட்டப்படுதல்: being very dear or precious (as the eye)

கண்ணைக் காட்டுதல்: கண்சாடை காட்டுதல்: hinting by the glance of the eye

கண்ணோடுதல்: தாட்சணியப்படுதல்; yielding to feelings of pity

கண் திறத்தல்: அறிவு உண்டாக்குதல்; illuminating the mind; imparting instruction (as opening the eyes of a disciple's mind)

கண் படுதல்: திருஷ்டி படுதல்; being affected by the evil eye

கண் மூடுதல்: சாதல்; dying

கத்தி தீட்டுதல்: கெடுதி செய்வதற்குச் சமயம் பார்த்தல்; biding one's time seeking opportunities to injure

கதை கட்டுதல்: பொய்ச் செய்தி கிளப்புதல்; concocting a slander

கதை பிடுங்குதல்: பிறர் வாயினின்று இரகசியம் வெளிவருமாறு செய்தல்; pumping out information by cajolery; eliciting a secret by coaxing words; humouring to fish out a matter

கதை விடுதல்: இரகசியம் வெளியே வருமாறு தந்திரமாய் வார்த்தை சொல்லுதல்; telling something pleasing to one in order to put him in good humour and fish out secrets from him

கப்பங் கட்டுதல்: திறை கொடுத்தல்; paying tribute (as a petty king to his suzerain)

கப்பலேற்றுதல்: தண்டனையாகத் தூரதேசத்துக்கு அனுப்புதல்; punishing with transportaion (as to the Andamans)

கபட நாடகம்: போலி நடிப்பு; deceitful dealing

கம்பி நீட்டுதல்: ஓடிவிடுதல்; running away, going off slily; stealing away; taking to one's heels

கயிறு திரித்தல்: கற்பித்துச் சொல்லுதல்; inventing a story

கரடி விடுதல்: பொய்யைக் கட்டிக் கூறுதல்; disseminating a lie

கரடி வியாபாரம்: இச்சகம் பேசுதல்; coaxing by flattery; toadying; fawning

கரணம் போடுதல்: தன்னால் கூடியதெல்லாம் செய்தல்; doing one's utmost; using all possible means; leaving no stone unturned to accomplish an object.

கரி பூசுதல்: அவமதித்தல்: putting a person to shame delibrately; disgracing one

கருக் கூட்டுதல்: உபாயஞ் செய்தல்; scheming, contriving; planning

கரை காணுதல்: எல்லையறிதல்; mastering thoroughly an art or science

கரைத்துக் குடித்தல்: முற்றக் கற்றறிதல்; learning thoroughly the contexts of a book

கரையேற்றுதல்: வறுமை முதலியவற்றினின்றும் ஈடேற்றுதல்; raising from indigence; reinstating in affluent circumstances

கரையேறுதல்: வாழ்க்கைப்படுதல்; வறுமை முதலியவற்றினின்றும் ஈடேறுதல்; getting married; being relieved from distress

கல்லில் நாருரித்தல்: இல்லாத பொருளைப் பெறுவதற்கு முயலுதல்: seeking for the unattainable; striving for the impossible (as stripping fibre from stone)

கலகலத்தல்: கட்டுக் குலைதல்; becoming shaky; getting loose in the joints (as an old cart)

கலங் கடித்தல்: கலங்கச் செய்தல்; discomfitting, putting to rout (as the forces of an enemy)

கழுத்துக் கொடுத்தல்: தன் வருத்தத்தைப் பாராமல் பிறர் காரியத்தைத் தான் ஏற்று நிற்றல்; risking one's life for the sake of others

கள்ளம் பண்ணுதல்: வேலை செய்யாமல் திருட்டுத்தனஞ் செய்தல்; playing the truant; வேலை செய்யச் சோம்புதல், idling in work; being dull or slow as a beast in the absence of a whip

கள்ளேடு விடுதல்: அரைகுறையாக வேலை செய்தல்; performing duties perfunctorily

கன்னமிடுதல்: கன்னக்கோல் கொண்டு சுவரகழ்தல்; கொள்ளை கொள்ளுதல்; breaking into a house through the wall; taking in one sweep (as in plunder)

கன்னுபின்னுவெனல்: பொருளின்றிக் குழறுதற் குறிப்பு; expression signifying vain babble; meaningless talk; talking nonsense

கன்னிப்போர்: வீரனது முதற்போர்; maiden battle

கன்னை பிரித்தல்: விளையாட்டில் இரு கட்சி வகுத்தல்: dividing a company into parties for a game

கன்னைமாறுதல்: விளையாட்டில் பக்கம் மாறி ஆடுதல்: changing sides for a new game

கனப்படுத்துதல்; பெருமைப்படுத்துதல்: honouring; respecting; esteeming

காக்காய் பிடித்தல்: இச்சகமாக நடந்து வசப்படுத்தல்: cajoling; coaxing by word and deed

காட்டிக்கொடுத்தல்: தன் பக்கத்தானொருவனை, எதிரி கைப்பற்றக்கூடிய நிலைமையை உண்டாக்குதல்: playing false; betraying (as a person to his enemy)

காடு காட்டுதல்: ஏமாற்றுதல் deceiving, disappointing

காடு கெடுத்தல்: காடழித்தல்: clearing the forest

காதுகுத்துதல்: வஞ்சித்தல்: beguiling; deceiving; misleading

காது கொடுத்தல்: கவனித்துக் கேட்டல்: listening; giving attention to

காப்புக் கட்டுதல்: ஊக்கத்துடன் காரியந் தொடங்குதல்: engaging in a pursuit with earnestness

கால் கழுவுதல்: பாத்தியமளித்து உபசரித்தல்: washing the feet of a guest

கால் பிடித்தல்: காலைப்பற்றிக் கெஞ்சுதல்: falling at one's feet for a favour

காலில் விழுதல்: புகலடைதல்: taking refuge

காற்றாய்ப் பறத்தல்: விரைந்தோடுதல்; சுறுசுறுப்பாய் தொழில் செய்தல்: roaming or flying about (as the wind being overactive in gaining one's ends; being industrious

கிட்டி கட்டுதல்: நெருக்கி வருத்துதல்: pressing hand (as for debt)

கிணற்றுத் தவளை: வெளியுலக அனுபவமற்றவன்: one who has no experience of the outside world (a frog in the well)

கிண்டிப் பார்த்தல்: சோதித்துப் பார்த்தல்: investigating thoroughly

கிண்டிவிடுதல்
கிள்ளிவிடுதல்
கிளப்பிவிடுதல்
கிளறிவிடுதல்
} தூண்டிவிடுதல்; inciting a person against another; stirring up

கிள்ளித் தெளித்தல்: சிறிது கொடுத்தல்; giving a small quantity (as a pinch)

கிள்ளுக் கீரை: எளிமையானது; anything easily handled (used in reference to a weak man)

கீழறுத்தல்: சதிசெய்தல்; injuring by any underhand treacherous means

குட்டிக்கரணம்: பெருமுயற்சி; making strenuous efforts; using all possible means

குட்டிச்சுவர்: மடையன் பழுது; a worthless fellow; damage, ruin

குட்டுணி: பிறரால் குட்டுண்ணப்படுபவன்; an untractable, shameless person, cuffed about by every one

குட்டுப்பட்டவன்: ஒரு தொழிலில் இடர்ப்பட்டு அனுபவம் பெற்றவன்; one who grows wise by experiencing reverses

குட்டுப்படுதல்: அடிக்கடி இடருறுதல்; undergoing reverses

குடலைப் பிடுங்குதல் : பசியால் வயிறு கிண்டப்படுதல் ; painfully affecting or pinching the bowels (as hunger)

குடி கெடுதல்
குடி சாய்தல் } : குடியின் அழிவு; ruin of a family, an unavoidable ruin

குடிபுகுதல்
குடிபோதல்
குடிவருதல் } கிருகப் பிரவேசஞ் செய்தல்; commence occupying a new house with appropriate ceremonies

குடி மூழ்குதல் : குடும்பநிலை முதலியன யாவும் அழிதல்; ruining utterly as a family completely washed away by flood

குடியிறங்குதல் : நிலைக்குடியாகத் தங்குதல் ; fixing or establishing permanently one's abode; settling (as a family or a tribe)

குடியெழும்புதல் : கலகம் முதலிய நிகழ்ச்சிகளால் குடி நீங்கிப் போய் விடுதல் ; evacuating a house (commonly from disastrous events)

குதிரைக் கொம்பு : இல்லாததொன்று கிடைத்தற்கரியது; something that is non-existent; something that is difficult to obtain or impossible to obtain

குதிரையேறுதல் :
குதிரை விடுதல் : } பிறரைக் கீழ்ப்படுத்தி அடக்கியாளுதல்: riding roughshod, domineer

குப்பை கிளறுதல் : குற்றம் வெளியாகும்படி துருவி விசாரித்தல்; enquiring into for exposing unsavoury details

கும்பகருணன் : பெருந் தூக்கமுள்ளவன்; sound sleeper (usually one who sleeps for long)

கும்பிடு கள்ளன் : வணக்கங் காட்டும் வஞ்சகன்; cringing dissembler; servile hypocrite

குமரிப் போர் : வீரனின் முதற்போர்; maiden battle, first military engagemegt of a prince

குரங்குச் சேட்டை : குறும்புச் செய்கை; (mean) monkeyish pranks, apish mischief

குரங்குப் பிடி , விடாப்பிடி; பிடிவாதம்; firm grip; obstinacy

குரங்குப் புத்தி : நிலையற்ற புத்தி; noving tendency; unsteadiness

குல விளக்கு : குலத்தை விளங்கச் செய்பவர்; shining light of a family

குழியில் விழுதல் ; தீய வழியிலிறங்கல்; falling into evil ways

குழை யடித்தல் : வசப்படுத்தத் தந்திரஞ் செய்தல்; wheedling; using artful means to secure a selfish interest

குறுக்கே மடக்கல் : இடையிலே பேசி வாயை அடக்குதல்; interrupting rudely and refuting ; interrupting and silencing one by a curt reply

குறுக்கே முறித்தல் : காரியத்தை இடையே விட்டொழித்தல்; breaking off in the middle of a business ; leaving a work unfinished

குறை வயிறு : குறையாக உண்ட வயிறு; stomach inadequately fed

கூட்டற்றவன் : ஒன்றுக்கும் உதவாதவன் : useless person

கூலிக்கு மாரடித்தல் : மனமில்லாமல் ஏதாவது தொழிலைச் செய்தல்: working insincerely

கேள்விச் செவியன் : கேள்விப்பட்டதை யெல்லாம் நம்புவோன் : one who readily believes hear - say reports ; credulous person

கைக் குதவுதல் ; சமயத்துக்கு உதவுதல் : சமயத்துக்கு உதவுதல் : being opportunely useful

கைக்கொள்ளுதல் : பேணிக் கொள்ளுதல் : observing ; maintaining

கை கடத்தல் : வசப்படாமல் மீறுதல் : passing beyond one's ability

கை கழுவுதல் : விட்டுவிடுதல் : abandoning ; control washing one's hands off

கை குவித்தல் : கையைக் குவித்துக் கும்பிடுதல் . worshipping ; adoring (as by raising joined hands)

கைகூசுதல் : பயத்தால் பின்னடைதல் : shrinking; drawing back

கைகூடுதல் ; சித்தியாதல் : prospering ; succeeding

கை கொட்டுதல் ; கைகளைத் தட்டுதல் : clapping the hands (as in ridicule or applause)

கை கொடுத்தல் : உதவி செய்தல்; lending a hand in aid; rendering assistance.

கைசோரல் : கை ஓய்தல்; being tired or exhausted (as the arms in swimming.)

கை தப்புதல் : கையினின்று தவறிப்போதல்; skipping from the hand (as a thing); getting out of control (as a person or animal)

கை தவறுதல் : தொலைந்து போதல்; being lost

கை தளர்தல் : வறுமையுறுதல்; being reduced in circumstances

கை தாங்குதல் : அழிவெய்தாமற் காத்தல்; saving from ruin

கை தூக்குதல் : வறுமையால் வருந்துவோரைக் காத்தல்; lending a helping hand; saving from ruin

கை தேர்தல் : திறமையடைதல்; becoming on adept

கை நீட்டுதல் : அடிக்கக் கையோங்குதல்; lifting one's hand against another

கை நுணுக்கம் : உலோபத்தனம்; close-fistedness

கைப்படுதல் : கைவசமாதல்; falling into one's hands

கைப்பற்றுதல் : அபகரித்தல்; mis-appropriating

கைப்பிடித்தல் : மணஞ்செய்தல்; marrying

கைப்பிடியாய்ப் பிடித்தல்: கையுங் களவுமாய்ப் பிடித்தல்; catching a thief red-handed; detecting a fraud even in the act of perpetration

கைப்பொறுப்பாய்; சிரத்தையாய்; with full responsibility

கைப்பொறுப்பு: நஷ்டம்; loss

கை பதறுதல்: அவசரப்படுதல்; being in a hurry

கை பரிமாறுதல்: அடிபிடி சண்டையிடுதல்; fighting; exchanging blows

கை பறிதல்: கைதவறுதல்; skipping or falling out of the hands

கை பார்த்தல்: வியாபாரச் சரக்குகளைச் சோதித்தல்; பழுது பார்த்தல்; examining goods (as a trader) making repairs

கை பிசைதல்: செய்வதறியாது திகைத்தல்; being in a fix; being in deep affliction

கை பூசுதல்: உண்ட கையைக் கழுவுதல்; washing the hands after meals

கை போடுதல்: காமவிச்சையோடு தொடுதல்; committing indecent assault on a woman

கைம்மறித்தல், கை கவித்து விலக்குதல்; waving the open hand as a sign of disapproval

கைம்மாறு: பிரதியுபகாரம்; return; recompense

கை மாற்று: கைக்கடன்; short loan without bond

கை மாருட்டம்: கைத்தவறு; கை வன்மையாற் செய்யும் ஏமாற்றம்; skip of the hand; juggling with hand

கை மேலே: உடன் கையில்; in quick return; immdiately

கைமோசம்; எதிர்பாராது நேர்ந்த கேடு; unintentional error; accidental loss

கை மோசம்போதல்; பிறர் வஞ்சகத்துக்குட்பட்டுக் கேடு அடைதல்: loss unawares by another's deception

கையடக்கம்: கைக்குள் அடங்கக்கூடிய பொருள்; anything handy or portable,

கையடைத்தல்; பிறர் கையில் ஒப்புவித்தல்: entrusting; depositing

கையமர்த்துதல்: கையாற் சைகை காட்டிச் சபையோர் முதலியவர்களை உட்காரச் செய்தல், motioning a person or assembly to be seated

கையயர்தல்: நிலைமை தாழ்தல்; being reduced in circumstances

கையளித்தல்; பாதுகாக்குமாறு ஒப்புத்தல்; entrusting; depositing (also transferring)

கையாளுதல்: வழக்கத்துக்குக் கொண்டு வருதல்; bringing into vogue or practice; making constant use of

கையிளகுதல்: தாராளமாதல்; being liberal or bountiful

கையிறுக்கம் : சிக்கனம்; உலோபம், thrift; close fistedness; miserliness

கையெடுத்தல் : கும்பிடுதல், saluting, as a mark of respect

கையேந்துதல்; யாசித்தல், begging

கையேற்றல் : காரியத்தை ஏற்று நடத்துதல்; shouldering responsibility

கையைக் கடித்தல் : எதிர்பார்த்ததற்கு மேலாகச் செலவாதல்; நட்டமாதல்; exceeding the allotted amount; entailing loss

கை வற்றுதல் : கையிற்பொருளறுதல்; being empty-handed

கை விடுதல் : விட்டொழிதல்; deserting; abandoning

கை விரித்தல் : தன்னால் இயலாமையைக் குறித்துக் காட்டுதல்; indicating one's inability

கொஞ்சு குதிரை : மென்னடையுள்ள குதிரை; horse whose pace is easy

கொஞ்சு நடை : மெதுவான நடை; easy pace

கொடுக்கறுத்தல் : குறும்புத்தனத்தை அடக்குதல் : breaking down one's mischievous tendency

கொடுக்குக் கட்டல்; ஊக்கமாயிருத்தல் : being earnestly engaged (as in on enterprise)

கொடுக்குப் பிடித்தல் : ஊழியன் போன்று ஒருவனை விடாது பின் தொடர்ந்து திரிதல் : acting as a person's satellite

கொடுத்து வைத்தல்; பூர்வ புண்ணியத்தால் அதிட்டம் பெற்றிருத்தல்; deserving by one's past deeds

கொள்ளி சொருகுதல் : கேடு செய்தல்; causing or bringing about another's ruin

கொள்ளையடித்தல் : சூறையாடுதல் : plundering; looting

கொளுவி விடுதல் : சண்டை மூட்டுதல் setting by the ears

கோட்டை கட்டுதல் : மனோராச்சியம் செய்தல் : building castles in the air

கோடரிக் காம்பு : தன் குலத்தை அழிப்பவன்; one who destroys or undermines one's own family

கோடையடிக்காரன் : ஒருவரிடத்தினின்று பிடுங்கி இன்னொருவருக்கு ஏராளமாய்க் கொடுப்பவன்; one who is liberal at another's expense

கோணங்கிக் கூத்து : ஒழுங்கற்ற நடையுடைகள்; droll and improper conduct or dress

கோத்துக் கொடுத்தல் : இருவருக்குள்ளே பகையுண்டாகும்படி ஒருவர் கூற்றினை மற்றவர்க்கு மாறுபடுத்திக் கூறல்; telling tales and creating enmity between two persons

கோத்து விடுதல் : பகை மூட்டுதல்; creating enmity

கோபங் கொள்ளுதல் : புண் முதலியவை உக்கிரமாதல்; being inflamed or irritated (as a sore or wound)

கோமாளிக் கூத்து : நகைப்பு விளைக்குஞ் செயல்; buffoonery

கோயிற் காளை : அடங்காத் தடியன்; fat and unruly fellow

கோயிற் பெருச்சாளி : கோயிற் சொத்தை அபகரிப்போன்; one who misappropriates the temple funds

சக்கையாய்ப் பிழிதல் : கடுமையாக வேலை வாங்குதல்; exacting hard work from one (as reducing one to a skeleton)

சக்கை வாங்குதல் : மிகக் கடிந்து பேசுதல்; taking to task severely

சட்டி சுரண்டுதல் : இழிதொழில் செய்தல்; doing any menial service (used in contempt)

சட்டியெடுத்தல் : இரத்தல்; begging

சட்டை பண்ணுதல் : இலட்சியஞ் செய்தல்; caring for; regarding

சண்டப் பிரசண்டம் : ஆர்ப்பாட்டம்; boisterousness or turbulance (often applied to persons)

சந்திக் கிழுத்தல் : ஒருவன் குற்றங் குறைகளை வெளிப்படுத்தி நிந்தைக்கிடமாக்குதல்; exposing publicly to ridicule and shame

சந்தியில் நிற்றல் : நிர்க்கதியாயிருத்தல்; being in a forloan condition

சந்து பார்த்தல் : சமயம் பார்த்தல், watching for an opportunity, choosing a fitting time

சந்துபோதல் : தூதுபோதல், proceeding on an embassy or errand

சரக்கவிழ்த்தல் : பொய்யான விஷயங்களைக் கூறுதல், making false statements

சரடுவிடுதல் : ஒரு விஷயத்தைப் பொய்யாகக் கற்பித்து வெளியிடுதல், inventing a story and circulating

சரந்தொடுத்தல் : மிகுதியாக வைதல், showering abuses

சரமாரியாய் : இடைவிடாமல், incessantly (as rain), eloquently (as speech)

சரிக்கட்டுதல் : இணக்குதல், reconciling

சருகரித்தல் : பயனை அனுபவிக்க முடியாமல் உழைத்தல், toiling hard without enjoying the resultant advantage

சாம்பிராணி போடுதல் : தூண்டிவிடுதல், instigating; inciting

சாறு பிழிதல் : வேலை மிகுதி முதலியவற்றால் வருத்துதல், oppressing (as by overworking a person)

சிட்டாய்ப் பறத்தல் : சிட்டுப் பறவைபோல விரைந்தோடிப்போதல், running or flying like a house sparrow

சிண்டு முடித்தல் : சண்டை மூட்டுதல், setting person by the ears

சிணுக்கன் : பயனற்றவன் ; worthless person (as always whining)
சிறகு முளைத்தல்: தன்னைக் காத்துக்கொள்ளும் வலி பெறுகை; being capable of maintaining oneself
சின்னா பின்னம் : கண்டதுண்டம்; pieces mangled; hacked or slashed pieces
சீட்டுக் கிழிதல் : இறத்தல் ; dying
சீட்டுக் கொடுத்தல் ; வேலையினின்று விலகக் கட்டளையிடுதல்; dismissing
சீறிப் பார்த்தல் : கோபத்துடன் நோக்குதல்; looking angrily
சீறி யெழும்புதல் : கோபித்துத் தாக்கப்போதல்; rising in rage for an attack
சுடலை ஞானம் : மயான வைராக்கியம்; vow of renunciation of worldly desires made at the sight of a burial ground and forgotten as soon as made; any momentary resolution
சுணை கெட்டவன் : மானங்கெட்டவன்; an insensible person; one who has no sense of honour
சுணையுள்ளவன் : மானமுள்ளவன் : a person with acute sencisilities
சுரண்டி விடுதல் : தூண்டிவிடுதல் ; instigating ; exciting
சுருக்குப் போடுதல் தற்கொலை செய்தல் ; committing suicide
சுருக்கு வைத்தல் : கண்ணி வைத்தல் ; laying snares ; using measures to reduce one's pride
சுழியோடல் : மனதையாராய்தல் ; penetrating the minds of men
சுற்றுமுற்றும் : எல்லாப் பக்கமும் ; all about ; all round
சூடு போடுதல் ; மனம் நோகப் பேசுதல் ; scolding so as to cause pain of mind
சூரியனைக் கண்ட தாமரை: மிகுந்த மனமகிழ்ச்சி ; முகமலர்ச்சி, excessive happiness ; glow of countenance
சூரியனைக்கண்ட பனி : விரைவாக மறைதல் ; disappearing quickly
செவிசாய்த்தல் : கேட்டல்; hearing ; inclining the ear
சோட்டைப் படுதல் : இச்சைப் படுதல், longing for something dear
சோடினைக்காரன் : கற்பனை செய்பவன். one who concocts or fabricates
சோடை பற்றுதல் : நறுங்கிப் பலனற்றுப் போதல் ; becoming stunted; unfruitful
தட்டிக் கழித்தல் : சாக்குப்போக்குச் சொல்லுதல் ; giving lame excuses
தட்டிக் கொடுத்தல் ; உற்சாகப் படுத்துதல் ; encouraging ; urging on (as by patting)
தட்டிச் சொல்லுதல் : மறுத்துரைத்தல் , contradicting ; opposing

தட்டிப் பறித்தல்: தந்திரமாய் அபகரித்தல்: அடித்துப் பிடுங்குதல்; getting by stratagem; robbing by force

தட்டி மாறுதல்: குற்றம் முதலியவற்றிலிருந்து விலகப் பார்த்தல், evading; shifting a fault upon another giving one the slip

தட்டி விடுதல்: உற்சாகப் படுத்துதல், cheering up by patting; encouraging

தட்டுண்டுபோதல்: தடைப்படுதல்; கலங்குதல்; being thwarted; failing (as an expected good); being upset

தடம் போடுதல்: கெடுக்க வழிதேடுதல்; contriving another's ruin

தடவிக் கொடுத்தல்: உற்சாகப் படுத்துதல்; encouraging

தடி போடுதல்: இடையூறு செய்தல்; raising objections; putting obstacles in the way

தடை பண்ணுதல்: இடையூறு செய்தல்; hindering; interposing obstacles

தடையறுத்தல்: இடையூறு விலக்குதல்; obviating or removing difficulties

தண்ணீர் காட்டுதல்: ஏமாற்றுதல்; deceiving; overreaching (as showing water without allowing one to drink)

தரைப்படுதல்: கீழே வீழ்தல்; falling on the ground; prostrating

தரைப்படுத்துதல்: தோற்கச் செய்தல்; making one fall flat on the ground; defeating

தலை கவிழ்த்தல்: நாணம் முதலியவற்றால் தலை சாய்த்தல்: hanging down one's head (as through shame, discomfiture etc)

தலை காட்டுதல்: பலருங்காண வெளிவருதல்; appearing in public

தலைகீழாய் நிற்றல்: பெருமுயற்சியெடுத்தல், taking pains

தலை கொடுத்தல்: பிறரது ஆபத்துக் காலங்களில் தன் உயிர் பொருள் களின் கேடுகளை நோக்காமல் உதவிபுரிதல்; helping another in an emergency even at one's own risk

தலை கொழுத்தல்: அகங்கரித்தல்; having a swollen head

தலை சாய்தல்: வணங்குதல்; bowing one's head in reverence

தலை சீவுதல்: தலைமயிர் வாருதல்; combing the hair

தலை தட்டுதல்: அடக்குதல்; putting down

தலை தடவுதல்: வஞ்சித்துக் கெடுத்தல்: ruining a person by deceit

தலை தடுமாற்றம்: பெருங்குழப்பம்; utter confusion

தலைதெறிக்க: பொறி கலங்கும்படி, headlong; impetuously

தலை நிமிர்தல்: நிலை மேம்படுதல், improving in circumstances

தலைப்போடுதல்: மேற்கொள்ளுதல், engaging in; taking on oneself

தலை பணிதல்: வணங்குதல், bowing one's head

தலை மறைதல்: ஒளித்துக்கொள்ளுதல், being concealed

தலை முழுகுதல்: நிலை கெடுதல், being ruined utterly

தலைமேற்கொள்ளுதல்: பொறுப்பை ஏற்றல், undertaking responsibility

தலையணை மந்திரம்: மனைவி கணவனுக்கு இரகசியத்திலோதும் மந்திரம், curtain lectures

தலையழிதல்: அடியோடு கெடுதல், being ruined utterly

தலையளித்தல்: காத்தல், saving; protecting

தலையாட்டிப் பொம்மை: எதற்கும் இணங்கி நடப்பவன், a servile person

தலையால் நடத்தல்: பெருமுயற்சி செய்தல், putting forth great efforts

தலையிடுதல்: அனாவசியமாகப் பிறர் காரியத்திற் புகுதல், meddling; interfering

தலையிலடித்தல்: அநியாயஞ் செய்தல், doing injustice (as in offering on absurdly low price)

தலையிற்போடுதல்: உத்தரவாதமாக்குதல், பழிசுமத்துதல், making responsible, imputing blame, accusing

தலையுடைத்தல். பெரும் பிரயாசம் எடுத்தல், taking great trouble (as breaking the head over a work)

தலையெடுத்தல்: இழந்த நிலையைத் திரும்ப வடைதல், recovering (as a lost position)

தலையைத் தடவுதல்: ஏமாற்றிப் பொருளைப் பெற்றுக்கொள்ளுதல், cheating a person out of his money

தலை வணங்குதல்: நமஸ்கரித்தல், lowing the head, doing homage

தலைவாங்குதல்: சிரச்சேதஞ் செய்தல்; beheading

தவண்டையடித்தல்: வறுமைப்படுதல்; being in straits

தவழ வாங்குதல்: மிகுதியாக வேலைகொடுத்து ஒருவனை வாட்டுதல்; making a person weary by overwork

தவிடு பொடியாதல்: நிலை குலைதல்; being ruined beyond recovery

தள்ளம் பாறுதல்: பெறுங் கலக்கத்திலிருத்தல்; being in perturbation (as a family on the verge of ruin

தள்ளி வைத்தல்: உத்தியோகத்திலிருந்து விலக்கி வைத்தல்; suspending from office

தாழ்ந்து கொடுத்தல்: இணங்கிப்போதல்: yielding; accommodating

தாளம் போடுதல்: விடாது கெஞ்சுதல்; persisting in an improper request

தாளித்தல்: கர்வங்கொள்ளுதல்; boasting

திரிசங்கு சுவர்க்கம்: இடை நின்று வருந்தும் திண்டாட்ட நிலைமை, perplexity due to an unsettled condition

திறந்து காட்டுதல்: தெளிவாக விளக்குதல், explaining fully; illustrating clearly

திவட்டிக் கொள்ளையடித்தல்: அநீதியாய்ப் பொருள் திரட்டுதல், amassing money by illegal means
துண்டு விழுதல்: நட்டமாதல், ending in loss (as trade)
துறட்டி போடுதல்: தன் வசப்படுத்த முயலுதல், contriving to bring under one's control
துறை போதல்: கற்றுத் தீர்தல், acquiring a thorough knowledge (as of science)
தூக்கிப் பிடித்தல்: நுணுகிக் குற்றங்காணுதல், hunting out trivial faults
தூக்கிப் போடுதல்: திடுக்கிடுமாறு செய்தல், startling, upsetting
தூக்கிவிடுதல்: உதவி புரிந்து காத்தல், saving from danger or ruin
தூக்குவாங்குதல் / தூக்குப்போடுதல்: / தூக்கிலிடுதல்: } மரணதண்டனையாகத் தூக்கிலே போடுதல்; execution by hanging
தூபம் போடுதல்: தூண்டிவிடுதல், inciting stirring up
தொப்பி போடுதல் மயக்கி நாசஞ் செய்தல்: ruining by deceit
தொய்ய வாங்குதல்: நிலை தாழ்த்தல், reducing a person by draining away his property
தொய்ய விடுதல்: காரியத்தை நிறுத்தி வைத்தல், putting off; delaying
தோப்புக்கரணம் போடுதல்: பிறர் சொன்னபடியெல்லாம் நடத்தல், being submissive
தோள் கொட்டுதல்: வீரக் குறியாகப் புயங்களைத் தட்டுதல்; charging one's shoulders (as in defiance)
தோள் கொடுத்தல்: உதவி செய்தல், offering help in an emergency
தோள் மாற்றுதல்: பிறன் சுமையைத்தான் தூக்கி உதவிபுரிதல்; relieving another in bearing a load
தோள்மாற்றுதல்: மனம் வேறுபடுதல், changing one's mind (as changing shoulders)
நக்கவாரப்படுதல்: மிக்க வறுமையடைதல், being in pinching poverty
நக்கவாரப் பேச்சு: நம்பிக்கையற்ற பேச்சு, talk betraying want of faith
நகை கொட்டுதல்: மிகச் சிரித்தல், giggling, tittering
நகையாடுதல்: பரிகசித்தல், jeering, railing at
நசிந்து கொடுத்தல்: இணங்குதல், yielding to one, conceding
நஞ்சு பாய்ச்சுதல்: வஞ்சனை செய்தல், defrauding
நட்டுவைத்தவன்: ஆதரித்தவன், protector, guardian
நடுச்சொல்லுதல்: மத்தியத்தம் செய்தல், mediating
நடுத்தெருவில் விடுதல்: ஆதரவின்றிக் கைவிட்டுப் போதல், forsaking, leaving helpless, forsaking
நடு நிற்றல்: மத்தியத்தனுயிருத்தல்; acting as umpire

நடைப் பிணம் : பயனற்றவன்; worthless person (walking corpse)

நடை பழகுதல் : தாமதமாய் நடத்தல்; walking too slowly (as just learning to walk - used ironically

நய வஞ்சகம் : இனிமை காட்டி ஏமாற்றுகை; hypocrisy; smiling villainy

நரி குளிப்பாட்டுதல் : நய வார்த்தைகளால் ஏமாற்றுதல்; deceiving by soothing words (as a jackal)

நரியன் : சூதுள்ளவன்; crafty person

நாக்குத் தப்புதல் : நாக்குத் தப்புதல்; failing in a promise

நாக்குத் தெறிக்கப் பேசுதல் : பெரியோரை நிந்தித்தல் : insulting a superior ; speaking in an unbecoming manner

நாக்கு நரம்பற்றவன் : அளவு கடந்து பேசுதல்; a man who wags his tongue

நாக்கு நீளுதல் : விருப்பம் மிகுதல்; being greedy, having unbounded desires

நாக்குப் புரளுதல் : சொல் தவறுதல் ; failing in one's word

நாக்குழறுதல் : நாத்தழுதழுத்தல், faltering, stammering (as in ecstatic joy or other emotion)

நாக்கைப் பிடுங்கிக் கொள்ளுதல் : தவறு நடந்ததற்கு மிக்க வருத்தங் காட்டுதல் ; being extremely sorry for a mistake

நாட்கடத்துதல் : நாள் ஒற்றி வைத்தல், putting off from day to day

நாட்கணக்கு : வாழ்நாளின் எல்லை, the team of life, one's appointed days

நாடகக்காரன் : பாசாங்குக்காரன்; hypocrite, pretender

நாடி விழுதல் : தைரியமிழைத்தல், losing courage and hope; becoming down-hearted

நாத்தழும்பேறுதல் : பலமுறை சொல்லுதலால் நாவுக்குப் பழக்கமுண்டாதல்; acquiring ease in utterance (as tongue by constant recitating)

நாத்தாங்கிப் பேசுதல் : எண்ணிப் பேசுதல்; speaking thoughtfully

நிகண்டு பேசுதல் ; talking as though possessing an encyclopaedic knowledge

நீர் மனிதன் : உலக அனுபவமில்லாதவன்; person who knows nothing of the world (as if he lived in the sea)

நீறுபூத்த நெருப்பு : கோபத்தை வெளிக்காட்டாதவன்; person who conceals his anger

நுகம் புரட்டி : வேலை குழப்புபவன்; one who shirks work

நுனிப்புல் மேய்தல் : மேலெழுந்தவாரியாகப் படித்தல் ; studying or reading cursorily ; paying superficial attention to

நெஞ்சுதட்டுதல்: தற்பெருமை கூறி மார்பு தட்டுதல், patting the breast in boast

நெஞ்சு துடித்தல்: அனுதாபப்படுதல், sympathising with one in affection

நெஞ்சு புண்ணுதல்; மனம் நோதல், being distressed or wounded at heart

நெஞ்சுருகுதல்: மனமிளகுதல், melting (as heart)

நெஞ்செரிதல்: பொருமைப்படுதல், feeling envious, being jealous

நெஞ்சைப் பிளத்தல்: துக்கம் முதலியன மனத்தை வருத்துதல், breaking one's heart (as grief)

நெட்டி முறித்தல்: சோம்பல் முறித்தல், stretching oneself

நெட்டுருப்பண்ணுதல்: மனப் பாடஞ் செய்தல், learning by note

நெடுங் கயிறு: பெருந்தாமதம், long delay

நெருப்பு மூட்டுதல்: கலகம் மூட்டுதல், arousing a disturbance; instigating a quarrel

நெளிப்புக் காட்டுதல்: கர்வம் முதலியவற்ருல் அங்கசேஷ்டை செய்தல், making affected gestures

நேர்ந்துவிடுதல்: பிரார்த்தனைக்காக விலங்கு முதலியவற்றைக் கோயிலுக்கு விடுதல், offering or consecrating to a deity by a vow (as an animal)

நேர் பிடித்தல்: சமாதானப்படுத்துதல், reconciling; bringing to an agreement

நேரங் கடத்துதல்: காலம் போக்குதல், whiling away one's time; delaying

நொடி சொல்லுதல்: பரிகசித்தல், cracking jokes

நோட்டம் பார்த்தல்: மிகக் கண்டிப்பாயிருத்தல், being too strict in dealings

நோட்டம் பேசுதல்: பிறர் தன் வார்த்தைக்கு உட்படும்படி பேசுதல், over-coming by skilful speech

பகல்வெள்ளி காட்டுதல்: காண முடியாததொன்றனைக் காட்ட முயலுதல்; attempting an impossibility

பகல் வெளிச்சம்: போலி நடிப்பு; false show

பகல் வேஷம்: ஆடம்பர நடிப்பு; false outward show; pretence

பகற் கள்ளன்: பிறர்பொருளை வஞ்சித்து அபகரிப்போன்; one who takes another's property by asserting a false claim (used in reproach)

பஞ்சாய்ப் பறத்தல்: வேகமாய் நடத்தல்; நிலைகுலைந்திருத்தல்; walking fast, struggling with great difficulties

படி கட்டுதல்: உணவுக்கு வேண்டிய பணத்தைச் செலுத்துதல்; paying batta or daily allowance

படு கட்டை: உபயோகமற்ற கிழவன் அல்லது கிழவி; old person fit for nothing

படையெடுத்தல்: தன் சேனையுடன் பகைப்புலத்தின்மேற் செல்லுதல்; invading, leading a military expedition

பணம் பறித்தல்; பொருளை அபகரித்தல்; extorting money by dishonourable means

பத்தியம் காத்தல்: கொடுக்கப்பட்ட மருந்துக்கேற்ற உணவெடுத்தல்: observing a prescribed diet

பத்தியம் முறித்தல்: மருந்து பத்தியத்தைக் கெடுத்தல்; violating the dietary prescription

பத்திரப்படுத்துதல்; காவலில் வைத்துப் பாதுகாத்தல்: keeping in safe or close custody

பதம் பார்த்தல்: ஒரு காரியத்தைத் தொடங்குமுன் ஆராய்ந்து பார்த்தல்; exercising great caution before entering on a business

பதைத்து விழுதல்: ஆத்திரம் மிகுதல்; being very eager, anxious or restless

பந்தம் பிடித்தல்: தன்னலங்கருதிப் பிறரைப் புகழ்ந்து பின்தொடர்ந்து திரிதல்; praising or following blindly somebody for one's personal gain (torch-bearing)

பம்பரமாட்டுதல்: அலைக்கழித்தல்; troubling or vexing

பம்பையடித்தல்: இயைபின்றி அதிகமாய்ப் பேசுதல், indulging in irrelevant talks

பயங்கொள்ளி: அச்சமுள்ளோன், coward

பல்லவி பாடுதல்: ஒரு விஷயத்தை அடுத்தடுத்துக் கூறுதல், harping on the same theme repeatedly

பல்லிளித்தல் }
பல்லுக்காட்டுதல் } கெஞ்சுதல்: cringing, begging meanly

பல்லைப் பிடுங்குதல்: சத்தியை வாங்குதல், depriving a person of his power, influence etc.

பழி கிடத்தல்: தன் காரியம் நிறைவேற ஒருவன் வீட்டு வாயிலில் உண்ணுமற் காத்துக்கிடத்தல், starving being seated at a person's door in order to make him comply with one's demand

பழி வாங்குதல்: தீமைக்குத் தீமை செய்தல், wreaking vengeance, avenging

பறந்தடித்தல்: கவலையாற் றுரிதப்படுதல்; hurrying in anxiety

பறைசாற்றுதல்: இரகசியத்தை வெளிப்படுத்துதல்; blabbering out secrets

பாய்ச்சல் காட்டுதல்: ஏய்த்தல்; tantalising

பால் பொழிதல்: செழிப்பாயிருத்தல்; being prosperous; overflowing with milk and honey

பாழ்க்கிறைத்தல்: வீணுகக் காரியஞ் செய்தல், labouring in vain
பிடி கொடுத்தல்: பேச்சு முதலியவற்றில் அகப்படுதல், committing oneself (as in speech)
பிடுங்கித்தின்னுதல்: வருத்துதல், vexing ; annoying
பிணைபோதல்: பொறுப்பேற்றுக்கொள்ளுதல், giving security
பித்தலாட்டம்: ஒன்றை மற்றென்ருகக் காட்டி வஞ்சிக்கை, fraud deception (as in passing brass for gold)
பிய்த்துக்காட்டுதல்: விளங்கும்படி தனித்தனி எடுத்துக்காட்டிச் சொல்லுதல், explaining ; analysing
பிழைப்புக் காட்டுதல்: சீவனவழி காண்பித்தல், providing means of subsistence

பின்காட்டுதல்
பின்வாங்குதல்
பின்னிடுதல்
} தோற்ருேடுதல்: retreating (as in battle)

பின்செல்லுதல்: கொஞ்சுதல்; entreating ; cringing
புகுந்து பார்த்தல்: ஆழ்ந்து நோக்குதல், looking into a thing carefully ; scrutinising
புத்தி படித்தல்: அறிவு சம்பாதித்தல், learning wisdom ; acquiring knowledge
புத்தி படிப்பித்தல்: சிட்சித்தல், correcting; chastising
புத்தியூட்டுதல்: அறிவு புகட்டுதல், giving advice
புது நாணயம்: பழைய வழக்குக்கு மாறுபட்ட வழக்கு: an innovation
புதுப் பழக்கம்: பழக்கமில்லாதவன் செயல், unaccustomed effort (as of a novice)
புதுமை காட்டுதல்: அறியாததுபோற் காட்டிக்கொள்ளுதல்; pretending ignorance
புரட்டியடித்தல்: உண்மையை மறுத்தல்; denying a fact; telling lies boldly
புரட்டுருட்டு: தந்திரச் செயல்; subterfuge
புரி முறுக்குதல்: கோள் சொல்லுதல்: carrying tales; back-biting
புறச்சுவர் தீற்றுதல்: அகத்தூய்மையின்றிப் புறத்தில் ஒழுங்கானவர் போல் நடத்தல்; being scrupulous in external conduct while being wicked at heart.
பூசிப் புணர்த்துதல்: சந்தனம் பூசி அணிகளையணிதல்; besmearing with sandal and adorning with jewels
பூசி மெழுகுதல்: குற்றத்தை மறைக்கப் பார்த்தல்; slurring over a fault, crime or defect

பூசை கொடுத்தல்
பூசை போடுதல்
} பலமாக அடித்தல்; flogging

பெயர் போதல்: பிரமலமாதல்; being famous
பெயரெடுத்தல்: பிரசித்தமாதல்; getting a name
பேடிசங் காட்டுதல்: மாய் மாலஞ் செய்தல்; playing the hypocrite
பேய்க் கூத்து: குழப்பம்; confusion
பேர் பெறுதல்: புகழ்பெறுதல்; being famous
பொங்கிவழிதல்: செல்வம் பெருகுதல்; overflowing (as wealth)
பொடி வைத்தல்: தந்திரமாய்ப் பேசுதல்; speaking cunningly or deceitfully
பொதியவிழ்த்தல்: தன் வரலாறு விரித்தல்; beginning one's tale
பொருட்படுத்துதல்: மதித்தல்; esteeming; making important
மட்டந் தட்டுதல்: கருவமடக்குதல்; bringing down another's pride
மனம் பொங்குதல்: சினங் கொள்ளுதல்: being enraged
மார்பு தட்டுதல்: குறித்த ஒரு துறையில் தான் மேம்பட்டவனென்பதைக் குறிப்பிக்குமாறு மார்பைத் தட்டுதல்; boasting of one's powers in a particular line (as by striking the chest)
முகங் கடுத்தல்: கோபம் வெறுப்பு முதலியவற்றின் குறியாக முகத்திற் கடுமை தோற்றுவித்தல், setting one's face in anger, frowning
முகங் கருகுதல்: கோபம் முதலியவற்றால் முகங் கருகுதல், growing dark in one's face (as from anger etc.)
முகங் கவிழ்தல்: நாணம் முதலியவற்றால் தலை குனிதல், bending down one's face (as when put to shame or disgrace)
முகங் காட்டுதல்: காட்சி கொடுத்தல், appearing; assuming a visible form
முகங் குருவுதல்: துன்பத்தால் முகப்பொலிவை இழத்தல், having a sorrowful countenance
முகங் கொடுத்தல்: இன்முகங்காட்டுதல், showing a kindly face
முகங் கோணுதல்: முகத்தில் வெறுப்புக் குறி காட்டுதல், indicating disaffection by one's countenance
முகத்திலடித்தல்: நேரே நிந்தித்தல், abusing or reproaching another to his face
முகம் புதைத்தல்: முகத்தை மூடுதல், covering one's face with the hands
முகம் வைத்தல்: முகங்காணல், gathering (as the head of a boil)
முகமலர்தல்: முகப் பொலிவு கொள்ளுதல், wearing a cheerful countenance
முகமறிதல்: அறிமுகமாதல், being acquainted with
முக முறித்தல்: தாட்சணியமின்றித் துன்புறுத்தல், wounding one's feelings; offending
முகமுறிதல்: மனம் நோதல், being offended

முட்டிக்கொள்ளுதல் : கோபம் துக்கம் முதலியவற்றால் தலையை மோதிக் கொள்ளுதல், hitting or dashing one's head (as in despair or in anger)
முட்டுக்கட்டை : தடையாக இருத்தல், stumbling block
முடைப்படுதல் : நெருக்கடி உண்டாதல், being in straits
முயற்கொம்பு : இல்லாத பொருள், something not in existence
முறுக்கிவிடுதல் : தூண்டிவிடுதல்,inducing; instigating
முறைத்துப் பார்த்தல் : ஏற விழித்து நோக்குதல், staring
முறைப்படுதல் : முறையிடுதல், complaining
மூக்கறுத்தல் : அவமானஞ் செய்தல், putting one to disgrace
மேற்பூச்சு : வெளிவேடம், outside show
வஞ்சந் தீர்த்தல் : பழி தீர்த்தல், taking revenge
வயிற்றிலடித்தல் : சீவனத்தைக் கெடுத்தல், putting an end to one's livelihood
வயிற்றைக் கட்டுதல் : உண்ணாது மிச்சம் பிடித்தல், saving without eating well
வயிற்றைக் கலக்கல் : பயமடைதல், being frightened
வயிறு கழுவுதல் : அரும்பாடுபட்டு உணவு தேடிச் சீவித்தல், managing with great difficulty to get food and live, eking one's livelihood
வயிறு குளிர்தல் : திருப்தியடைதல்; being refreshed (as by food); being satisfied
வயிறெரிதல் : பொறாமை கொள்ளுதல்; being envious, being jealous
வரம்பு பண்ணுதல் : சரிக்கட்டுதல்; adjusting, setting right
வல்லடி வழக்கு : நியாயமின்றிப் பலத்தை உபயோகிக்கை; unjustifiable use of force
வலைப்படுதல் : சூழ்ச்சிக்குட்படுதல்; being cheated by a trick
வலை வீசுதல் : வசப்படுத்த முயலுதல், trying to ensnare a person
வளையம் போடுதல் : கெட்ட நோக்கத்துடன் ஒருவனைச் சுற்றித்திரிதல்; hovering round a person with bad motives
வாய்க் கொழுப்பு : மதியாப் பேச்சு; respectless talk, arrogance
வாய் குளிரப் பேசுதல் : பயனின்றி இனிமையாகப் பேசுதல்; speaking nicely without rendering any help
வாயாடி : வாய்ச் சாதுரியமாகப் பேசுபவன், one who talks tactfully and wins over people
வாயில் மண் போடுதல் : தீமை விளைத்தல்; doing great harm; causing destruction

வாயில் மண் விழுதல்: முற்றுங் கெடுதல்; destruction in entirety; wholesale loss

வாரப் படுதல்: உருக்கங் கொள்ளுதல்; showing mercy; pitying

வால் முளைத்தல்: சேட்டை செய்கை; being mischievous

வால் முறுக்குதல்: தூண்டி விடுதல்; provoking, irritating (as an animal by twisting its tail)

வால் வைத்தல்: மிகுத்துக் கூறுதல்; exaggerating

வாலாட்டுதல்: வீண் பெருமை காட்டுதல்; putting on airs

விட்டுக் கொடுத்தல்: இணக்கம் காட்டுதல்; showing conciliation

விழலுக்கிறைத்தல்: பயனற்ற முயற்சி; useless undertaking

# உவமைச் சொற்றொடர்கள்

மக்கள் ஒருவரோடொருவர் உரையாடும்போதும் - ஏதேனும் ஒரு பொருள் பற்றி எழுதும்போதும் - இலகுவாக விளங்க வைப்பதற்காகவோ அழகாக எடுத்தோதவேண்டும் என்பதற்காகவோ உவமைகளை எடுத்தாண்டு துலங்க வைப்பது வழக்கமாகும். சாதாரண உரையாட்டு வேளைகளிலன்றி வசன நடையிலும் செய்யுள் நடையிலும் உவமைகள் எடுத்தாளப்படுவதுண்டு. உதாரணமாக, "வேலியே பயிரை மேய்ந்தாற்போல" என்ற உவமைச் சொற்றொடரை எடுத்துக்கொள்வோம். பயிர்களை மிருகங்கள் அழித்துவிடாமல் வேலி அடைக்கப்படுவதுண்டு. பயிர்களுக்கு வேலி பாதுகாவலாய் இருக்கும் என்றுதான் 'வேலி' அடைக்கப்படுகின்றது. பாதுகாவலுக்காக அடைக்கப்பட்ட வேலியே பயிரை மேயத் தொடங்கினால், பாதுகாப்புக்கு இடமே இராது. "பாதுகாக்கவேண்டியவனே அழிவு தேடுகின்றமை"யை விளக்குவதற்கு - அதை இலகுவாகத் துலங்க வைப்பதற்கு - "வேலியே பயிரை மேய்ந்தாற்போல" என்ற உவமைச் சொற்றொடரை எடுத்தாளலாம். என்றும் சண்டையும் சச்சரவுமாயிருக்கும் ஒரு குடும்பத்து ஆண் பெண்களைக் குறிப்பிடும்போது, "நாயும் பூனையும்போல" என்ற உவமையை எடுத்தாண்டு விளக்குவதுண்டு. இப்படிப்பட்ட வழக்குகள் தமிழில் மிகுதியாய் உள்ளன.

## A

அச்சாணி இல்லாத தேர்போல
அடிபட்ட பந்துபோல
அடி மரம்போல
அடியற்ற மரம்போல
அடைகாத்த கோழிபோல
அணில் ஏறவிட்ட நாய்போல
அணை கடந்த வெள்ளம்போல
அத்தி பூத்தாற்போல
அந்தி அங்காடிக் கடைபோல

அந்திக் காலத் தாமரைபோல
அம்புபட்ட மான்போல
அம்பேறுண்ட மயில்போல
அரம் பொருத பொன்போல
அரிசி அள்ளுகிற காகம்போல
அருஞ்சுரத்தின் மரம்போல
அரைக் கிணறு தாண்டியவனைப்போல
அல்லித் தண்டுபோல
அழகுக்கு அழகு செய்வதுபோல
அழலருகே சேர்ந்த மலர்போல
அழுகுரல் கேட்ட அந்தணர்போல
அளிந்த புண்ணில் அம்புபட்டதுபோல
அறு கயிற்று ஊசல்போல
அறுத்த கோழி துடிக்குமாப்போல
அன்றிலும் பேடும்போல
ஆடி ஓய்ந்த பம்பரம்போல
ஆடிக் காற்றில் உதிரும் சருகுபோல
ஆடு குழை தின்றாற்போல
ஆந்தை விழிக்கிறதுபோல
ஆமை திடரில் ஏறினாற்போல
ஆலம் வித்துப்போல
ஆலையில் அகப்பட்ட கரும்புபோல
ஆவிற்கு இரு கோடுபோல
ஆளவந்தவனை அடிமைசெய்ததுபோல
ஆறிடுமேடும் மடுவும்போல
ஆற்றங்கரையின் மரம்போல
ஆற்றில் கரைத்த புளிபோல
ஆனைக் கூட்டத்திற் சிங்கம் புகுந்ததுபோல
ஆனை வாயிலேபோன கரும்புபோல
இஞ்சி தின்ற குரங்குபோல
இடி இடித்து மழை ஓய்ந்தது போல
இடி கரை வாழ் மரம்போல
இடித்த புளிபோல
இடியோசை கேட்ட பாம்புபோல

இடி விழுந்த மரம்போல
இணை பிரிந்த அன்றில்போல
இரவும் பகலும் மாறிமாறி வருவதுபோல
இருதலைக்கொள்ளி எறும்புபோல
இருநாய்க் கிட்ட எலும்புபோல
இலவுகாத்த கிளிபோல
இலைமறை காய்போல
இழிந்தவை காமுறும் ஈப்போல
இள ஞாயிறுபோல
இளந் திங்கள் வளர் நிலவுபோல
இறுல்போட்டுச் சுரு பிடிப்பதுபோல
இனம் இனத்தை நாடுமாப்போல
இனம் பிரிந்த மான்போல
உடலும் நிழலும் போல
உடும்புப் பிடிபோல
உடையவன் பாரா வேலைபோல
உப்பிருந்த பண்டம்போல
உயிரும் உடலும்போல
உயிரைப் பிரிந்த உடல்போல
உரிய காலத்திற் பெய்த மழைபோல
உலக்கைத் தேய்ந்து உளிப்பிடியானாற்போல
உலைப்படு மெழுகுபோல
உள்ளங்கை நெல்லிக் கனிபோல
உள்ளீடில்லாப் பதர்போல
உறங்கி விழிப்பதுபோல
ஊமை கண்ட கனாப்போல
எச்சிலைத் தின்று ஏப்பம் விட்டாற்போல
எட்டி பழுத்தாற்போல
எமன் கையில் அகப்பட்ட உயிர்போல
எமன் கையிலிருந்து மீண்டதுபோல
எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளினதுபோல்
எரிகிற நெருப்பிலே நெய் விட்டதுபோல
எரிகின்ற புண்ணில் ஈட்டி வைத்தாற்போல
எரிப்படு பஞ்சுபோல

எருது கோபங்கொண்டு பரதேசம் போனதுபோல
எருமை மாட்டின்மேல் மழை பெய்ததுபோல
எருவுக்குப் போனவன் இளையாளைக் கைப்பிடித்தாற்போல
எலிக்குப் பயந்து வீட்டைச் சுட்டதுபோல
எலி தலையிலே கோடாலி விழுந்ததுபோல
எலி தலையிற் கோபுரம் இடிந்து விழுந்தாற்போல
எலி பூனைக்குச் சலாம் பண்ணுவதுபோல
எலியும் பூனையும் இணைந்து விளையாடினதுபோல
எலியும் பூனையும்போல
எள்ளுக்காய் பிளந்தாற்போல
எள்ளுக்குள் எண்ணெய்போல
எறும்புப் புற்றில் பாம்பு குடிகொள்வதுபோல
ஏகாதசிக்கு மா இடித்தாற்போல
ஏதிலார் குற்றம்போல
ஏறவிட்டு ஏணியை வாங்கினதுபோல
ஏறுமடைக்கு நீர் பாய்ச்சுகிறதுபோல
ஒரு அச்சிலே உருக்கிவார்த்தாற்போல
ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல
ஒருநாட் கூத்துக்கு மீசையைச் சிரைத்தாற்போல
ஒளியைக் கண்ட இருள்போல
ஒளியைக் கண்ட விட்டிற் பூச்சிபோல
ஓடி மறைகின்ற மின்னலைப்போல
கடல் மணலைக் கணக்கிடுதல்போல
கடலிற் காயம் கரைத்ததுபோல
கடன்பட்டார் நெஞ்சம்போல
கட்டாந்தரை அட்டைபோல
கட்டுக்கடங்காக் காளைபோல
கண்கெட்ட குருடர்போல
கண்ணினைக் காக்கும் இமைபோல
கயிறு இல்லாப் பம்பரம்போல
கருடனைக் கண்ட பாம்புபோல
கரும்பு தின்னக் கைக்கூலி கேட்டாற்போல
கரை காணாத கப்பலைப்போல
கரை தட்டின கப்பல்போல

கலங்கரை விளக்கம்போல
கல்லிலே நார் உரிக்கிறதுபோல
கல்லின்மேலிட்ட கலம்போல
கல்லைக் குத்திக் கை நொந்தாற்போல
கழுதை புரண்ட களம்போல
கழுதை பொதி சுமந்தாற்போல
கனியிருப்பக் காயை விரும்பியதுபோல
கன்மேற் செதுக்கிய எழுத்துப்போல
கன்றினைக் கண்ட பசுப்போல
காகம் உறவு கலந்துண்பதுபோல
காக்கை இருக்கப் பனம்பழம் விழுந்ததுபோல
காட்டுக்கு எறித்த நிலாப்போல
காந்தம் இழுத்த ஊசியைப்போல
கார்த்திகைப் பிறை கண்டவன்போல
காலத்திற் பெய்த மழைபோல
காவிரிக்கரைப் பசுப்போல
கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல
கிணற்றுத் தவளைபோல
கிள்ளுக் கீரைபோல
கீரியும் பாம்பும்போல
குங்குமஞ் சுமந்த கழுதைபோல
குடத்துள் விளக்குப்போல
குட்டிபோட்ட நாய்போல
குருடன் இராசவிழி விழித்தாற்போல
குருட்டுப்பூனை விட்டத்திற் பாய்ந்ததுபோல
குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்புபோல
குன்றுமேலிட்ட விளக்கைப்போல
கொழுகொம்பற்ற கொடிபோல
கோடை யிடியும் மழையும்போல
சகடக் கால்போல
சந்நியாசி பூனை வளர்த்ததுபோல
சாடிக்கு வாய்த்த மூடிபோல
சாறு பிழிந்த கனிபோல
சித்திரப் பதுமைபோல

சிலையில் எழுத்துப்போல
சிவபூசை வேளையிலே கரடி புகுந்தாற்போல
சிறகு இழந்த பறவைபோல
சிறைபெறு நீர்போல
சுடச் சுடரும் பொன்போல
சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாததுபோல
சுழல்காற்றில் அகப்பட்ட துரும்புபோல
சூரியனைக் கண்ட தாமரைபோல
சூரியனைக் கண்ட பனிபோல
செவிடன் காதில் சங்கு ஊதியதுபோல
சேற்றிலே செங்கழுநீர் பூத்தாற்போல
சேற்றிலே நட்ட கம்பம்போல
சொறியக் கொடுத்த பசுப்போல
சேற்றிலே முளைத்த செந்தாமரைபோல
தங்கக் கம்பிபோல
தங்கத்தை உருக்கிவிட்டதுபோல
தலைக்கடை நாய்போல
தழல் கண்ட மெழுகுபோல
தழலிற் படுதளிர் போல
தன்கை தனக்குதவுமாறுபோல
தாமரையிலை நீர்போல
தாய்ப் பாலில்லாத குழவிபோல
திருடனைத் தேள் கொட்டினதுபோல
திருட்டுநாய்க்குச் சதங்கை கட்டினாற்போல
துரும்பு பருத்துத் தூணானாற்போல
தூங்குகிற புலியைத் தட்டி எழுப்பினதுபோல
தூண்டா விளக்குப்போல
தூண்டிலில் மீன்போல
தேரை குடித்த தோங்காய்போல
நஞ்சு தலைக்கேறியதுபோல
நண்டு கால்விரித்தாற்போல
நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்தாற்போல
நம்பினோரை நட்டாற்றிற் கைவிடுதல்போல
நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்க்கிறதுபோல

நல்ல மரத்திலே புல்லுருவி பாய்ந்ததுபோல
நாண் அறுந்த வில் போல
நாயும் பூனையும்போல
நாய்வாலைப்பற்றி நதிகடத்தல் போல
நீரிடைப் பாசிபோல
நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் அன்னம்போல
நீர்க்குமிழி போல
நீர்மேல் எழுத்துப்போல
நீறு பூத்த நெருப்புப்போல
நுனிக்கிளையிலேறி அடிமரத்தை வெட்டுவதுபோல
நுனிப்புல் மேய்ந்தாற்போல
நெய்யில்லா உண்டிபோல
பசித்துண்பவனைப் போல
பசுத்தோல் போர்த்த புலிபோல
பசுமரத்தாணி அறைந்தாற்போல
பஞ்சுப் பொதியில் நெருப்புப் பட்டாற்போல
பட்டப் பகல்போல
பட்டி மாட்டுக்குக் கட்டை கட்டினதுபோல
பருந்தின் வழி நிழல்போல
பல்லுப் பிடுங்கின பாம்புபோல
பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல
பள்ளத்து வழி வெள்ளம்போல
பறையறைந்தாற்போல
பனியை நம்பி ஏர் பூட்டினதுபோல
பனை ஏறி விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததுபோல
பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்கேபோல
பாம்பின் வாய்த் தேரைபோல
பாம்புக்குப் பால் வார்த்தாற்போல
பாலுக்குப் பூனையைக் காவல் வைத்ததுபோல
பாலுடன் கூடிய நீர்போல
பாலுந் தேனும் சேர்ந்தாற்போல
பாழுக்கிறைத்த நீர்போல்
பிஞ்சிலே பழுத்தாற்போல
பிட்டுத் தின்று விக்கினாற்போல

புது மணவறைப் பெண்போல
புதையல் காத்த பூதம்போல
புதையல் எடுத்தவனைப் போல
புலியைக் கண்ட மான்போல
புல் நுனிமேல் நீர்போல
புளியம்பழமும் ஓடும்போல
பூட்டுந் திறப்பும்போல
பூவரசின் பழுப்புப்போல
பூவும் மணமும்போல
பூவுடன் கூடிய நாரும் மணம்பெற்றாற்போல
பூனைமுன் கிளிபோல
பூனைவாய் எலிபோல
பொன்காத்த பூதம்போல
பொன்னுடை விரித்தாற்போல
மடைதிறந்த வெள்ளம்போல
மடைவாய்க் கொக்குப்போல
மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்தாற்போல
மணமுற்ற பொன்மலர்போல
மணற் சோற்றிற் கல் ஆய்வதுபோல
மணியும் ஒளியும்போல
மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியதுபோல
மண்ணின் குடம்போல
மதங்கொண்ட யானையைப்போல
மதின்மேல் ஏறின பூனைபோல
மதுவுண்ட குரங்குபோல
மத்திட்ட தயிர்போல
மலையுடன் மண்ணாங்கட்டி எதிர்ப்பதுபோல
மழை முகங்கண்ட பயிர்போல
மாரிகாலத்து மழைபோல
மின்மினி ஒளிபோல
மீகாமனில்லாத மரக்கலம்போல
முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல
முயற் கொம்புபோல
முழுப் பூசுணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல

மூட்டுப் பூச்சிபோல
மெருகிட்டதுபோல
மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவதுபோல
மொட்டைத் தலைச்சியைக் கூந்தலழகி என்பதுபோல
மோர் சுடுகிறதென்று ஊதிக்குடிக்கிறதுபோல
யானைமுன் பூனைபோல
யானைதின்ற விளாங்கனி போல
வலையிற் சிக்கிக்கொண்ட மான்போல
வளர்த்த கடா மார்பிலே பாய்வதுபோல
வளர் மதியம்போல
வறியவன் இளமைபோல
வறுத்த பயறு முளைத்தாற்போல
வாலில்லாத குரங்குபோல
வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல
வித்துக்கு விட்ட சுரைக்காய்போல
விழலுக்கிறைத்த நீர்போல
வெங்காயச் சருகுபோல
வெந்த புண்ணில் வேலெறிந்தாற்போல
வெய்யிலில் பட்ட புழுப்போல
வேலி பயிரை மேய்ந்தாற்போல

## B

அகலாதணுகாது தீக்காய்வார் போல
அங்கணத்துளுக்க அமிழ்தம்போல
அடியிலிருந்து கரும்பு தின்பதுபோல
அடியும் நுனியும் தறித்த கட்டைபோல
அடிவயிற்றில் இடி விழுந்ததுபோல
அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு போவதுபோல
அதிகாரி வீட்டில் திருடித் தலையாரி வீட்டில் வைத்ததுபோல
அம்பட்டன் குப்பையைக் கிளறுவதுபோல
அம்பு செய்து கொடுத்த கருமானை நோவதுபோல
அவசரக்கோலம் அள்ளித் தெளித்ததுபோல
அன்னநடை நடக்கப்போய்த் தன் நடையும் கெட்டாற்போல

ஆகாயத்திற் கட்டிய கோட்டைபோல
ஆடு பிடிக்கப்போய்க் கரடி அகப்பட்டதுபோல
ஆண்டிகள் கூடி மடங்கட்டினதுபோல
ஆப்பை இழுத்த குரங்குபோல
ஆயிரம் பாட்டிற்கு அடி தெரியும் என்றாற்போல
ஆயிரம் பாம்பினுள் ஒரு தேரை அகப்பட்டாற்போல
ஆற்றிற் பறிகொடுத்துக் குளத்தினில் தேடியதைப்போல
ஆனை தன் தலையில் மண்ணை வாரிப்போட்டுக்கொண்டதுபோல
இடந்தெரியாதிருக்க புதையல் எதிர்வரப் பெற்றவர்போல
இரண்டு கண்ணும் இல்லாதவனை நல்ல கண்ணன் என்பதுபோல
இரண்டு ஓடத்திற் கால் வைத்தவனைப்போல
இருப்புக் கோட்டையும் கற்கதவும்போல
இரும்புங் காந்தமும் பொருந்துந்தன்மைபோல
இரும்புத் தூணை எறும்பு அரித்தாற்போல
உட்சுவரிருக்கப் புறச்சுவர் பூசுவார்போல
உண்டில்லை யென்னுங் குமிழியைப்போல
உண்ணுதற்குத் தகுதியில்லாத வாவியில் நீர் நிரம்பியிருத்தல்
போல
உமியைக் குத்திக் கை சலித்தாற்போல
உத்திராக்கப் பூனை உபதேசம் பண்ணியதுபோல
உருள் பெருந்தேருக்கு அச்சாணிபோல
உலக்கைக் கொழுந்துபோல
உழுகிற நாளில் ஊருக்குப்போய், அறுக்கிற நாளில் அரிவாள்
கொண்டு வந்தாற்போல
உழுந்துக் குவியலுட் புகுந்த மையுருண்டைபோல
உள்ளீடில்லாப் புழையான மூங்கிற்கோல்போல
உறைமோருக்கு இடமில்லாத வீட்டில் விலை மோருக்குப்
போனாற்போல
உனக்கு உப்பிட்டுப் பின்பாட்டுப் பாடுகிற மனிதர்போல
ஊசியும் சரடும்போல
ஊத்தைப் பல்லுக்கு விளாங்காய் சேர்ந்தார்போல
ஊனெடுங்க வீறெடுங்குமாறுபோல
ஊமையும் ஊமையும் மூக்கைச் சொறிந்தாற்போல
ஊமை செய்யும் பிரசங்கத்தைச் செவிடன் கேட்டதுபோல

ஊர் கூடிச் செக்குத் தள்ளினாற்போல
ஊர்க்கடனும் உள்ளங்கைச் சிரங்கும்போல
எட்டாப்பழத்துக்குக் கொட்டாவி விட்டதுபோல
எண்ணெய்க் குடத்தைச் சுற்றும் எறும்புபோல
எலுமிச்சங்காய்க்குப் புளி ஏற்றுகிறதுபோல
எழுதுங்கோல் காணாக் கண்ணேபோல
எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்ததுபோல
எள்ளாட்டிய வழியல்லாது எண்ணெய்ப் புலப்படாவாறு போல
ஒரு நாய் குலைப்பதுகண்டு ஊர்நாயெல்லாம் சேர்ந்து குலைப்பதுபோல
ஒவ்வாக் காலத்து உயர்மரம் பழுத்த துவ்வாக்கனிபோல
ஒளிமிளிர் கற்களைப் பைம்பொனிற் பதித்தாற்போல
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குதல்போல
ஓட்டை நாழிக்குப் பூண் கட்டினதுபோல
ஓராவிற்கு இருகோடு தோன்றினாற்போல
கங்கையிற் படர்ந்தாலும்பேய்ச் சுரைக்காய் நல்லதாகாததுபோல
கடலைக் கையினால் நீந்திக் கரையேறுதல் போல
கடலிடைப் பிறந்த முத்து அக்கடலுக்குப் பயனாகாமை போல
கடல் உப்பையும் மலை நெல்லையும் கலந்தாற்போல
கடாவும் கடாவும் சண்டை போடும்போது உண்ணி நசுங்கினாற்போல
கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தாற்போல
கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறதுபோல
கண் கெட்ட பிறகு சூரிய வணக்கம் செய்வதுபோல
கண்டு மறைந்த கனவினைப்போல
கண்ணில்லாதவன் கண்ணாடியைச் சுமந்ததுபோல
கண்ணில்லார் பெற்றிழந்தாற்போல
கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டதுபோல
கத்தரிக்காய்க்கும் காலும் கையும் முளைத்தாற்போல
கரடி புற்றிலே வாய் வைத்தாற்போல
கரு இல்லாத வித்தையும் குரு இல்லாத சீடனும்போல
கருங்காலிக் கட்டைக்கு வெள்ளிப்பூண் கட்டினதுபோல
கருப்பங்கொல்லையிலே நெருப்புப் பொறி விழுந்தாற்போல

கருமருந் தறையிற் சிறுபொறி சிதறினதுபோல
கரும்பு தின்னுமல் வேம்பு தின்பதுபோல
கலப்பாலில் ஒரு துளி நஞ்சு கலத்தல்போல
கலியாணச்சந்தடியில் தாலி கட்ட மறந்தாற்போல
கழுதையைக்கட்டி ஓமம் வளர்த்ததுபோல
கற்பாறைமேல் விழுந்த மழைத்துளி சிதறுவதுபோல
கன்றைவிட்டுக் கட்டுத் தறியைப் பிடிப்பதுபோல
காகத்தின் இரு கண்ணிற் கலந்து நின்ற ஒரு மணிபோல
காடிக்குப் போய்த் தயிர் கொண்டுவந்ததுபோல
காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்துப்போல
காதலனைக் கண்ட கற்புடையாள்போல
காய் முற்றினுல் தீங்கனியாதல்போல
காலிற்பட்டது கண்ணிற்பட்டதுபோல
காற்றின்வாய்ப்பட்ட பூளைமலர்போல
காற்றுடன் நெருப்புக் கூடினுற்போல
கானலைச் சலமாய்க் கண்டதுபோல
கிண்டிவிட்டுக் கேளிக்கை பார்க்கிறதுபோல
கிளியை வளர்த்துப் பூனைகையிற் கொடுப்பதுபோல
கீழே பாம்பென்றுல் மேலே பார்க்கிறவன்போல
குடல் கூழுக்கழக் கொண்டை பூவுக்கழுவதுபோல
குடியிருக்கும் வீட்டின் கூரையைப் பிடுங்குவதுபோல
குதிரை தூக்கிப்போட்டதுமன்றி ஏறியும் மிதித்ததுபோல்
குப்பையிற் கிடந்தாலும் மாணிக்கத்தின் பெருமைகுறையாத
வாறுபோல
கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல
கும்பிட்ட கோயில் தலைமேல் இடிந்து விழுந்தாற்போல
குருடனுக்குக் குருடன் கோல் கொடுத்து வழி காட்டுவதுபோல
குருடன் கைக்கோலைப் பிடுங்கினதுபோல
குருடும் குருடும் குழி விழுந்தாற்போல
குருடும் செவிடும் கூத்துப் பார்த்தாற்போல
குருவி கழுத்திற் றேங்காயைக் கட்டினதுபோல
குலைக்கிற நாய்க்கு எலும்பைப் போட்டாற்போல
குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவதுபோல

குளத்துடன் கோபித்துக்கொண்டு கால் கழுவாமற் போனது
போல
குளம் வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல
குளவிக் கூட்டைக் கோலாற் குலேத்தாற்போல
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல
குளிர் பூஞ்சோலே வழியிருக்கக் குழியில்விழுந்தளறுபாய்தல்
போல
குள்ளனைக் கொண்டு ஆழம்பார்க்க வந்ததுபோல
குறிச்சி புக்க மான்போல
குறுஞ்சிரிப்புக்கு மருந்து சாப்பிட உள்ள சிரிப்பும்
போனுற்போல
குன்றிமணியிடத்திலும் கறுப்புண்டாயிருப்பதுபோல
கூட்டத்திற் கட்டுச்சோறு அவிழ்த்தாற்போல
கெண்டையைப் போட்டு வராலே இழுத்தாற்போல
கைக்கும் மருந்தைக் கருப்பங்கட்டியிற் பொதிந்து
அருந்தல்போல
கைப் பழத்தைப் போட்டுவிட்டுத் துறட்டுப் பழத்துக்கு
ஆசைப்பட்டதுபோல
கையாளாத ஆயுதம் துருப்பிடிப்பதுபோல
கொக்கின் தலேயில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதுபோல
சருக்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல
சிங்கத்தின் காட்டைச் சிறுநரி வளேத்தாற்போல
சிட்டுக்குருவி தலேமேல் பனங்காயைக் கட்டுவதுபோல
சிறிய கண்ணுடியில் பெரிய மலேயைக் காண்பதுபோல
சீதேவியுடன்கூட மூதேவி பிறந்தாற்போல
சும்மாவந்த மாட்டைப் பல்லேப் பிடித்துப் பார்ப்பதுபோல
சூரியனைப் பார்த்து நாய் குலேத்தாற்போல
செங்கதிரின்முன் மதியந் தேசடங்கி நிற்றல்போல
செறித்திடுஞ் சிறையினை உடைத்திடும் புனல்போல
சோற்றைப் போட்டுத் தொண்டையை நெரிப்பதுபோல
ஞாயிறில்லேயெனும் பிறவிக் குருடன்போல
தடங்கரை போர்த்து வெள்ளத்தை விடுதல்போல
தண்ணீரில் தத்தளிப்பவனுக்கு சிறு துரும்பு கிடைத்தாற்போல
தண்ணீரும் பாசியும் கலந்தாற்போல

தரித்திரனுக்குப் புதையல் கிடைத்தாற்போல
தவிடு தின்பவனை அமுது தின்னச் சொன்னாற்போல
தாடிபற்றி எரியும்போது சுருட்டுக்கு நெருப்புக்
கேட்டதுபோல
தாமரைப் பொய்கையிற் புகும் தனிப்பேடைபோல
தாயின் துணையை எதிர்நோக்கும் குழந்தையைப்போல
தாயுடன் பிறந்த மாமனிடத்திற் குலம்கோத்திரம்
பேசியதுபோல
தானாய் வருகிற சீதேவியைக் காலால் உதைத்துத்
தள்ளுவதுபோல
திங்கள் கண்ட கடல் பொங்குவதுபோல
தீயினாற் சூழப்பட்ட வீடுபோல
துப்பாக்கி வயிற்றிற் பீரங்கி பிறந்தாற்போல
தும்பைவிட்டு வாலைப் பிடிப்பதுபோல
தூண்டில் நுனி மச்சத்துக்கு ஆசைப்பட்டு உயிரிழக்கும்
மீன்போல
தூண்டிற்காரனுக்குத் தக்கைமேற் கண்போல
தென்றல் முற்றிப் பெருங்காற்றானாற்போல
தேடிப்போன மருந்து காலில் அகப்பட்டதுபோல
தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும் கல்விபோல
நடுஊரில் ஒரு நன்மரம் பழுத்தாற்போல
நடுக்கடலிற் கப்பல் உடைந்ததோடு தெப்பமும்
உடைந்தாற்போல
நடைத் தூக்கங் கொண்டவன்போல
நண்பகல் வெய்யிலிற்பட்ட புழுப்போல
நண்பனுக்கு நண்பன் கண்ணாடிபோல
நல்ல பால் கலத்தீமையாற் கெட்டுப்போவதுபோல
நறுநெய்யுறு குடத்து எறும்பு நண்ணல்போல
நறுந்தாதுண்டு நயனில்காலை வறும்பூத்துறக்கும் வண்டுபோல
நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைபோல
நாடு மகவுக் குதவும் நற்றாய்போல
நாயும் கழிச் சட்டியும்போல
நாராசத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றினாற்போல
நில நலத்தால் நந்திய நெல்லேபோல

நிறை பொதியிலே கழுதை வாய்வைத்தாற்போல
நீள்வெயிற் கானத்தில் நல்ல நீர்த்தடம்போல
நுணலுந் தன் வாயாற் கெடுவதுபோல
நூலில்லாமல் மாலை கோத்துததுபோல
நெடுஞ்சுழிப்பட்ட நாவாய்போல
நெருப்பிடை நெய் சொரிந்தாற்போல
நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற்போல
நெல்லினின்றும் பதரை வேறாகப் பிரிப்பதுபோல
நெற்குத்தி யுண்ணாது உமிக்குத்திக் கைசலித்தாற்போல
நோயாளிக்கு ஆசை வார்த்தை சொன்னாற்போல
நோயாளி தலைமாட்டில் பரிகாரி இருந்து அழுதாற்போல
பசித்த கணக்கன் பழங்கணக்குப் பார்த்தாற்போல
பசியாதிருக்க மருந்துகொடுக்கிறேன் பழையது இருந்தாற் போடு என்பதுபோல
பசியாவரம் படைத்த தேவர்போல
பசுவைக்கொன்று செருப்புத்தானம் செய்தாற்போல
பச்சை மஞ்சளைப் பிளந்தாற்போல
பச்சைமரத்திற் பேரிடி விழுந்தாற்போல
படிப்பில் ஆசைவைத்தவன் பாடத்தைப் பாராட்டுவதுபோல
படைகொண்டார் நெஞ்சம்போல
பட்டப் பகலிலே விண்மீன் கண்டாற்போல
பரிதி கண்ட பங்கயம் போல
பருத்தி புடவையாய்க் காய்த்ததுபோல
பலாப்பழத்தில் மொய்த்த ஈப்போல
பழங்கள் பெருக்கப் பெருக்கக் கிளைகள் தலைகுனிவதுபோல
பழம் பழுத்தாற் கொம்பிலே தங்காததுபோல
பழைய தரித்திரனுக்குப் பணம் கிடைத்தாற்போல
பள்ள உவர்க்கடலில் பாய்ந்தோடும் வெள்ளம்போல
பறக்கிற பட்சிக்குச் சிறகு ஒடிந்தாற்போல
பறைபட வாழா அசுணமாப் போல
பனையிலிருந்து விழுந்தவனை பாம்பு கடித்ததுபோல
பாசிலைப் பந்தர் வேய்ந்தாற்போல
பாச்சி பாச்சி என்றழும் பாலர்க்குப் பூச்சி பூச்சி என்றதுபோல
பாய்மரச் சுற்றிலகப்பட்ட காக்கைபோல

பாம்புக்கு மருந்துகேட்கத் தேளுக்கு மந்திரித்ததுபோல
பாலுனுங் குழவி கையிருப்ப மல்யுத்தஞ் செய்பவர்போல
பாலைப் பருகாது கள்ளைக் குடிப்பவர்போல
பாழடைந்த பழங்குட்டிச் சுவர்போல
பிடித்த கொம்பும் ஒடிந்து மிதித்த கொம்பும் ஒடிந்தார்போல
பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்த கதைபோல
பிறர் மண் கொள்வான் சென்று தம் மண்ணும் இழத்தல்போல
புதுக் குடத்தில் வார்த்த தண்ணீர்போல
புயற்காற்றினல் அசைக்கப்படாத குன்றுபோல
புரையற்ற பாலினுள் நெய் கலந்தாற்போல
புலி முழக்கங்கேட்ட புல்வாய்போல
புலியும் பசுவும் பொருந்தி வாழ்ந்தாற்போல
புள்ளுக்குப் புன்னை இருப்பிட மாயினற்போல
புற்றிலே ஈசல் புறப்பட்டது போல
பூமி ஆளலாமென்று மனப்பால் குடிக்கிறதுபோல
பூவாதே காய்க்கும் மரம்போல
பூவினிற் பொலிகின்ற கந்தம்போல
பெருங்காற்று இடிகரைபோல
பெருங்காய மிருந்த குடுக்கை வாசனை போகாததுபோல
பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமண போசனம் செய்வித்தது
போல
பொள்ளற் குடத்தில் வார்த்த தெள்ளமுதம்போல
பொறியறு பாவைபோல
பொற்குன்றஞ் சேர்ந்ததோர் காக்கைபொன்னுதல்போல
பொன்னுற் செய்த பூங்கொடிபோல
பொன்னின் நலம் சுட்டறிவதுபோல
பொன்னின் விளக்கானுலும் தூண்டுகோல் வேண்டுவதுபோல
போர்முனையில் ஆயுதந் தேடுகிறதுபோல
போன சனியனைத் தாம்பூலம்வைத்தழைத்தாற்போல
போன சுரத்தைப் புளியிட்டு அழைத்தாற்போல
மகத்திற் புக்கதோர் சனிபோல
மட்குடத்து உள நீர் கசிவதுபோல
மயிர் சுட்டுக் கரியாகாததுபோல
மயிலைக்கண்டு வான்கோழி ஆடினற்போல

மரபு அறியாதவன் மணம்பேச வந்தாற்போல
மலைப்பாம்பு புரள்வதுபோல
மலையாடு மஞ்சுபோல
மலையும் மலையும் மோதினாற்போல
மலைமிசை விளக்குப்போல
மல்லாந்து படுத்து எச்சில் உமிழ்வதுபோல
மின்னொளி தோன்றி மறைந்தாற்போல
மீனை மீன் விழுங்கினாற்போல
முக்கால் பணத்துக் குதிரை மூன்று பணத்துப்புல் தின்றாற் போல
முயலை விட்டுக் காக்கைப்பின் போனதுபோல
முட்பூவின் தேன்போல
யானைமேல் போகிறவனைச் சுண்ணும்பு கேட்பது போல
வலையினின்றும் தப்பியோடும் மான்போல
வாடு பயிர்க்கு வருமா மழைபோல
வாய் காய்ந்த புலி ஆள்மேலே விழுந்ததுபோல
வாழுகிற பெண்ணைத் தாயார் கெடுத்ததுபோல
விழுகிற சுவரிலே கைவைத்தாற்போல
விளக்கிலே மொய்த்த விட்டில்போல
விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சம் கட்டியதுபோல
வீட்டைக் கட்டிக் குரங்கைக் குடிவைத்ததுபோல
வெண்கலக் கடையில் மதயானை புகுந்தாற்போல
வெறுவாய் மெல்லுபவர்களுக்குச் சிறிது அவல அகப்பட்டது போல

## C

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல
அடுத்தது காட்டும் பளிங்குபோல
அம்மி துணையாக ஆற்றில் இறங்கியதுபோல
அரங்கின்றி வட்டாடியதுபோல
அறத்தாற்றின் வழங்காதான் ஆக்கம்போல
அற்ற குளத்து அறுநீர்ப் பறவைபோல
ஆடுங் கறங்குந் திரிகையும்போல

5B
1-10-53



இருதலைப் புள்ளின் ஒருயிர்போல
இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல்போல
உடுக்கை இழந்தவன் கைபோல
ஊருணி நீர்நிறைந்தாற்போல
எரி முன்னர் வைத்தூறுபோல
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பதுபோல
ஓசையவிந்தபின் ஆடுதுமென்றாற்போல
கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டினாற்போல
கரதலாமலகம் போல்
கரும்பிருக்க இரும்பு கடித்து எய்தாற்போல
கலனழிந்த கைம்மையார் பெண்மை நலம்போல
கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்று.
கறவை நிற்க மலடுகறந்து உளந்தளர்தல்போல
களை பறியா விளைநிலம்போல
குன்று முட்டிய குரீஇப்போல
கூத்தாட்டவைக் குழாம்போல
கூற்றத்தைக் கையால் விளித்ததுபோல
கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்புப்போல
கொடுக்கில்லாதவனைப் பாரியே என்பதுபோல
கொழுச் சென்றவழித் துன்னூசி செல்லுமாறுபோல
சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை மலர்போல
செங்கமலப் போதலர்ந்த செவ்விபோல
சேக்கைமரன் ஒழியசேண் நீங்கு புள்போல
தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன்போல
தாரகை நடுவண் தண்மதிபோல
திரிசங்கு சுவர்க்கம்போல
துரும்பு பற்றிக் கடல் கடக்குந் துணிபு போல
தொடு மணற்கேணி நீர் சுரப்பது போல
தொட்டனைத் தூறு மணற்கேணிபோல
நடுவூருள் நச்சுமரம் பழுத்தாற்போல
நரியைக் குதிரை செய்வது போல
நவில்தொறும் நூல் நயம்போல
நாய்க்குத் தவிசிட்டாற்போல
நாய் பெற்ற தெங்கம் பழம்போல

நீரின்றி அமையாத உலகம்போல
நீர்வழிப்படூஉம் புணைபோல
நுனிக்கொம்பேறி அஃதிறந் தூக்கினாற்போல
நெடுஞ்சுரத்து நின்ற தனிமரம்போல
பகலவன் முன்னர்ப் பாயிருள் மாய்ந்தாற்போல
பசுவால் பற்றி நதிகடத்தல்போல
பயன்மரம் உள்ளூரிற் பழுத்தாற்போல
பழந் தேர் வாழ்க்கைப் பறவைபோல
பழுமரம் நாடிய பறவைபோல
பன்மீ னடுவட் பான்மதிபோல
பாலிற்படு நெய்போல
பால் நினைந்தூட்டுந் தாய்போல
பாவிடை யாடு குழல்போல
புடத்தின் மாற்றுயரும் பொன்னேபோல
புனையா ஓவியம்போல
மண்மாண் புனை பாவைபோல
மோப்பக் குழையும் அனிச்ச மலரைப்போல
வன்பாற்கண் வற்றல் மரந் தளிர்த்தற்று
விச்சதின்றி விளைவு செய்வதுபோல
விரிவெயிலில் விளக்கொளிபோல
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறுபோல
விளக்கொளிக்கு ஆசைப்பட்ட விட்டில்போல
வெள்ளிடை மலைபோல
வையத் திறந்தாரை எண்ணினாற்போல

## பயிற்சி

A. பின்வரும் மரபுச் சொற்றொடர்களைப் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—

(i) அடிவருடல், அந்தரத்திலே நிற்றல்,
இடறுகட்டை, இருதலைக்கொள்ளி,
இலவுகாத்த கிளி, இல்லிக்குடம்,
உடும்பு நாக்கன், ஒட்டை வாயன்,
கட்டாக் காலி, கயிறு திரித்தல்,

(ii) கல்லில் நாருரித்தல், கன்னிப்போர்,
கிணற்றுத் தவளை, குதிரைக்கொம்பு,
கையைக் கடித்தல், மலையுடைத்தல்,
நடைப் பிணம், பந்தம் பிடித்தல்,
புது நாணயம், வயிற்றிலடித்தல்,

பின்வரும் உவமைச் சொற்றொடர்களைப் பொருள்விளங்குமாறு வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—

1. அன்றிலும் பேடும்போல
2. உப்பிருந்த பாண்டம் போல
3. எறும்புப் புற்றில் பாம்பு குடிகொண்டதுபோல
4. குட்டி போட்ட நாய்போல
5. தாமரையிலை நீர்போல
6. நீர்க் குமிழிபோல
7. புளியம் பழமும் ஓடும்போல
8. வளர்த்த கடா மார்பிலே பாய்ந்ததுபோல
9. ஆப்பை இழுத்த குரங்குபோல
10. கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்ததுபோல
11. குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல
12. நூலில்லாமல் மாலை கோத்ததுபோல
13. பரிதிகண்ட பங்கயம்போல
14. விளக்கிலே மொய்த்த விட்டில்போல
15. வெள்ளிடை மலைபோல.

68376
P31.J
1125.1